# முகவுரை

*ஆஹா என்ன பொருத்தம்! ஆஹா என்ன பொருத்தம்!*

*என்று கண்டு உணர்ந்ததை இங்கு உங்கள் முன்னே படைக்கின்றேன். ஆ ஆ என்று ஆராய்ந்தருளேலோர் எம்பாவாய் என்ற திருப்பாவை வரிகளுக்கேற்ப நீங்களும் இதை ஆராய்ந்து உள்வாங்கி இயல்பை பொருந்தி திருஅருட்பா வரிகளில் உரை காணவும்.*

*சாமானியன் ஒவ்வொருவரும் சாமர்த்தியமாக செயல்பட்டு சாதனை புரிய உங்கள் திருநக்ஷத்திரம் மட்டுமே துணை செய்யும். எனவே இந்த இயற்கை விதியின் படி தகுந்த முறையில் திருப்பாவை முப்பது பாசுரங்களில் 28 நக்ஷத்திரங்களும் பொருந்தி, பொலிந்து உள்ளது. திருஅருட்பா வழிநின்று பொழிப்புரையை இந்த புத்தகத்தில் சமர்ப்பிக்கின்றேன்.*

*நட்சத்திரத்திற்கான காயத்திரி பாடல்கள், கவிதைகள் மற்றும் விருட்சங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இதை படிக்க படிக்க உங்கள் தேடல் தொடங்கி தொடர்ந்து பூரணத்தை நோக்கிச் செல்லும். மேலும் விருட்சங்கள் எதார்த்தமான பரிகாரத்தை தரவல்லது.*

*ஒவ்வொரு நட்சத்திர நாட்களிலும் நாம் செய்ய வேண்டிய யோக முத்திரைகள், மூலமந்திரங்கள், எதிர்பார்ப்புகள், ராகங்கள் பட்டியலில் காணலாம்.*

*நன்றி,*

*என்றும் அன்புடன்*

**சாயி பரணி. பிராபாகரன் .ஆர்**

*கைபேசி: **9842420876***

*மின்னஞ்சல்.* jhohumm@gmail.com

உ

ஆண்டாள் அருளிச் செய்த

# திருப்பாவையில் திருநட்சத்திரங்களின் இயல்புகள்

## நட்சத்திரங்களின் பலன்களின் விளக்கவுரை

★ **கணபதி** ★



பாதம் 1 : கணபதியம்
பாதம் 2 : வைணவம்
பாதம் 3 : சாக்யம்
பாதம் 4 : சைவம்
பாதம் 5 : ஜோதியம்
பாதம் 6 : கௌமாரம்

தத்புருஷாய வித்மஹே
வக்ரதுண்டாய தீமஹி
காரண பூரண தீமஹி
தன்னோதந்தி ப்ரசோதயாத்

பரசிவமே சின்மயமே
பூரணமே எம்திவ்யமே
சிவபோக அதி பாக்கியமே
பரம நிதிய ப்ரசோதயாத்

ஜோதிமயமே சோபிதமே
ஆதியான திருவருள் உருவே
தனிப்பெருங் கருணையானவனே
இணையடி தொழுதோம் நமோ நமோ

ஓம் சிவாய மே நம சிவாய மே
த்ரயம்பகாய மே சாயி தேவாய ஓம்

## பாசுரம் - 24 - ஆறுவழிபாடுகள்

அன்று இவ்வுலகம் அளந்தாய் அடி போற்றி! - ஜோதியம்
சென்றங்குத் தென்னிலங்கை செற்றாய் திறல் போற்றி! - வைணவம்
பொன்றச் சகடம் உதைத்தாய்! புகழ் போற்றி! - சாக்யம்
கன்று குணிலா எறிந்தாய்! கழல் போற்றி! - சைவம்
குன்றுக்குடையாய் வெடுத்தாய் குணம் போற்றி! - கணபதியம்
வென்று பகை கெடுக்கும் நின்கையில் வேல் போற்றி! - கௌமாரம்

*என்றென்றும் உன் சேவகமே ஏத்திப் பறை கொள்வான்*
*இன்று யாம் வந்தோம் இரங்கேலோர் எம்பாவாய்.*

## பரசிவம், சின்மயம், பூரணம், சிவபோக பாக்கியம், பரம நிதியம்.

*பரசிவம் :- பரசிவம் என்பது சிவலிங்கத்தை உணர்த்துகிறது. இந்த சிவலிங்க காட்சி மஞ்சளில் நாம் பிள்ளையார் பிடித்து வெற்றிலையில் வைக்கும் பொழுது பரசிவம் தென்படுகிறது.*

*சின்பமயம் :- சின்மயம் என்பது அனைவரும் அறிந்த முத்திரையாகும். ஜீவாத்மாவான சுட்டு விரல் பரமாத்மாவான கட்டை விரலை தொடும். இந்த சின்மயம் பிள்ளையார்க்கு எப்பொழுது பொருந்துகிறதென்றால், நாம், தோப்புக்கரணம் போடும் பொழுது காதருகில் கட்டை விரலும் சுட்டு விரலும் சின்மயத்தையே அரங்கேற்றுகிறது.*

*பூரணம் :- பூரணம் என்பது யாதெனில் மோதகத்தில்வரும்பிள்ளையாருக்கானபூரணமேயாகும். பூரணமெனும் முழுமையிலிருந்து சிறிது எடுத்தாலும், சேர்த்தாலும் அது பூரணமே! பிள்ளையாரே!*

*சிவபோக பாக்கியம் :- சிவபோக பாக்கியமென்றால் சிவனின் அருள்பெற்ற கெஜமுகத் தோற்றமேயாகும். பிள்ளையார் சக்தியின் மைந்தனே! ஆனால் அதுமுண்டமாகி கிடக்கும் போது சிவன் அருளால் கஜமுகத் தோற்றம்பெற்று சிவபோக பாக்கியமாக கணபதி உலகிற்கு வரநேர்ந்தார்.*

*பரமநிதியம் :- பரமநிதியம் என்றால் அருள் நிதி*

அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை. பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை. எனவே இவ்வுலகத்தில் பொருள் வேண்டி லஷ்மி பூஜை; ஆனால் அருள் வேண்டி கஜபதி பூஜை.

மேலும் இந்த கஜபதி பூஜை, கணபதி பூஜை, அனைத்து தேவைகளுக்கும் முதலாவதாகும். எனவே இது பரமநிதியத்தை அளிக்கவல்லது. பரமநிதியமே நீங்காத செல்வம்.



சிங்கப்பூரில் நட்சத்திரப் பயணம்



**ஆம்** - ப்ராம்மிணி
**இம்** - மகேஸ்வரி
**ஹூம்** - கௌமாரி
**ஹ்ரூம்** - வைஷ்ணவி
**க்லூம்** - வாராகி
**ஐம்** - இந்திராணி
**ஹௌம்** - சாமூண்டி

காயத்ரி மந்த்ரம்

ஓம் பூர் புவ ஸ்வஹ
தத்சவிதுர் துரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
தியோ யோநஹ ப்ரசோதயாத்

ஓம் ஓம் ஓமென
மூவுலகம் போற்றிட
மங்கா தீபம் ஏற்றியே
மன இருளை நீக்குவோம்

நீக்கிய உன்னில் நானில்லை
நானில்லாமல் அவனில்லை
ஆமிம் ஹூம்ரூம் க்லூம் ஐம்
ஹௌம் சுபாவம் விளங்கிடுமே.

அட்சயமான விளங்குவது அள்ள அள்ள குறையாதது அறிவு என்னும் ஒளியே ஆகும். எனவே அறியாமை என்னும் இருட்டிலிருந்து அறிவு எனும் ஒளிக்கு பயணிப்பதே காயத்ரி மந்த்ரமாகும்.

இந்த பவித்ரமான காயத்திரி மந்த்ரம் பத்மத்தை போல நீரில் ஒட்டாது, நெருப்பில் பொருங்காது, மூவலகத்திற்கும் பயணிக்கும் ஜோதிஸ்வரூபம் ஆகும். இந்த மங்கா தீபம் விளங்க மன இருள் நீங்க வேண்டும்.

மன இருள் காமம், குரோதம், மோகம், மதம், லோபம், மாச்சரியம், பாவம் போன்ற ஏழு கசடுகளை கொண்டது.

இந்த கசடுகள் நீங்க முயற்சி தேவை, பயிற்சி தேவை, இந்த முயற்சியும், பயிற்சியும், பின் வரும்

பீஜாக்ஷரங்களை ஜபித்தலில் தான் உள்ளது. விவரம் பின் வருமாறு.

மாற்றம் - மனமாற்றம்
ஆம்.. ஆம்.. ஆம்.. ஆம்.. ஆம்.. ஆம்.. ஆம்..
காமம் நீங்கும்

ஏற்றம் - முன்னேற்றம்
இம்.. இம்.. இம்.. இம்.. இம்.. இம்.. இம்..
குரோதம் நீங்கும்

லாபம் - சுபலாபம்
ஹ¬ம்.. ஹ¬ம்.. ஹ¬ம்.. ஹ¬ம்.. ஹ¬ம்.. ஹ¬ம்.. ஹ¬ம்..
மோகம் நீங்கும்

தாக்கம் - செயல் தாக்கம்
ரூம்.. ரூம்.. ரூம்.. ரூம்.. ரூம்.. ரூம்.. ரூம்..
மதம் மறையும்

ஞானம் - பரம ஞானம்
ஓூம்.. ஓூம்.. ஓூம்.. ஓூம்.. ஓூம்.. ஓூம்.. ஓூம்..
லோபம் நீங்கும்

புண்ணியம் - உடன் சேரும்
ஐம்.. ஐம்.. ஐம்.. ஐம்.. ஐம்.. ஐம்.. ஐம்..
மாச்சரியம் அகலும்

ஹௌம்.. ஹௌம்.. ஹௌம்.. ஹௌம்.. ஹௌம்..
ஹௌம்.. ஹௌம்.. பாவங்கள் தொலையும்.

எதிர்மறைகள் நீங்கிய பின், பாவங்களும் தொலைந்து பின் சமநிலைக்கு சாமானியனாக ஒளிவிடும் நக்ஷ்ஷத்திரமாக, ஜோதிஸ்வரூபமாக, ஜனார்த்தனமாக, ஜகத்தில் வாழ்வின் நோக்கம் அறிய முற்படுகிறோம். இதுவே நம்முடைய நக்ஷத்திரங்களாகும். இந்த 27 நஷ்ஷத்தி-ரங்களில் நீ யார் என்று அறிதலே உன் தேடலின் முடிவாகும்.

**ரகசிய மந்தரங்கள், குருவருளுடன்...**

★ **சாயி அஸ்வினி** ★



**தனிமையில் இனிமை**

*பாதம் 1 : எட்டி*

*பாதம் 2 : எருக்கு*

*பாதம் 3 : கடம்பு*

*பாதம் 4 : தேமா*

***அபிராமி அந்தாதி 1,2,3,4***

*ஸ்வேதவர்ண்யை வித்மஹே*
*சுதாகராயை தீமஹி*
*ஸ்வயமே ப்ரஸ்வை தீமஹி*
*தன்னோ அஸ்வினி ப்ரசோதயாத் :*

*பரசுகமே ஆனந்தமே*
*சிதானந்தமே மெய்ப்பொருளே*
*ஏகாந்தமே நல் சத்தியமே*
*ஏற்ற துதியே நமோ நமோ :*

*இணைந்த உருவே இயல்வடிவே*
*நினைந்த தட்டொளி ஊக்கமே*
*ஈருடல் கொண்ட தாரகையே*
*தன்மய அஸ்வினி நமோ நமோ :*

*ஓம் சிவாய மே நம சிவாய மே*
*த்ரயம்பகாய மே சாயி தேவாய ஓம்*

## அசுபதி – பரசுகம், தன்மயம், சச்சிதானந்தம் மெய்ப் பரம ஏகாந்த நிலையம்

*தன்மயமாதல் உனக்கியல்பு*
*ஆனந்தமே அதன் விளைவு*
*சத் - சித் - ஆனந்தமே உன் இசைவு*
*மெய்ப்பரம ஏகாந்தமே அதன் வளைவு*
*பரசுகமே நிலைப்பாடு; தன் சுகமே பக்க விளைவு*
*நடம் புரியும் வழிபாடு கற்பித்தலே அளவு*
*அன்புடன் கருணை பொழிய அசுபதி பாசம்*
*ஆடம்பரமே, ஆசிரியரே, மருத்துவரே போற்றி*
*மெய்சுகம் யாதெனில், நிரந்தர அழகி நீயே*

*இயல்பான நிவாரணம் நினைக்கழகு*
*இறைவா அழகு மெய்யழகே யெனில்*
*அதை உன்னில் காணவே மெய்பரம*
*ஏகாந்த நிலையமாய் பெற்றாய் நீ வாழ்க.*

*தட்டொளி தானோ? கண்ணாடி பயிற்சி*
*அதை என்னாளுமே உனக்கெனவே மலர்ச்சி*
*பட்டொளி தானோ? படபடவென வளர்ச்சி*
*இது உனக்கெனவே மற்றவர்க்கு தரும் கவர்ச்சி*

*வட்டொளி தானோ? வந்ததென வரவிருக்கும் சுழற்ச்சி*
*வர வர இதுவே நோய் தீர்க்கும் மட்டற்ற மகிழ்ச்சி*
*நட்டொளி தானோ? நடுநாயக்கித்தில் நீதரும் அழற்சி*
*அயர்நதாலும் பெயர்ந்தாலும் மறைந்தாலும் இதுவே கழற்சி*

## திருப்பாவை பாசுரம் – 20

*முப்பத்து மூவர் அமரர்க்கு முன் சென்று*
*கப்பம் தவிர்க்கும் கலியே! துயிலெழாய்*
*செப்பமுடையாய்! திறலுடையாய் செற்றார்க்கு*
*வெப்பம் கொடுக்கும் விமலா! துயிலெழாய்*
*செப்பன்ன மென்முலைச் செவ்வாய்ச் சிறுமருங்குல்*
*நப்பின்னை நங்காய்! திருவே! துயிலெழாய்*
*உக்கமும் தட்டொளியும் தந்து உன் மணாளனை*
*இப்போதே எம்மைநீ ராட்டேலோர் ரெம்பாவாய்*

*உக்கமும் தட்டொளியும் உலகிலேயே தேடலின் ரகசிய வழிமுறை என்று பறை சாற்றுவதே அஸ்வினி நட்சத்திரத்தின் தனித்தன்மையாகும்.*

*உக்கம் என்றால் பரசுகமளிக்கும் பிராணனை நோக்கும் வாயுகலையை விசிறியாக பாசுரத்தில் காட்டப் பெற்றுள்ளது.*

தன்மயத்தை தட்டொளியென்றே (MIRRORING) சச்சிதானந்த நிலையை அறிய முற்படும் அஸ்வினி வாழ்வியல் பாராட்டுக்குரியது.

தன்மயம் என்பது கணவன், மனைவி, உற்றார், உறவினர் சுற்றமும், நட்பு எவருமின்றி, யாருடைய துணையுமின்றி, தனக்குத் தானே ஆனந்தமாக இருப்பது தட்டொளியால் மட்டுமே சாத்தியமாகும். இந்த கண்ணாடி பயிற்சியில் ஆரம்பித்து தன்னுள்ளே சத்தியத்தை சத்தாக, சித்தாக, ஆனந்தமாக முழுமையில் சச்சிதானந்தமாக உடலில் காணும்செல்வ முடையாய், திறனுடையாய், வெப்பமுடையாய், அஸ்வினியாகும்.

இந்த ஏகாந்த நிலையத்தை, மெய்பரம சுகத்தை கொண்ட அஸ்வினி நஷ்ஷத்திரதாரர்கள் எந்த இடையூறுகளையும், இன்னல்களையும் எதிர்கொள்ளும். நிவாரணத் தன்மை கொண்டவர்களாவார்கள்.

எனவே புறமருத்துவம் இவர்களுக்கு தேவையில்லை. அகமருத்துவத்தின் துணையுடன் அகம் ப்ரமாஸ்மியாக மேலும் அகம் ஸ்மராமியாக (HEALING) விளங்கும்.

முப்பத்து மூவருக்கும் பலப்பல வழிகள் முன்னால் சென்றாலும், கப்பம் தவிர்க்கும் வழி உனக்கு மட்டுமே தெரியும்.

நேர்மையும், திறமையும், உடைய காந்த சக்தி, ஏகாந்தமாய் பல்கி பரவி உன்னில் வெளிப்படுவதால் உனது, உடல், உள்ளம், உயிர் அனைத்தும் ஒரு விதமான தெய்வத்தன்மையை வெளிப்படுத்தும்.


*எனவே இந்த தேஜஸை சொல்லவே நீ வெப்பம் கொடுக்கும் விமலனானாய்.*

*சத்தியம், சித்தியம், ஆனந்தம் இவை மூன்றும் நப்பின்னைக்கே சொந்தம். மெல்லிடை, மேலாடை, சிறுவண்ணம் கொண்ட சுயம்பு தன்மயமே நினது சுகம் மயமாகும். இந்த சுய பிரகாசத்தை காணவே கண்ணாடி பயிற்சி. அகம் பிரம்மாஸ்மியாக பரசுகம் காணும் நுணுக்கம் உனக்கு மட்டுமே சாத்தியமாகும்.*

*எனவே விசிறியும், கண்ணாடியும் சுகத்தை மேம்படுத்த இறைவன் மணாளனாக உன்னைத் தேடிவருவார். இந்த மெய்ப் பரம ஏகாந்த நிலையம் உலகம் உள்ளவரை உனக்கே சொந்தம். அஸ்வினியே வருக. அஸ்வினியே அருள்க!*

**மூலமந்திரம் :**

ஞானானந்தமயம் தேவம் நிர்மல ஸ்படிகாக்ருதம்
ஆதாரம் ஸர்வ வித்யானாம் ஹயக்ரீவர் உபாஸ்மஹே

| | |
|---|---|
| ★ **சாயி பரணி** ★ | *அபிராமி அந்தாதி 5,6,7,8* |
|  | *க்ருஷ்ணவர்ணாயை வித்மஹே<br>தண்டதராயை தீமஹி<br>தர்ம ராஜாய தீமஹி<br>தன்னோ பரணி ப்ரசோதயாத்:*<br><br>*சத்துவ மகத்துவம் நீ யன்றோ<br>நிமல கைவல்ய தத்துவமே<br>மும்மல எதிரிகள் அடங்குவரே<br>அவனியை ஆள்வாய் நமோ நமோ:* |
| **ஞானமும் கானமும்**<br>*பாதம் 1 : நெல்லி*<br>*பாதம் 2 : வன்னி*<br>*பாதம் 3 : விளா*<br>*பாதம் 4 : செங்கால்* | *ஞானவடிவே நலம் தருவாய்<br>மோன படிம திறம் காண<br>ஆன முதலே அதிபதியே<br>ஆசைகள் ஒடுங்கும் நமோ நமே:*<br><br>*ஓம் சிவாய மே நம சிவாய மே<br>த்ரயம்பகாய மே சாயி தேவாய ஓம்* |

## பரம ஞானம், பரமசத்துவ மகத்துவம், பரம கைவல்யம் நிமலம்

*சிற்றறிவுக்கும் நலம்சேர்க்கும் நெல்லிக்கனியே
முற்றறிவுக்குச் சொந்தக்காரராகிய பரிவட்டமே
தொட்டவை துலங்க, தொடாதவை கலங்க
மற்றவை விளங்க மாறிலா வள்ளியே*

*மனங்கவர் மா மணியே; மலமிலா மனமே
மும்மலமும் நினக்கில்லையென முடிந்தமுடிவே*

*சுயம்பாய், சுயமாய், சுகமாய் சுரப்பவளே!
சுலப பிரசன்னமாய் வெற்றிகொள்ளும் நாயகியே!*

*சுவாஹா எனில் சுயஞ்ஜோதிக்கு செல்லும் சுடரே!*
*சுய தேவைகளை சத்துவ மகத்துவத்திலே காண்பவளே*

*சுய யுக்திகளை சொந்த கைபக்குவத்தில்*
*பய பக்தியுடன் பரமஞானம் சேர்க்கவே*
*லய பாவத்தில் கூட்டு கட்டின்றிய ஆவர்த்தனமே*
*கோபம் தணியவே தாபம் சேர்ப்பீரே!*

*ஐம்புலன்களை அய்யமின்றி ஆஹீதியென சேர்த்திடுக*
*அய்விரல்கள் சத்யதர்ம சாந்திப்ரேமயை பரப்பிடுக*
*ஐம்பூதங்கள் இடராவண்ணம் அஹிம்சை தந்திடுக*
*அய்யம்திரிபுரை ஆணவகன்மம் மாயைகளை மாற்றிடுக*

## திருப்பாவை பாசுரம் – 21

*ஏற்ற கலங்கள் எதிர்பொங்கி மீதளிப்ப*
*மாற்றாதே பால் சொரியும் வள்ளல் பெரும்பசுக்கள்*
*ஆற்றப் படைத்தான் மகனே! அறிவுறாய்*
*ஊற்ற முடையாய்! பெரியாய்! உலகினில்*
*தோற்றமாய் நின்ற சுடரே! துயிலெழாய்*
*மாற்றார் உனக்கு வலிதொலைந்து உன் வாசற்கண்*
*ஆற்றாது வந்த உன்னடிபணியு மாபோலே*
*போற்றியாம் வந்தோம் புகழ்ந்தேலோ ரெம்பாவாய்.*

*பத்தாயிரத்தில் ஒருவன் பஜனை செய்வான்.*
*லட்சத்தில் ஒருவன் சேவை செய்வான்.*
*கோடியில் ஒருவன் தவம் செய்வான்.*

*அந்த தவஞானியே பரணி. இந்த பரணி ஆற்றல் உடைத்தனாய். ஊற்றமுடைத்தானாய், தேற்றமாய் நின்று தரணியை ஆளும் தர்மராஜனே, பரணி ஆவான். மாறில்லா வள்ளி வாழ்க என்ற தத்துவத்திற்கேற்ப*

மாற்றாதே பால் சொரியும் வள்ளல் பெரும் பசுக்கள், அண்டியவர்களை சமூக நீதியுடன் சமதர்மத்தை சத்துவ குணத்துடன் அளித்துக்காப்பார்.

இதைத்தான் பரணியில் பிறந்தால் தரணி ஆள்வார் என்று உரைத்தனரே. சத்துவ மகத்துவத்தை உலகறிய ஊர் அறிய செய்வீரே.

போற்றி போற்றி என புகழுதல் பரணிக்கு குளிர்ச்சியூட்டாதே, ஆனால் “அபபரணி” என்று குளிர்த்தன்மையை சுட்டிக் காட்டி வெற்றி பெற வேண்டும். இதை ஏற்கும் திறன் பரணிக்கு அமையும் பொழுது ஆணவம், கன்மம், மாயை என்ற மும்ம லங்களை நிமலமாக்கி வெற்றி கொள்வான்.

மாற்றார் பரணிக்கு வலிகள் பல கொடுத்தாலும், அவை தொலைந்து உன் வாசற்கண் ஆற்றாது வந்து அடி பணிவார்கள். எனவே மாற்றார், மற்றவராயினும், மற்றவர், மாற்றாராயினும் அவர்கள் கருத்துக்களை கேட்டு உள்வாங்கி செயல்பட்டால் வெற்றி நிச்சயமாய் உண்டு. எனவே போற்றியாம் வந்தோம் புகழ்ந்தேலோர் என புகழ் பெற்றது.

உலகினில் தோற்றமாய் நின்ற சுடரே! பரணியே நீ தரணி ஆள்வாய், அறிவுள்ளவனே, அண்டியவர்களை காப்பவனே, பெரிய பெருமானே, ஞான ஒளிச்சுடராய் எங்கும் நிறைந்தவனே, கோடியில் ஒருவன் நீ மாறில்லா வள்ளி வாழ்க. என்கிற வசனத்திற்கு ஏற்ப எப்பொழுதும், பரமசத்துவத்தை பிசகாமல் பால் சொரியும் வள்ளல் பெரும் பசுக்களே உன் இயல்பாகும். பால் எதிர்பொங்கி அருள் செய்யும், பாலோடு நீர் இருந்தாலும் பால்

பொங்கும். அது போல பரணியோடு எவர் இருந்தாலும் அவருக்கு நன்மை நடக்கும்.

பரணிக்கு வரும் சோதனைகள் பலப்பல பகைவர்கள் புறமாயினும், அகமாயினும் (மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை) அவர்களை வெற்றி பெரும் தனித்திறன் உனக்கு உண்டு.

பகைவர், அனைவரும் தோற்று, வேறு வழியின்றி உன்வாசல் தேடி வந்து, உன் பாதங்களில் விழுந்து வணங்குவதை போல் உன்னைப் புகழ்ந்து பாடி நாங்கள் வந்துள்ளோம். உறங்காது எழுந்திரும். பரணியே வருக பரணியே அருள்க!



## மூலமந்திரம் :

**ஓம்... ஹ்ரோம்... ஜும்... ச:**

★ **சாயி கிருத்திகை** ★



**அதிசய விமர்சனம்**

*பாதம் 1 : அத்தி*

*பாதம் 2 : வேம்பு*

*பாதம் 3 : இலுப்பை*

*பாதம் 4 : வஞ்சி*

*அபிராமி அந்தாதி 9, 10, 11, 12*

*வன்னிதேஹாயை வித்மஹே*
*மஹாதபாயை தீமஹி*
*தேவ மிந்த்ரிய தீமஹி*
*தன்னோ க்ருத்திகா ப்ரசோதயாத் :*

*அறுமலர்கள் அற்புதமே*
*அழகாய் ஜொலிக்கம் ஆரணங்கே*
*மாலின் மருகனை காத்தவளே*
*மனமகிழ் உருவே நமோ நமோ :*

*தத்துவப் பழக்க செயல்முறையில்*
*சமத்துவம் கமழும் மொழியினிலே*
*மதி அதி மயக்கம் தந்திடுமே*
*அதி அற்புத ஒளியே நமோ நமோ :*

*ஓம் சிவாய மே நம சிவாய மே*
*த்ரயம்பகாய மே சாயி தேவாய ஓம்*

**பரம தத்துவ, நிரதிசய நிட்களம்**
**புதபௌதிகாதார நிபுணம்...**

*பழமை தத்துவங்களில் மூழ்கிப் போன நியாயங்களே*
*படர்கொடியில் பூத்த ஆறு புஷ்பமான மாயங்களே*
*பூத, பௌதிக, ஆதார வாழ்வியல் அடிப்படைகளே*
*பஞ்ச பூதங்களும் அதிசயமாய் காட்டும் மென்மை சுகமே*

*ஆறு கார்த்திகைப் பெண்களின் நிபுணத்துவத்தில் அடிப்படைநியாயங்களைஅற்புதமாய்ஒருங்கிணைப்பார் அதிசயமாய் செயல்படுவர். கல்வியில்லாமலே கலைகளைப் பயின்று மேற்படி கலைகளில் பெருத்த வெற்றி காண்பார்.*

தற்கால நிலையறியாமலேயே, பழங்கால புராதன முறை மாறாமலேயே நனைந்து சுமந்தாலும், சுமப்பது சுகமே என்பர்.

கபடு, வாது, சூது இல்லாமல் தந்திரம், மந்திர-மில்லாமல் வாய் பேசினாலும் அதிசயக்கத்தக்க வகையில் சமுதாயத்திற்கு உதவி செய்வர்.

எங்கள் வீட்டில் எல்லா நாளும் "கார்த்திகை" என்று தீபஜோதியை ஏற்றி தெய்வ பிரசன்னத்தை உணர்த்தி உயிரோட்டம் காண்பரே!

படிப்பறிவு கடுகெனினும் பட்டறிவு ஆறுபுஷ்பம்
கட்டழுகு சட்டெனினும் காதலோ நூறுபஸ்பம்
சட்ட மது பலவெனினும் ஆசாரமே அனுஷ்டானம்
பட்டமிகு நட்பாகினும் அலைச்சலே ப்ரிதிஷ்டானம்
வட்டமிகு ஓட்டமெனினும் நோக்கமின்மை ஸ்தானம்

## திருப்பாவை பாசுரம் – 22

அங்கண்மா ஞாலத்து அரசர் அபிமான
பங்கமாய் வந்துநின் பள்ளிக்கட் டிற்கீழே
சங்கம் இருப்பார் போல், வந்து தலைப்பெய்தோம்
கிங்கிணி வாய்ச்செய்த தாமரைப் பூப்போலே
செங்கண் சிறுச்சிறிதே எம்மேல் விழியாவோ?
திங்களும் ஆதித் தியனும் எழுந்தாற்போல்,
அங்கண் ணிரண்டும் கொண்டு எங்கள்மேல் நோக்குதியேல்
எங்கள்மேல் சாபம் இழிந்தேலோ ரெம்பாவாய்.

அங்கண்மா ஞாலமென்று அகில உலகத்தில், பூத பௌதிக ஆதார நிபுணத்தை வெளிச் செய்பவர்களே கார்த்திகை புஷ்பங்கள். திங்களும் ஆதித்தியனும் சேர்ந்து

எழுந்தாற்போல் இவர் முப்பது நாளும் பௌர்ணமி என்பது போல கார்த்திகை நக்ஷத்திரம் இருக்கும் வரை முப்பது நாளும் அதிசயங்கள், ஆனந்தங்கள், நடந்து கொண்டேயிருக்கும்.

களத்தில் எது இருந்தாலும், இல்லை என்றாலும் சங்கமிருப்பார்போல், உழைப்பு மிகுந்த விளைச்சல் பெருகும். இவருடைய ஆராய்ச்சித்திறன், உலகியலுக்கும், அறிவியலுக்கும் ஒட்டிய வகையில் கண்டுபிடிப்புகளும், சுகமான அனுபவங்களும் மிகுந்து வரும். மனித குலத்தின் மீதுள்ள சாபங்கள் கரைந்தோடும், பரம தத்துவங்களும் இதனடிப்படையில் விருத்தியாகும்.

கிங்கிணி வாய் செய்த பூப்போல கிருத்திகை உடனடி வசனங்கள் உண்மையான விமர்சனங்களாகும். இதைத் தாங்காமல் சுற்றமும், நட்பும், தூரமாய் நிற்பார், ஆனால் கிருத்திகையின் தன்மையைப் புரிதல் வேண்டும். வசனம் பாசுரத்தில் இதே அங்கண் இரண்டும் கொண்ட எங்கள் சாபம் இழிந்தேலோர் எம்பாவாய். பட்டறிவு, பட்டொளி விமர்சனங்களை தட, தடவென தட்டொளியாய் சொல்லாமல் தகுந்த அக்கறையை நிலைபடுத்தி பிறகு சொல்லும் பொழுது மற்றவர் மேல் உள்ள சாபம் அகலும் எனவே கார்த்திகையே வருக கார்த்திகையே அருள்க!

திங்களும் ஆதித்தியனும் எழுந்தார் போல் சேர்ந்தது ஒளிவிடும் கிருத்திகை நஷ்ஷத்திரமே. உங்கள் செயலடக்கம் ஒன்றல்ல, இரண்டல்ல ஆறுபேர் சேர்ந்து செய்வதற்கு ஒப்பாகும். அங்கண்மா ஞாலத்து அரசர் அகில உலகத்தின் பூத பௌதிகார விஷயங்களை எப்படி

நினைவில் வைத்திருக்கிறாரோ அப்படியே நீங்களும், விமர்சனம் செய்வீர்கள்.

விருப்பு, வெறுப்பின்றி அக்கறையின்பால், வளர்ச்சியின்பால், சங்கம் இருப்பார் போல் வந்து தலைமை தாங்கி தீர்ப்புரை எழுதுவீர்கள். இதனால் வரும் எதிர்விளைவுகளைப்பற்றி கவலைப்பட மாட்டீர்கள்.

தங்களின் கிங்கிணி பேச்சு தாமரைப் பூப்போல அதிசயமாக திருவாய் மலரும். தங்களுடைய செங்கண் பார்வை தத்துவம் நிறைந்ததாக அமையும்.

இந்த கிருத்திகை வழிபாடு, சேவகம், பிரசாதம் இவை அனைத்தும் எல்லாவிதமான சாபங்களுக்கும், விமோசனமாக அமையும். உலகியல், சுகங்கள் எதார்த்த வசனங்கள் பௌதிகாதார நிபுணத்துவம் வாய்ந்தவையாகும்.



**மூலமந்திரம் :**

**ஆம், இம், ஹூம், ஹ்ரூம், க்லூம், ஐம்**

★ **சாயி ரோஹிணி** ★



**விநோத**
**நட்பு**

*பாதம் 1 : நாவல்*

*பாதம் 2 : சிவப்புமந்தாரை*

*பாதம் 3 : மந்தாரை*

*பாதம் 4 : நாகலிங்கம்*

*அபிராமி அந்தாதி 13, 14, 15, 16*

*ப்ரஜாவிருத்யைச் வித்மஹே*
*விஸ்வரூபாயை தீமஹி*
*சித்ரபானு தீமஹி*
*தன்னோ ரோஹிணி ப்ரசோதயாத் :*

*வினைகனை தீர்க்கும் அருமருந்தே*
*விரும்பும் வரங்களை தந்திடுமே*
*விடியல் தருமே விண்ணொளியே*
*வினோத சகியே நமோ நமோ :*

*ஆனந்த சொரூபம் எனைக்கொண்ட*
*ஆநிரைக் கண்ணன் தாரகையே*
*பணிந்தோர் தமக்கு கைகொடுக்கும்*
*பலன் தரும் ரோஹிணி நமோ நமோ :*

*ஓம் சிவாய மே நம சிவாய மே*
*த்ரயம்பகாய மே சாயி தேவாய ஓம்*

**பவ பந்தநிக்ரக, வினோத சகளம்,**
**சிற்பரம் பரானந்த சொரூபம்**

*எதிரியாகினும் நண்பனாகினும் உதவுவாய்நீ*
*ஆசைகளையும், தேவைகளையும் அருள்வாய் நீ*
*விளைவுகளையும், வினைகளையும் தீர்ப்பாய் நீ*
*விநோதங்களின் விளையாட்டுகள் நீயே அன்றோ!*

*நினைத்தாலே இனிக்கும் இகபரசுகங்கள் நீ*
*ஏக்கமும், தாக்கமும் தந்திடும் ஊக்கமே நீ*
*பர ஆனந்தத்திலும் சிறு, சிறு வீடுகள் உன்னிடமே*
*நோக்கமே நினக்கில்லை; ஆனாலும் ஏக்கம் எமக்கே!*

*தூக்கமே நினக்கில்லை; ஆனாலும் தாக்கம் எமக்கே*
*முடிவுகள் தெரிந்தும் அதை கேள்வியாக்கிய நீயே*
*மடிந்து, படிந்து, விடிந்தாலும் விடை சொல்லமாட்டாயே*
*அதீதமான கற்பனைகளில் மதுரமாக மகிழ்விப்பவளே*
*அவசரமான கோலங்களில் நல்லதை வசம்காண்பாயே*
*அலைகள் ஒய்வதில்லை; நின் அலைகளும் ஓய்விப்பதில்லை*
*இரகசிய சிநேகிதனே! எதிலும் ரகசியம் ஏன்? ஏன்?*

*தூது வரின் துக்கம் மறையும்; விஸ்வரூபம்புரியும்*
*தாது வரின் தூக்கம் பதுங்கும்; விஸ்வ நேசம் விளங்கும்*
*தோது வரின் தாக்கம் விளங்கும்; விஸ்வ ஜீவன் பறக்கும்*
*மாது வரின் ஆக்கம் அங்கம்; விஸ்வப்பாவை பாடும்*

*கிருஷ்ணார்பணம் தெரிந்தே செய்யும் வினைகட்கே!*
*ப்ரம்மார்பணம் விண்மீன்கள் பயிலும் மனைகட்கே!*
*சிவார்ப்பணம் அன்பினங்கள் விடுக்கும் விடைகட்கே!*
*ரோகிணி அர்ப்பணம் குழலோசை பரப்பும் வளத்திற்கே!*

## திருப்பாவை பாசுரம் – 1

*மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்*
*நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்*
*சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்*
*கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோ பன்குமரன்*
*ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்*
*கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல்முகத்தான்*
*நாராயணனே நமக்கே பறைதருவான்*
*பாரோர் புகழப் படிந்தேலோ ரெம்பாவாய்.*

*உலகத்தில் மதி நிறைந்த அவதாரம்-கண்ணன் அவதாரம். அவன் பிறந்த நஷ்ஷத்திரம் ரோகிணியாகும். தரிசனம் காணபோவோம், நீராட போவோம். இந்த*

கண்ணன் பாரம்பரியமானது. பிறப்பால் நன் தொழில் வளர்ப்பால் கூர்வேல் கொடுந்தொழிலுக்கு சேர்ந்துள்ளது. எனவே நல்லவனுக்கும், கெட்டவனுக்கும், கேட்ட-வனுக்கும் அருள் புரிபவனே ரோகிணி கண்ணன் ஆவான்.

யசோதை இளஞ்சிங்கம் காட்டிற்கு ராஜா சிங்கம் இந்த உலகத்தை ஆள்பவன் இளஞ்சிங்கம் ஆவான். உடல், மனம், ஆன்மா, இவை மூன்றும் முறையே கார்மேனி, கதிர்மதியம், செங்கண் என சித்தரிக்கப்பட்டுள்ளது.

இந்த ரோகிணி கண்ணன் அவதாரத்தில் செம்மைய்யான கண்ணையுடைய ஆன்மா என்பதினால் தானோ ரோகிணி கண்ணன் ஆனானோ! புருவ மத்தியில் உள்ள பரஞ்ஜோதி இங்கே செங்கண் என சித்தரிக்கப்பட்டுள்ளது.

உடல் என்பது மேனி, இந்த மேனி சரிவர பயன்பட வேண்டும் என்பதை கார்மேனி எனக் காட்டப்பட்டுள்ளது. கார் என்றால் மழை, மழை மண்ணிற்கு மிகவும் முக்கியம். கண்ணன் மேனி கார்மேனி எனவே கண்ணன் உடல் மழை மேகம் போல் மண்ணிற்குப் பயன்படுகிறது.

மனம் என்பது அனைவரும் அறிந்த, மனம் ஒரு குரங்கு ஆனால் கண்ணன் மனமோ கதிர்மதியம் போல் சமநிலை கொண்டது. கதிர் என்றால் கதிரவன், சூரியன்; மதி என்றால் சந்திரன், சூரிய சந்திரனுக்கு ஒப்பான மனநிலை கண்ணனை தவிர வேறு எவர்க்கும் இல்லை. எனவே இந்த ரோகிணி கண்ணன் நாராயணனே

நமக்கே அருள் புரிவான். எனவே படிந்து அருளை முழுமையாய்ப் பெறுவோம்.

ரோகிணி மதி நிறைந்தவன் நீ, இளஞ்சிங்கம் நீ, கார்மேனியும் நீ, கதிர்மதியமேனியும் நீ, இதனிடையே செங்கண் முகத்தான் நாராயணன் நீ, ஆனந்த சொரூபம் நீ, உலகம் புகழும் உத்தமன் நீ, உன்னைப் படிந்தால் பவபந்த, நிக்ரகம், கனிந்து வரும். அதாவது பந்த அனுபந்தங்களில் தொடர்ந்து வரும் பாவங்கள் உன்னால் மட்டுமே விமோசனம் காணப்பெறும்.

எல்லோருக்கும்,நல்லவனாயினும்,கெட்டவனாயினும், பறை தந்து, உதவி செய்து பாராட்டும் படி நடந்து கொள்வார்.

கூர்வேல் கொடுந்தொழிலும், ஆய்ப்பாடி செல்வச் சிறுமீர்களாம் உனக்கு சொந்தமாகும். இந்த வினோத நட்பு செயல்பட உன்னால்மட்டுமே முடியும். ஏரார்ந்த கன்னி என்னும் அழகிய கண்களை உடைய கண், உன்னுடைய சிற்பரம். சிறு, சிறு விளையாட்டுகள் எப்பொழுதும் எல்லோருக்கும் குளிரூட்டும்.

உலகத்தில், நகரத்தில், ஊரில் உள்ள அனைவரும் எந்த வகையிலாவது ரோகிணியின் சொற்படி படிந்து நடந்துசெல்வதே சிலாக்கியமாகும். ரோகிணியே வருக! ரோகிணியே அருள்க!



**மூலமந்திரம் :**

கிலிங் – கிருஷ்ண – கிலிங்

★ **சாயி**
**மிருகசீரிடம்** ★



**அறிமுகத்தில்**
**அற்புதம்**

*பாதம் 1 : கருங்காலி*

*பாதம் 2 : அச்சா*

*பாதம் 3 : வேப்ப*

*பாதம் 4 : நீர்கடம்பு*

*அபிராமி அந்தாதி 17, 18, 19, 20*

*சசிசேகராய வித்மஹே*
*மஹாராஜாய தீமஹி*
*ப்ரஜா எஜமான தீமஹி*
*மிருகசீரிஷா ப்ரசோதயாத்*

*அற்புதமான ஆய்வு நிலை*
*விர்பன்னர் தம் துணையாகும்*
*பரிச்சயம் கொண்ட அன்பருக்கு*
*பரிசாய் அமைந்தது உந்தன் துணை*

*உழைப்பவர் உயர்வார் என்றபடி*
*உலகோர் யார்க்கும் உந்தன்வழி*
*வரமே தரும் நல் வழக்கப்படி*
*வாழ்வில் உயர்வார் நமோ நமே*

*ஓம் சிவாய மே நம சிவாய மே*
*த்ரயம்பகாய மே சாயி தேவாய ஓம்*

## பரிசயாத்தம், சுயஞ்ச தோதயம், வரம் பரமார்த்த முக்த மௌனம்

*விளக்கெலாம் விளக்கல்ல; பொய்யா விளக்கே!*
*சுயம் எல்லாம் சுயமல்ல; சுயம்பான உதயமே!*
*வரம் எல்லாம் வரமல்ல; இயற்கை வரமே!*
*பரிச்சயமெலாம் தீட்சையல்ல; அதீதமான பார்வையே!*

*ஆத்மார்த்த அணுகுமுறைகள் ஆயிரமுண்டு*
*ஆனால் பரமார்த்த அணுகுமுறை நினதே!*
*அறிவார்ந்த செயல்முறைகள் அனேகமுண்டு*
*ஆனால் விசாலமான, கூர்மைகள் நினதே!*

*மனங்களின் மாயைகளில் மந்திரமுண்டு*
*ஆனால் மனமறிந்து, பணமறிந்து, முடிந்த முடிவே!*
*வார்ப்புகளில் வளைவிருந்தாலும் வரமாக திகழ்பவளே!*
*தாக்கமே தந்து தளர்வறிந்தாலும்*
*பொறுமையிலும் பரபரப்பு இருந்தாலும்*
*சின்னசின்ன சிணுங்கல் இடைவரினும்*
*மௌனமே நிரந்தர வெற்றி என வெல்பவள் நீ!*

*வைர நெஞ்சம் வையகத்தின் எல்லா நலங்கட்காகவே!*
*வைர நகைகள் வைப்பெல்லாம் தான தர்மம் காக்கவே!*
*வைர வரிகள் வார்ப்பதெல்லாம் மெய்யான மனங்காக்கவே!*
*வைர இருப்பு முக்தியென்றால் மௌனமான*
*வெற்றிக்காகவே!*

## திருப்பாவை பாசுரம் – 23

*மாரி மலைமுழைஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும்*
*சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீவிழித்து*
*வேரி மயிர்பொங்க எப்பாடும் பேர்ந்துதறி*
*மூரி நிமிர்ந்து முழங்கி புறப்பட்டுப்*
*போதருமா போலநீ பூவைப்பூ வண்ணா உன்*
*கோயில்நின்று இங்ஙனே போந்தருளிக் கோப்புடைய*
*சீரிய சிங்கா சனத்து இருந்து யாம்வந்த*
*காரியம் ஆராய்ந் தருளேலோ ரெம்பாவாய்.*

*சீரிய சிங்காசனத்திலிருந்து வரம் அளிக்கும் மிருக சீரிஷமேயாம் வந்த காரியம் ஆராய்ந்து அருள உமக்கே தகுதியாகும். இங்கே சீரிய சிங்காசனம், திரு வேங்கடவன் இதயக் கமலமே ஆகும். இந்த இதயக் கமலத்திலிருக்கும் மிருக சீரிடம் நக்ஷத்திரக்காரர்கள் கலியுகத்தில் வரம் பெற்றவர்களாவர்கள். இவர்களுடைய அனுதின*

ஆராய்ச்சிகள் நேர் நோக்கமாய் அமைந்து அரசனையும், எதிர்த்து கேள்வி கேட்கச் செய்யும்.

வரமாய் பெற்ற பல்கி, பெருகிய, சுகங்கள் அனைத்தும் இவரை தானாகவே நாடியும், தேடியும் வரும், அநேக நேரத்தில் சுயஞ்ஜோதிமயமாக, அதாவது சுயமாக, அதாவது எந்த சிபாரிசுகளும் இல்லை. சுயமாக புறப்படுவதை பாசுரத்தில் இவ்வாறு காண்கிறோம்.

சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீ விழித்து வேரிமயிர்ப் பொங்க பாடுகள் பலபட்டு ஊறி நிமிர்ந்து வணங்காமுடியாய், முழங்கி புறப்படுகிறோம்.

எனவேகாட்டிலுள்ளசிங்கத்திற்குசிபாரிசுஇல்லை. உறக்கத்தில் இருக்கக் கூடாது என்பதே நிபந்தனை.

பரிச்சயங்கள் வியத்தகு விளைவுகளை போதருமா போல பூவைப் பூவண்ணமாக வழங்க, வளர, வசிக்க அற்புதங்களை மிருகசீரிடம் அனுபவிக்கும். எனவே மனிதநேயம் மலர மிருக குணம் மறைந்து மனிதன் தெய்வமாகும்.

சீரிய சிங்காசனம் மிருகசீரீட நஷ்ஷத்திரத்திற்கு வரமாக தேடிவரும். பதவி, பதவி என அலையமாட்டீர்கள். சுயமான உழைப்பின் காரணமாக எந்தவிதமான பரிந்துரையும் இல்லாமல் காட்டுராஜாவாக சிங்கம் திகழ்வது போல நாட்டிலும், நகரத்திலும், ஊரிலும், வீட்டிலும் ராஜாவாக உயர் பதவியில் நிர்வாகம் செய்வீர்கள்.

இந்த சீரும் சிங்கம் அறிவுறுத்தீ விழித்து வேரிமயிர், பொங்க எப்பாடும் பேர்ந்தறி, மூரி நிமிர்ந்து,

முழங்கிப் புறப்பட்டு, கேட்கும் கேள்விகள் தவிர்க்க முடியாததாகும். எனவே கேள்விகள் கேட்கவில்லை என்றால், இந்த சிங்கத்தின் தலை சிதறிவிடும். ஆனாலும் பார்ப்பதற்கு போதருமான போலே, நீ பூவைப் பூவண்ணன் போல் பரமார்ந்த முக்த மௌனம் போல காட்சியளிப்பார்.

நீவீர் உமது இடம் விட்டு எம்மிடம் பரிச்சயப்பட்டு அழகு மிக்க அரியணையில் அமர்ந்து எதை நாடி ஓங்கி நிற்கிறோம், என்று ஆராய்ந்து ஆராய்ச்சியின் உச்சிக்கு சென்று உலகியல் உதவிகளை செய்பவர் நீங்கள். எனவே சிறந்த நேர்மையாளன் மிகுந்த உழைப்பாளன், பரந்த நீதிமான். மிருகசீரிடமே வருக மிருக சீரிடமே அருள்க!



**மூலமந்திரம் :**

ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் ஐம் மகாலக்ஷ்ம்யை கமல
சீரிஷம் தாரிண்யை ஸிம்ஹ வாஹின்யை நம:

★ **சாயி** ★

**திருவாதிரை**



**வெற்றி**

**வழக்கறிஞர்**

*பாதம் 1 : செங்கருங்காலி*

*பாதம் 2 : வெள்ளை*

*பாதம் 3 : வெள்ளெருக்கு*

*பாதம் 4 :*

*அபிராமி அந்தாதி 21, 22, 23, 24*

*மஹா ச்ரேஷ்டாய வித்மஹே*
*பசும்தநாய தீமஹி*
*துரிதாநிவிஸ்வாதீமஹி*
*தன்னோ ஆருத்ரா ப்ரசோதயாத்*

*வெற்றிப் பாதையில் நடைபோடும்*
*வேத வேதாந்த தாரகையே*
*ஆகமங்கள் போற்றுகின்ற*
*ஆஹா நின்போல் வேறிலையே*

*திருவாய் மலர்ந்த புகழினிக்கும்*
*திரும்பி பார்க்க நல்துணையே*
*சாந்தம் என்றும் குடி கொண்ட*
*நமசிவாயா நமோ நமோ*

*ஓம் சிவாய மே நம சிவாய மே*
*த்ரயம்பகாய மே சாயி தேவாய ஓம்*

**படன வேதாந்தம், ஆகமாந்தாந்தம், நிருபாதிகம், பரமசாந்தம்.**

*வேதங்கள் சொல்வதும் செய்வதும் ஆதிரையே*
*ஆகம விதிகளும், மதிகளும் நின் செயல்மறையே*
*உபநிடதங்கள் உன் மலையே; அன்பின் ஆயகலையே*
*நிருபணங்கள் நின் வாதமே அறுபதின்மரும்சிவமே*

*அன்பே சிவம்; ஆருத்ரமே தாண்டவம்*
*ஆரிய கூத்தாயினும் காரியத்தில் ஜெயம்*
*இரக்கமதில் இதயம் தொட்டு பழக்கம்*
*உலகமவர் எவராயினும் உயிர் காப்பவர்*

சிவசக்தி என மகளிருக்கும் சமானம்
தேவ, அசுரரென மாற்றனுக்கும் சன்மானம்
சமநீதி, சுபநீதி, இயற்கை நீதியில் ஆனந்தம்
அந்தங்கள் ஆறும் தவஜம் கட்டிஆடும் மங்கலம்

தில்லுமுல்லு என்றாலும் தகிட தத்தனம் பேசும்
அள்ளு - கொள்ளு என்றாலும் அடிப்படையில் வரும் கோபம்
வெற்றி தோல்வி என எப்போதும் நிலையிலா ஏற்ற இறக்கம்
சித்தம்போக்கு சிவம் போக்கெனவே ஊர் சுற்றும்

ஆடலும், பாடலும் ஒலியும் ஒளியும் போல
ஆயகலைகளும் நாதவிந்து கலவியலும் போல
ஆதவன் - கூட்டமும் நாட்டமும் கோணாதே போல
அட்டதிக்கு பாலகரும் கைகட்டி சேவகம் போல

## திருப்பாவை பாசுரம் – 2

வையத்து வாழ்வீர்கள் நாமும்நம் பாவைக்குச்
செய்யும் கிரிசைகள் கேளீரோ பாற்கடலுள்
பையத் துயின்ற பரம னடிபாடி
நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி
மையிட் டெழுதோம் மலரிட்டு நாம்முடி யோம்
செய்யா தனசெய்யோம் தீக்குறளை
சென்றோதோம்
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி
உய்யுமா றெண்ணி உகந்தேலோ ரெம்பாவாய்.

வையகம் மற்றும் வையகத்தில் வாழ்பவர்கள் அனைவரும் சிவனின் அருள்பெற வேண்டும் இந்த சிவன் திருவாதிரையே ஆகும். இருக்கும் போது திரு ராஜா, நடக்கும் போது நடராஜா, விபூதியில் சிவராஜா, அனுபூதியில் ஆருத்ரா எனவே நோன்பு என்று

*சொன்னால் அது ஒடுக்கம். அதுவே பிரதோஷம். இந்த பிரதோஷ காலத்தில் தான்:*

*நெய்யுண்ணோம்; பாலுண்ணோம், நாட்காலே நீராடி மையிட்டெழுதோம், மலரிட்டு நாம் முடியோம்; செய்யாதன செய்யோம் தீக்குறளை சென்றோதோம்.*

*இந்த பிரதோஷ காலம் திருவாதிரையின் சிறப்பை நமக்கு உணர்த்துகிறது. அனைத்து சட்ட திட்டங்களும், ஆகம விதிகளும் வேத சூத்திரங்களும் அறிந்த அன்பரே திருவாதிரை ஆகும்.*

*நிரூபணம் செய்வதிலும் எடுத்த கட்சி ஜெயிக்க வைப்பதிலும் எந்த இடர் வந்தாலும் அத்தனையும் கடந்து நெருப்பாற்றில் நீந்தி...*

*ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி வெற்றி தேடி தருபவரே திருவாதிரை ஆகும். மக்கள் சக்தி மகேசன் சக்தி என்று எண்ணி மக்களுக்கு உகந்தார் போல் திருவாதிரை வெற்றி பெறும்.*

*வையகம் வாழவே ஆதிரை நீ, திருவாதிரை நீ, உலகியல் நாயகன் நீ, சட்டத்திட்டங்கள் நீ, செய்யும் கிரிசைகள் நீ, பரமனடி பாடல்கள் நீ, ஆகம விதிகள் நீ, உண்ணா நோன்புகள் நீ, எழுதாத சட்டங்கள் நீ, செய்யாத செயல்களே இல்லை என்பவன் நீ, தீர்ப்புக் குறள் நீ.*

*எனவே அனைத்து வேதங்களும், ஆகமங்களும், வழக்கு வாதங்களும் பரம சாந்தங்களும் அறிந்தவன் நீ, அண்டி வந்து யாசிப்பவர்க்கு இல்லை எனாது இருப்பதை கொடுக்கும், வையத்து வைத்தியன் நீ,*

*வையத்து வழக்கறிஞர் நீ, வையத்து வாழ்வாங்கு வாழ்பவன் நீ.*

*உனது வாழ்விலே நெய்யுண்டு. உனது நோன்பிலே நெய்யில்லை. உனது பருவத்தில் பாலூண்டு. உனது நோன்பிலே பால் இல்லை. உனது வாழ்விலே மையுண்டு, வழக்கிலே மையில்லை. உனது நாட்டிலே மலருண்டு.*

*காட்டிலே மலரில்லை. உனது போதத்தில் நற்குறள் உண்டு. உனது வாதத்தில் நற்குறள் இல்லை. எனவே உத்தம வாழ்விற்கு உகந்த வழிகள் திருவாதிரையே. திருவாதிரையே வருக திருவாதிரையே அருள்க!*



**மூலமந்திரம் :**

ஓம் நமசிவய சிவயநம

| ★ சாயி<br>புனர்பூசம் ★ | *அபிராமி அந்தாதி 25, 26, 27, 28* |
|---|---|
| <br>**அந்தரங்க ஆலோசகர்**<br>*பாதம் 1 : மூங்கில்*<br>*பாதம் 2 : மலைவேம்பு*<br>*பாதம் 3 : அடப்ப*<br>*பாதம் 4 : நெல்லி* | *ப்ரஜாவ்ருத்யைச வித்மஹே<br>அதிதிபுத்ராய தீமஹி<br>விஸ்வஸ்ய பார்த்ரிதீமஹி<br>தன்னோ புனர்வஸீ ப்ரசோதயாத்*<br><br>*நாதம் தனிலே தெய்வீகம்<br>நட்பு பாராட்டும் அனுக்ரகம்<br>வெளிப்படையான அனுகூலம்<br>விரும்பிய பேர்க்கு துணையாகும்*<br><br>*வருந்தும் மனங்கள் அகமகிழும்<br>வாழ்த்தும் நட்பும் இனிதாகும்<br>சமத்துவம் உன்னில் அந்தரங்கம்<br>சகல திசைகளும் உனைப்பாடும்*<br><br>*ஓம் சிவாய மே நம சிவாய மே<br>த்ரயம்பகாய மே சாயி தேவாய ஓம்* |

## பரநாத தத்துவாந்தம், சகச தரிசனம், பகிரங்கம் அந்தரங்கம்

*மூங்கில் போல் கூடி வாழ நியமங்கள் எத்தனை*
*ஆங்கில் போல் தத்துவத்தில் நாதங்கள் எத்தனை*
*எங்கில் போல் பாவிக்கும் இல்லங்கள் எத்தனை*
*தங்கில் போல் தவிக்கும் ரகசியங்கள் எத்தனை*
*....கணக்கிலடங்கா*

*மரா, மரா என்றாலும் ராம, ராம என வருமே!*
*மற, மற என்றாலும் அறம், அறம் என தருமே!*
*சுர, சுர என்றாலும் அசுரன் என உடன் வதமே!*

*பிற, பிற என்றாலும் உறவு எனஉடன் படுமே!*

*நன்றி பாராட்டுவதில் நினக்கு நிகர் நீயே*
*அன்பு செய்வதில் மனிதன் - நினக்கு நிகர் நீயே*
*முன்பு யோசனையில்லையெனினும் முடிந்த நிகர் நீயே*
*என்பு தோல் போர்த்திய மனமே! நிகர் நீயே*

*எமக்கெலாம் நீயே இலக்கு; உமக்கோ இலக்கிலை*
*தமக்கெலாம் நாடே இலக்கு; தரணியில் மனைஇலை*
*ஜெகமெலாம் பகிரங்க தரிசனம்; சீதைக் கில்லையே*
*உளமெல்லாம் இராம், ஆத்மாராம்; நினதோ! சீதாராம்*

*புனர் அறிவு, புதிர் அறிவு, புணர் அறிவு, ராமராம*
*புனர் பூசம், புதிய நேசம், புனர் வாழ்வு, ராமராம*
*புனர் பாதம், புதிய தேசம், புகல் காதை, ராமராம*
*ஜெகம் புகழும் புண்ணிய புனர் கூட்டம் ராமராம*

## திருப்பாவை பாசுரம் – 25

*ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓரிரவில்*
*ஒருத்தி மகனாய் ஒளித்து வளரத்*
*தரிக்கிலா னாகித் தான்தீங்கு நினைந்த*
*கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில்*
*நெருப்பென்ன நின்ற நெடுமாலே உன்னை*
*அருத்தித்து வந்தோம் பறைதருதி யாகில்*
*திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம்பாடி*
*வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்*

*மகன்ஒன்று, மறைஇரண்டு, நேர்மறைகௌசல்யை, எதிர்மறை கைகேயி. இப்படியாக புனர்பூசம் நட்ஷத்திரமாக இரு வேறு தத்துவங்களுக்கு இடம் கொடுத்து விளங்கும். இதையே பாசுரத்தில் செல்வமும்,*

சேவகமும் என்று இரண்டு வெவ்வேறு நிலை பாடுகளை நாம் அறிய முடியும்.

செல்வத்தின் நிலை பகிரங்கமாகும். செல்வம் தூங்காது பகிரங்கமான தன் வேலையைச் செய்யும். அதுபோலவே புனர்பூச நட்ஷத்திரக்காரர்கள் பகிரங்கமான மக்கள் தலைவர்களாக வெற்றி காண்பார்.


அதே நேரத்தில் அந்தரங்கமாக தனித் தனியாக புரிதல் உணர்வுடன் சேவகம் செய்து மக்கள் மனதில் நீங்காத இடத்தை நிலையாக பெறுவர்.

நெருப்பென நின்ற நெடுமால் தரிசனம் தீமையை தண்டிக்கும், நன்மையை ஆசிர்வதிக்கும். இந்த சகசதரிசனம் அவரவர் எண்ணத்திற்கேற்ப அருள் புரியும்.

மேலும் பரநாததத்துவம் பத்து இடங்களில் அமைந்துள்ளது. கடல் அலைகள், மணி ஓசை, யாழ், தும்பி, புல்லாங்குழல், வீணை, ஸர்ப்பம், முரசு, சலங்கை, யானை இந்த புனித பத்து இசைகளை பறை தருதியாகில் என்ற பாசுரத்தில் யாசிக்கின்றோம். அதை பெறும் பொழுது வருத்தத்தை தீர்க்கும்.

ஒரே மகன், இரண்டு தாய்கள், ஒரே முகம் இரண்டு கண்கள், ஒரே மனம் இரண்டு எண்ணங்கள் இந்த நிலைப்பாடு தான் ஒருத்தி மகனாய்ப் பிறந்து, ஒருத்தி மகனாய் வளர்ந்தான் இதைத்தான் ஒன்றை அந்தரங்கம் என்றும், மற்றொன்றை பகிரங்கம் என்றும் ராமனுடைய அம்சம் கிருஷ்ணனிடமும் வெளிப்படுகிறது.

*பகிரங்கம் "நெருப்பென நின்ற நெடுமால் கருத்தை பிழைப்பித்த" அதாவது கெடுதல்களை ஏற்படுத்தக் கூடிய கம்சனுக்கு கூற்றாக அமைவான் அதே நேரத்தில் அந்தரங்கமாக உன்னை அருத்தித்து வந்தால் பறை தருவான். பறைமுரசை தந்துவிட்டால் திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம்பாடி வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்து வாழ்வோம். புனர்பூசமே வருக புனர்பூசமே அருள்க!*



**மூலமந்திரம் :**

ராமராம ராமராம ராமராம ராம்
ராமராம ராமராம ராமராம ராம்

| ★ சாயி பூசம் ★ | *அபிராமி அந்தாதி 29, 30, 31, 32* |
|---|---|
| <br>**ஜோதி மயம்**<br>*பாதம் 1 : அரசு*<br>*பாதம் 2 : ஆச்சா*<br>*பாதம் 3 : இருள்*<br>*பாதம் 4 : நொச்சி* | *ப்ரம்வர்ச்சஸாய வித்மஹே<br>மஹா திஷ்யாய தீமஹி<br>அபயங் க்ருணுதாம் தீமஹி<br>ஜோதி புஷ்ய ப்ரசோதயாத்*<br><br>*பிறப்பெடுத்தாலும் பரலோகம்<br>சிறப்புடன் அடையும் வழி கொடுக்கும்<br>முடிவில்லாத நிலையினிலே<br>முன்னிலை தருவாய் நமோ நமோ*<br><br>*உலகம் தோன்றிய நாள்முதலாய்<br>உயர்வாய் உந்தன் நிலை இருக்கும்<br>ஜோதி மயம் உன் தனிக் கருணை<br>ஆதியானவா நமோ நமோ*<br><br>*ஓம் சிவாய மே நம சிவாய மே<br>த்ரயம்பகாய மே சாயி தேவாய ஓம்* |

## பரவியோமம், பரம ஜோதிமயம், பரம்பரம் அனந்தம், அசலம்

*நான் உயரஉயர போகிறேன் நீயும் வசி வசி<br>
நான் ஜோதி மயமாய் உயர்கிறேன் நீயும் ஒளிர், ஒளிர்<br>
நான் முடிவில்லாமல் வளர்கிறேன் நீயும் வளர், வளர்<br>
நான் சனிகரைந்து நேசிக்கிறேன் நீயும் புசி, புசி*

*அருட்பெருஞ்ஜோதியா? அருள் பெருஞ்ஜோதியா?<br>
அருள் பெறும் ஜோதியா? அருள் தரும் ஜோதியா?<br>
ஆசை போது மென்றால் அன்பு தருமமாகும் ஜோதி நீ<br>
அன்பு தருமமான பின் அனைத்தும் அருட் பெருஞ்ஜோதியே!*

*பூசமே, பாசமே, பூசலே இல்லாத நேசமே*
*பூசிய சிரிப்பு - வீசிய விளைவு - ஏசிய இயற்கை*
*பூரணமான பணியே, புகழ் பேசும் சூழ் நட்பே*
*பூட்டிய அடிப்படைகளில் கூடவே பேசி பூட்டாத*
*பூச்சரடே*

*எல்லையிலாத அனந்த நாராயணனே நீ தானே!*
*கவலையிலாத அசலான கிருஷ்ணனே நீ தானே!*
*உருவமிலாத அருவமே! சிவசக்தி நீ தானோ?*
*கேட்டவரங் கொடுக்கும் பரபிரம்மம் நீ தானோ?*

*சுயமாக ஒளிவிடுவதில், வழிவிடுவதில் அசல் நீ!*
*சுவையான தேன் தானுங் கெடாமல், காக்கும் அயல் நீ!*
*சுரமான கீதங்களில், வளமான மேல் நோக்கிய வயல் நீ!*
*சுண்டிவிட்டாலும் கீழே விழாமல் உயரும் உயிர் நீ!*

*பூசமே புருஷலட்சணம் - தான் உண்டு தரமும் உண்டு.*
*நேசமே பூசலட்சணம் - நட்புண்டு நலமும் உண்டு.*
*வாசமே ஆன்மலட்சணம் - ஞானமுண்டு மோட்சமும் உண்டு.*
*வம்சமே வாழ்வின் லட்சணம் - உறுதி உண்டு அட்சய முண்டு*
*இறுதியும் உண்டு.*

## திருப்பாவை பாசுரம் – 26

*மாலே மணிவண்ணா மார்கழிநீ ராடுவான்*
*மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்*
*ஞாலத்தை யெல்லாம் நடுங்க முரல்வன*
*பாலன்ன வண்ணத்துஉன் பாஞ்ச சன்னியமே*
*போல்வன சங்கங்கள் போய்ப்பா டுடையனவே*
*சாலப் பெரும்பறையே பல்லாண் டிசைப்பாரே*
*கோல விளக்கே கொடியே விதானமே*
*ஆலி னிலையாய் அருளேலோ ரெம்பாவாய்.*

கோல விளக்கே பரம ஜோதி மயமாகும். கொடியே விநோதமான பரவியோமமாகும் அகிலமே பாலன்ன வண்ணத்து பாஞ்ச சன்னியமாகும்.

சாலப் பெரும்பறையே பரம்பரம் ஆகும். ஆனந்தமே ஆலின் இலையில் எளிய அருளாகும். ஞாலத்தையெல்லாம் நடுங்க வைக்கும் விபுலமே சன்மார்க்க சங்கங்களாகும்.

புருவமத்தியில் பூசமானது அருட்பெருஞ்-ஜோதியாக விளங்க வேண்டும். அதை அறிவிக்கவே சங்குகள் வேண்டும். மேலும் முறைப்படுத்தவே சங்கங்கள் வேண்டும். மேற்படி சங்கத்தில் சன்மார்க்கம் முறைப்படி தீபங்கள் ஏற்றப்பட வேண்டும். சன்மார்க்க கொடி பறக்க வேண்டும். நடவடிக்கைகள் பனிவிடாமல் அணையா அடுப்பு வேண்டும்.

அன்னதானம் வேண்டும். அலங்கார சோறு வேண்டும். ஆலிலையில் அருளும் வேண்டும். உலகமே வியக்க வேண்டும். எதிரிகளும் பாராட்ட வேண்டும். ஏழுதிரைகள் நீக்க வேண்டும் அருட்பெருட்ஜோதி காணவேண்டும். கண்ணா கருநீல வண்ணா என தொடங்கி மாலே மணிவண்ணா என்ற உன் தரிசனம் ஆகும். பெருஞ்ஜோதியாய் ஆலிலையில் தனிப்பெருங்கருணையாய் எல்லோரும் பெற வேண்டும். ஆனால் அது பூசத்திற்கே சொந்தம் எனவே

ஞாலத்தை எல்லாம் நடுங்கவைக்கும் பாலன்ன வண்ணத்து உன் பாஞ்ச சன்னியமே, அருட் பெருஞ் ஜோதியாகும். பல்வேறு சங்கங்கள் பலப்பல போய்பாடு உடையவைகள், இருந்தாலும் சமரச சுத்த

சன்மார்க்க சங்கம். சாலப்பெரும் பறையாக கொடிய விதனமாக கோல விளக்காக, ஒளிர்க்கச் செய்வதே அருட்பெருஞ்ஜோதியாகும். இந்த பூச ஜோதி பரம்பரையாக பாரம்பரியமாக, ஏழேழு பிறப்பிற்குப் பின் கிடைக்கும் நக்ஷத்திரமாகும். இவர்கள் அசலானவர்கள். இவர்களுடைய மூலக் கூறுகள் (Originality) வியப்பிற்குரியவை.

மேலும் அடிமுடி காணாத அளவிற்கு ஆனந்தமாக திகழ்பவர்கள். புரட்சி சிந்தனையாளர்கள் ஐம்புலன் இச்சைகளை வித்தியாசமான வழியில் வெல்லத் தகுந்தவர்கள். சிறுக கட்டி பெருக வாழ ஆலின் இலையிலே அருளும் கண்ணன் கருநீல வண்ணன் இவர்களே யாவர். பூசமே வருக பூசமே அருள்க!



**மூலமந்திரம் :**

அருட்பெருஞ்ஜோதி... அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை... அருட்பெருஞ்ஜோதி

★ **சாயி** ★
**ஆயில்யம்**



**சூம்சம**
**அரசாட்சி**

*பாதம் 1 : புன்னை*
*பாதம் 2 : முக்கொட்டை*
*பாதம் 3 : இலந்தை*
*பாதம் 4 : பலா*

*அபிராமி அந்தாதி 37, 38, 39, 40*

*சர்பராஜாய வித்மஹே*
*மஹாரோசனாய தீமஹி*
*மதுமஜ் ஹோமி தீமஹி*
*தன்னாஸ்லேஷா ப்ரசோதயாத்*

*ஆதிக்கம் செய்திடும் அருமருந்தே*
*அழைத்தால் வந்திடும் ரகசியமே*
*நித்தியமான ராஜ்ஜியமே*
*நினைந்தால் துணைவா நமோ நமோ*

*தேடியே உதவி செய்து வரும்*
*கூடியிருந்து குளிர வைக்கும்*
*சூட்சுமங்கள் தனைக் கொண்ட*
*சுந்தர நிலையே நமோ நமோ*

*ஓம் சிவாய மே நம சிவாய மே*
*த்ரயம்பகாய மே சாயி தேவாய ஓம்*

## பரமலோக ஆதிக்க, நித்திய சாம்பிராச்சியம் பரபதம், பரம சூட்சுமம்

*ஆளப்பிறந்தவரே; ஆதிக்க நாயகரே*
*இகபர சாம்ராஜ்யமே; இதமான பதமே*
*வெற்றியின் இரகசியமே; வேத சூட்சமமே*
*நிரந்தர சந்தேகமே நீரே தீர்மானமே*

*நாடகமேடை, ஊடக ஓடை, பரலோகாடை*
*எங்காயினும், எப்படியாயினும், எதுவாயினும்*
*வரவாயினும், செலவாயினும், தர்மமாயினும்*
*நியாயமாயினும், சத்தியமாயினும் சூட்சமம் நீயே*

*நின் தந்திரங்களும், தயவும் கூட மந்திரமாகும்*
*நின் மந்தங்களும், மாயமும் கூட தந்தங்களாகும்*
*நின் லட்சணங்களும், லட்சுமியும் கூட லட்சியமாகும்*
*நின் ஹிம்சைகளும், இதயமும் கூட யதார்த்தமாகும்*

*ஆசையில்லை எனில் புத்தனின் சூட்சுமம்*
*ஆசை உண்டு எனவே சித்தன் நின் சூட்சுமம்*
*ஆசைப்படுவதே, அதற்கென மலர்வதே - நீவிர்*
*ஆசை அத்தனையும் பரலோகம் செல்ல உரிமமே -*
*நீவிர்*

*இகபர சுகமாக, சுகமான போதாந்தங்களே*
*இகமாயின் இதயசுத்தியுடன் விலாசபிரகாசமே*
*பரமாயினும் ஆதிக்க வனப்புடன் உடன் வருவிப்பாயே*
*சுயநலங்கள் பரநலங்களாய் பொது நடம் புரியுமே*

*உன்னை பாராட்டாமலிருந்தால் உலைச்சலடைவாய்*
*உன்னை தாலாட்டாமலிருந்தால் உலுக்கிவிடுவாய்*
*உன்னை ஓரங்கட்டினால் ஓரங்களில்லாமல் கிழியும்*
*உன்னை உபசரித்தால் உலகம் உய்யும்!*

## திருப்பாவை பாசுரம் – 27

*கூடாரை வெல்லும்சீர்க் கோவிந்தா உன்தன்னை*
*பாடிப் பறைகொண்டு யாம்பெறும் சம்மானம்*
*நாடு புகழும் பரிசினால் நன்றாகச்*
*சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே*
*பாடகமே யென்றனைய பல்கலனும் யாமணிவோம்*
*ஆடை யுடுப்போம் அதன்பின்னே பாற்சோறு*
*மூடநெய் பெய்து முழங்கை வழிவாரக்*
*கூடியிருந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய்.*

கூடியிருக்கச் செய்வது கோடி, கோடி புண்ணிய-மாகும். இந்த நித்திய சாம்ராஜ்யத்தை நடத்த யாரால் முடியும். ஆயில்யத்தின் அயராத உழைப்பே, தளராத படிப்பே, பிறழாத சூட்சமமே, பரலோக ஆதிக்கமே, பரமபதமே, என்றெல்லாம் சொன்னால் மட்டும் போதாது. உன்னை பாடி, பாராட்டி பரிசளிக்க வேண்டும். நாடு புகழும் பரிசுகளான, சூடகமே, தோள்வளையே, தோடே, செவிப்பூவே என்றெல்லாம் பரிசுகள் அளிக்கப்பட வேண்டும்.

மணவிழாவில் மாப்பிள்ளை அழகு, மாலைகள் மாப்பிள்ளைக்கே சொந்தம், மாப்பிள்ளையே நாயகன் இந்த சுபாவத்தில் தான் ஆயில்யத்தின் ஆதிக்கம், அனைத்தையும் தன்னகத்தே கொண்டிருக்கும்.

பாராட்டுகளும், பொன்னாடைகளும், அதன்பின்னே பால் சோறும், நெய்சோறும், சர்க்கரை பொங்கலும் ஊக்கத்திற்கு அளிக்கப்படும்.

கூடாரை வெல்லும் சீர் கோவிந்தா என பாடி, பாடி பறை கொண்டு எல்லோர்க்கும் அருள் கிடைக்க வழிவகை செய்பவர்களே ஆயில்யமாகும். ஆனாலும் சன்மானம் உள்ளம் குளிர உனக்கேயாம் அளிக்க வேண்டும்.

இந்த பரம ரகசியத்தை, அணுகுமுறையை, வெளிப்பாட்டை வெற்றியை வேறு எவரும் செய்ய இயலாது. எனவே கூடியிருந்து குளிர்வது என்பது உலகியலில் ஒரு எல்லைக் கோடாகும். கூடி மகிழாது ஒதுங்கி இருப்பவர்களையும் அன்பால் வென்று அடிமைப்படுத்தும் குணக்குன்றே ஆயில்யமாகும்

இந்த நாடு புகழும் பரிசினால் நன்றாக சூடகமே, தோள்வளையே, தோடே, செவிப்பூவே பாடகமேயென்றனைய பல்கலனும் யாமணிவோம். இந்த நித்திய சாம்பிராச்சியத்தை ஆயில்யம் மட்டுமே சாதிக்க முடியும்.

இந்த அன்பு ஆதிக்கத்தில் ஆயிரமாயிரம் பேர் உழைத்திருந்தாலும் அந்த உழைப்பை திரண்ட வெண்ணையாக உருவாக்கும் பரம சூட்சூமம் உங்களுக்கு மட்டுமே தெரியும்.

கூடாரை வெல்லும் சீர் கோவிந்தா ஆயில்யம் நீ சொல்லும் வார்த்தைகளே, நீ காட்டும் பாதைகளே பரமபதமாக அமைந்து ஆயில்யத்திற்கு புகழ்சேர்க்கும். பாடிப்பறை கொண்டு நீ பெறும் சன்மானம் நாடு புகழும். நாடு உன்னையே புகழும் உன் உழைப்பை போற்றும். புத்தாடையும், பால் சோறும், நெய்யோடு கிடைக்க வழிவகை செய்யும். ஒதுக்கிய அலங்காரங்கள் அத்தனையும் உனது உழைப்பால் அனைவருக்கும் கிடைக்கும். எனவே ஆயில்யம் சொந்த வேலையை விட வந்த வேலைக்கு மதிப்பளித்து சமுதாய தலைவர் ஆவார்கள். ஆயில்யமே வருக. ஆயில்யமே அருள்க!



**மூலமந்திரம் :**

ஏஹி ஸர்ப்ப மஹாபாக பிம்மேஸ்மின்
ஸன்னிதம் குரு பூஜார்த்தம் தவாமஹம்
பக்த்யா ப்ரார்த்தயாமி ஸமாஹித !

| ★ சாயி மகம் ★ | அபிராமி அந்தாதி |
|---|---|
|  | மஹா அனகாய வித்மஹே<br>பித்ரிய தேவாய தீமஹி<br>வித்மய லோகம் தீமஹி<br>தன்னோமகாஃ ப்ரசோதயாத்<br><br>தாயுள்ளம் உன் தனிக்கருணை<br>தன்னிகரில்லா தந்திரங்கள்<br>பணிவோர் தமக்கு துணையாகும்<br>பாமரர் துணையே நமோ நமோ |
| **விசித்திர தந்திரம்**<br>பாதம் 1 : ஆல்<br>பாதம் 2 : முத்திலா<br>பாதம் 3 : இலுப்பை<br>பாதம் 4 : பவளமல்லி | விசித்திரமாக வினைபுரியும்<br>விளையும் தூய்மை ஆச்சரியம்<br>சரணடைந்தோர்க்கு கைகொடுக்கும்<br>சர்வ இன்பமே நமோ நமோ<br><br>ஓம் சிவாய மே நம சிவாய மே<br>த்ரயம்பகாய மே சாயி தேவாய ஓம் |

**பரம்பரம், அநாமய நிராதர மகோசரம்,**
**பரம தந்திரம், விசித்திரம்**

*மதுரம், மதுரம் கீதசுதம் - மகமே அகமே*
*ராதே ச்யாமா கீதசுகம் - அகமே மகமே*
*மதுரம் மதுரம் ஆனந்தம் - மக்கள் மகமே*
*அநாத பாபா கீதசுதம் - மந்திர மகமே*

*ஜெகமாளும் மகமே இகத்திலே பரம் காண்பாய்*
*பராபரமே, ஆலமரமே, கலைதரமே, தலை திறமே*
*திக்கற்றவர்க்கு துணையே, ஆதியிலா ஆதரவே*
*அநாமய உருவே, அன்னைச் சரமே, அன்பமுதே*

கேட்பவர்கு கேட்டதை கொடுக்கம் மகாசக்தி
கேளாதவர்கு இலக்கை அடுக்கும் மகா முக்தி
கெட்டவருக்கும் கொட்டம் அழிக்கம் மகாயுக்தி
தொட்டவருக்கும் பட்டம் அளிக்கும் மகாபக்தி

சித்திரமும் கைபழக்கம்; நினதெல்லாம் விசித்திரமே
உத்திரமும் மன பழக்கம்; நினதுலகோ பத்திரமே
எத்திறமும் உன் பழக்கம் எனவே நின் ஆணவமே
பராபரமும் வழிவழியாய் மாறாது காலம் மாற்றிடுமே

பிறவிப் பயனால் சந்திக்கும் சோதனைகள்
பிறந்த மயனால் சேர்ந்திடுமே சாதனைகள்
கறந்த பாலிலும் குறைகாணும் எதிரிகள்
மறந்தும் வாட்டுவர் மக்களையும் வாட்டுவரே

தந்திரமோ, மந்திரமோ, விசித்திரமோ தலைமைநீயே
வந்திடுமோ, சென்றிடுமோ அலைகள் கரையில்நீயே
காலத்தால் காலத்தை கண்டிடவே கரைவாய்நீயே
கோலத்தால் சூலத்தை காட்டியே ஆள்வாய்நீயே

## திருப்பாவை பாசுரம் – 5

மாயனை மன்னு வடமதுரை மைந்தனை
தூய பெருநீர் யமுனைத் துறைவனை
ஆயர் குலத்தினில் தோன்றும் அணிவிளக்கைத்
தாயைக் குடல்விளக்கம் செய்ததா
மோதரனைத்
தூயோமாய் வந்துநாம் தூமலர்தூ வித்தொழுது
வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்கப்
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசாகும் செப்பேலோ ரெம்பாவாய்.

மாயன் முதல் வார்த்தையே மகம் ஆகும். ஏனென்றால் மாயன் விசித்திரமானவன். பரமதந்திர-மானவன் இதைத்தான் மகமும் உலகிற்கு அறிவிக்கிறது. விசித்திரமும், தந்திரமும் ஒருங்கே அமையப் பெற்ற தூய பெருநீர் யமுனை துறைவனே இங்கு மகம் என்கிறோம்.

ஏனென்றால் பெருநீர் கங்கை ஆகும். அதே நேரத்தில் தூய பெருநீர் யமுனை ஆகும். இந்த விசித்திரத்தை அணிவிளக்காக மகம் நக்ஷத்திரம் உலகத்திற்கு பாரம்பரியமாக எடுத்து இயங்குகிறது.

தாய் அனாமய நிராதர மகோசரம் என்ற வகையிலே தாயுள்ளத்துடன் மன்னிக்கும் மாண்பு தாயை குடல் விளக்கம் செய்த தாமோதரனுக்கே உண்டு. எனவே மகத்தின் அருகே வந்து தூவி தொழுது சரணாகதி அடைந்து, தவறை உணர்ந்து வாயினால் பாடி, மனதில் சிந்திக்க பிழைகள் தூசாகும். எனவே இந்த மகம் நஷ்ஷத்திரம் தாயுள்ளம் கொண்டு பிழைகளை பொறுத்தருள வேண்டும் என்று செப்பேலோர் காக்கப்படுவர்.

இங்கும், அங்கும், எங்கும் தன் தரிசனம் தரும் மாயனாக தந்திர நாயகன், விசித்திர தலைவன் மகம் நஷ்ஷத்திரமாகும்.

மகத்தை அண்டி தூயோமாய் வந்து, நாம் தூமலர் தூவித்தொழுது நாவினால் பாடி மனதினால் சிந்திக்க நாம்முன்பு செய்த பாவங்களும், இனி நமையறியாது நாம் சேர்த்துக் கொள்ளும் பாவங்களும் யாகத் தீயலிட்ட நெய்யில் தூசாகும். மகத்தினுடைய சேர்க்கையால் மற்றவர்களுக்கும் பாவம் தொலையும்.


*முன்பு செய்த பாவங்களும் தொலைந்து போகும் அதற்குரிய பரிகாரங்களும் தண்டனைகளும் மகம் எதிர்கொள்ளும் விசித்திரமான முறையில் பாவவி மோசனங்கள் கைகூடும். மகத்தினுடைய நிலைப்பாடும் சொல்லாட்சியும், செல்வாக்கும் தந்திரமாக வெற்றி கொடுக்கும். எனவே மகமே வருக. மகமே அருள்க!*



**மூலமந்திரம் :**

ஓம், ஐம், ஹ்ரீம், ஸ்ரீம், க்லிம், சௌம்
ஆதி பராசக்தயே நமஹ

**★ சாயி ★**
**பூரம்**



**கருமமே**
**கண்ணாயிளர்**

*பாதம் 1 : பலாசு*

*பாதம் 2 : வாகை*

*பாதம் 3 : ருத்ராட்சம்*

*பாதம் 4 : பலாசு*

*அபிராமி அந்தாதி 41, 42, 43, 44*

*அரியம்நாய வித்மஹே*
*பசுதேஹாய தீமஹி*
*ஜீவந்த விஸேம தீமஹி*
*பூர்வபல்குநி ப்ரசோதயாத்*

*வாசம் பொழியும் மலர்போல*
*வற்றா அட்சய வரம் நல்கும்*
*கோணம் கொண்ட நிலையினிலும்*
*குணத்தால் சிறப்பாய் நமோ நமோ*

*வேண்டிய தேவைகள் முடித்திட்டு*
*விநோதம் கொடுக்கும் கோகிலமே*
*வெண்மலர் சரமே உனதாகும்*
*ஜீவ சேர்க்கை நமோ நமோ*

*ஓம் சிவாய மே நம சிவாய மே*
*த்ரயம்பகாய மே சாயி தேவாய ஓம்*

## பராமுத நிராகாரம், விகாசனம், விகோடணம் பரசு கோதயம், அட்சயம்

*ஆடி பூரம் வரின் ஆடாத கால்களும் ஆடும்*
*பாடி பூரம் வரின் பாடாத குரல்களும் அதிரும்*
*தேடி பூரம் வரின் கேளாத குறைகளும் தீரும்*
*கூடி பூரம் வரின் கூடாத நிஜங்களும் குளிரும்*

*நிராகாரம், மணம், குணம் நிறைந்த அமுதமே*
*பராகாரம், மனம், பணம் நிறைந்த அகிலமே*
*ப்ராகாரம், அனல், தணல் நிறைந்த நிமலமே*
*மகாகாரம் புனர் - புணர் நிறைந்த பூவலமே*

வாழ்வதும், வளர்வதும், தேய்வதும் நின் அடிசேரவே
ஆள்வதும், அளிப்பதும், அணைப்பதும் நின் புகழ்பாடவே
பகைப்பதும், புகைப்பதும், வீழ்வதும் உடன் விளைச்சலே
மூர்க்கமும், மார்க்கமும், முயல்வதும் நின் கடைக்கண்ணே

கோஉரியும், கோணங்கியும், கோலமதில் கோடணமே
கோமகளும், கற்பகமும், கணநேரத்தில் அட்சயமே
கோசாரமும், க்ருகசாரமும், ஆசாரமும் சமசாகரமே
கோபாலனோ, கோவிந்தனோ, கோயிலிலே கோதயமே

ஏர்முனை தரணியிலே, போர்முனை பரணியிலே
பார்முனை பண்டமாற்றம் ஊர்முனை உதயத்திலே
வேர்முனை நீர்தேடும் கார்முனை கரைந்தோடும்
ஆர்முனை நீதியாகும் கூர்முனை உண்மையாகும்

உயிர்களுக்கும் பேரின்பம்; பயிர்களுக்கும் பேரின்பம்
உறவுகளுக்குள் பேரிலக்கு; நட்புகளுக்கும் பேரிலக்கு
உலகுக்கும் பேரமைதி; உரசலுக்கும் பேரமைதி
உதவிகட்கும் பேரிசைவு; உன்னடிகாண பேரிசைவு

## திருப்பாவை பாசுரம் – 28

கறவைகள் பின்சென்று கானம்சேர்ந் துண்போம்
அறிவொன்று மில்லாத ஆய்க்குலத்து உன்தன்னைப்
பிறவி பெறுந்தனை புண்ணியம் யாமுடையோம்
குறைவொன்று மில்லாத கோவிந்தா உன்தன்னோடு
உறவேல் நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது
அறியாத பிள்ளைகளோம் அன்பினால்
உன்தன்னைச்
சிறுபேரழைத்தனவும் சீறியருளாதே
இறைவா நீ தாராய் பறையேலோ ரெம்பாவாய்.

கறவைகள் பின் சென்றால் கானகத்தில் பராமுத நிராகாரம் என்கிற வகையில் கானம் சேர்ந்து உண்போம். இங்கே பசி நோக்கார் கண்துஞ்சார், ஆனால் அமுத கானத்தையே உணவாகக் கொண்டு பல்வேறு தெய்வீக அருள்களை விகாசனமாக, விகோடணமாக, விநோதமாக பூரம் நக்ஷத்திரக்-காரர்கள் அனுபவிப்பார்கள்.

இதற்கு முன் உதாரணமே ஆண்டாள் நாச்சியார் ஆவார். ஆடிப்பூரத்து ஆண்டாள் நாம் எல்லோரையும் அறியாத பிள்ளைகளாக அன்பினால் ரங்கனை.

சிறுபேரிட்டு அழைத்து உறவு கொண்டாடி நீக்கமில்லா உறவு தன்னை, குறை ஏதும் இல்லாத கோவிந்தா, என பாட அருள் பெற்று அனுபவிக்க கொடுத்து வைத்தவர்கள். ஆண்டாள் பூரம், மற்றும் ஆண்டாள் பூரமேயாகும்.

அட்சய பாத்திரமாக அருள் வளர்க்கும் மற்றும் அனைத்து செல்வங்களையும் தரும், பூரம் நக்ஷத்திரக்காரர்கள் இப்பிறவியல் புண்ணியம் செய்தவர்கள், ஜீவதிசைகயில் பரமாத்மாவை சேருவது, கலப்படமற்ற அன்பினால் மட்டுமே முடியும் என்பதை உள்ளங்கை நெல்லிக்கனி போல வாழ்க்கையில் நடத்திக் காட்டுபவர்களே பூரம் நக்ஷத்திரம்.

மலர்தலே வாழ்வின் இன்பம் எனவே விகாசனம் என்ற சொல்லுக்கேற்ப அறியாத பிள்ளைகளாகிய பூரம் நக்ஷத்திர தாரர்கள் அறிந்து கொள்ளவே விநோத நட்பு யதார்த்தமாக அமையும். மேலும் அடையும் வழியும் வித்தியாசமான விகோடணமாகும்.

*இந்த உறவு எல்லோருக்கும் கிடைக்க அருள் செய்யவே. பூரமே வருக! பூரமே அருள்க!*



**மூலமந்திரம் :**

ப்ரஸீத விஸ்வேஸ்வரி விஸ்வ ப்ரஸீத
ப்ரஸீத விஸ்வேஸ்வரி வேதரூபிணி
ப்ரஸீத விஸ்வேஸ்வரி மந்த்ர விக்ரஹ
ப்ரஸீத விஸ்வேஸ்வரி விஸ்வ ப்ரஸீத

★ **சாயி உத்திரம்** ★



**உலக நாயகன்**

*பாதம் 1 : அலசி*

*பாதம் 2 : வாதநாராயண*

*பாதம் 3 : எட்டி*

*பாதம் 4 : புங்க*

*அபிராமி அந்தாதி 43, 44, 42, 41*

*மஹாபகாயை வித்மஹே*
*மஹாச்ரேஷ்டாயை தீமஹி*
*சுய வீரிய தாதா தீமஹி*
*உத்ரபல்குநி ப்ரசோதயாத்*

*உலகம் நலம் பெற செய்திடுவாய்*
*உபகாரங்கள் அளித்திடுவாய்*
*சேவை செய்யும் மனத்தினையே*
*செவ்வென கொண்டாய் நமோ நமோ*

*இறையருள் ஆசையை வளர்த்திடுவாய்*
*இன்பம் தரும் சொல் தந்திடுவாய்*
*விமோசனம் பெற வழிவகுப்பாய்*
*வீரிய பதியே நமோ நமோ*

*ஓம் சிவாய மே நம சிவாய மே*
*த்ரயம்பகாய மே சாயி தேவாய ஓம்*

## பரிபவ விமோசனம், குணரகிரம், விசுவம் பதித்துவ, பரோபரீணம்

*உருவம், தருவதும், உணர்வுதருவதும் உத்திரமே*
*அருவம் கனிவதும், அழகும் மிளிர்வதும் பத்திரமே*
*மருவும், மகிழ்வதும் மணமுடன் பயப்பது சத்திரமே*
*எருவும், கருவும் விசுவம் ஆவது சரித்திரமே*

*விடியாத இரவுகளுக்கு முடிவுகாண விடியவே*
*படியாத மாடுகளை பழக்கி தீர்க்கும் இனிமையே*
*வடியாத பாவங்களை வளைத்து ஒழிக்கும் விமோசனமே*
*அடியாத அதிர்ஷ்டங்கள் உதித்தோடும் உண்மையே*

பங்குனி உத்திரமே பங்குனி பல்கலை
தாங்குநீ உதவியே தகுந்த பல்பதிவு
சங்குநீ சத்தியமே சாகசம் பல்முடிவு
எங்குநீ என்றிடுமே இதயம் பல்தேவை

நன்றியும் நாணயமும் நின்னிரு பக்கங்கள்
குன்றும் குணமும் நின்னிரு தங்கங்கள்
செறிவும் சோர்வும் நின்னிரு அங்கங்கள்
சொந்தமும் பந்தமும் நின்னிரு போட்டிகள்

சுகபோகம் சுடச்சுட பலப்பல யதார்த்தம்
அகம் புறம் தொடத்தொட புதுப்புது பதார்த்தம்
ஜெகம் மகம் கலகலபென களிப்பது நிச்சயம்
அகம் அகம் ஊற்றென உவத்தலே உற்சவம்

எதிலும் எதிர்ப்பல்ல; எதிர் கட்சி கொறடா
அதிலும் வனப்பல்ல; புதிர் கட்சி சொத்தா
செதிலும் சேருமே; அதிர் கட்சி சவாலில்
மதிலும் வளையும்; தவிர் கட்சி ஆகுமே

## திருப்பாவை பாசுரம் – 29

சிற்றஞ் சிறுகாலே வந்துஉன்னைச் சேவித்துஉன்
பொற்றா மரையடியே போற்றும்
பொருள்கேளாய்
பெற்றம்மேய்த் துண்ணும் குலத்தில் பிறந்து நீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது
இற்றைப் பறைகொள்வா னன்றுகாண் கோவிந்தா
எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னோடு
உற்றோமே யாவோம் உனக்கேநாம் ஆட்செய்வோம்
மற்றைநங் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய்.

எற்றைக்கும், ஏழேழ் பிறவிக்கும் உந்தனோடு உற்றோமே ஆவோம் என்கிற செயல் திட்டத்தை பதிவு செய்யும் மனஉறுதி, உத்திரத்திற்கு இருப்பதினால்தான் இந்த நஷ்ஷத்திரங்கள் உலகத்திற்கே வழிகாட்டுகிறது. அதே நேரத்தில் உலகத்தில் பல்வேறு ஆசைகள் நோக்கங்கள் படிப்புகள் கொள்கைகள் என இருந்தாலும் அவற்றையெல்லாம் மாற்றி மற்ற நம் காமங்கள், மாற்றேலோ ரெம்பாவாய் விமோசனம் தேடும் உத்திரம் வாழ்க, வாழ்க! 28 பாடல்கள் பாடி சரியான தருணத்தில் குற்றங்களுக்கு மன்னிப்பும் கேட்டு கோவிந்தன் எனும் அருளையும் பெற்று, காரியத்தை சாதிப்பதில் உத்திரமே வல்லவர். நாங்கள் நெய்திண்ணும் குலத்தில் பிறந்தாலும் அதாவது வயிற்று பிழைப்பிற்காக எந்த தவறுகள் செய்தாலும், அவற்றை எல்லாம் மன்னித்து பொறுத்தருள் செய்து, உன் பணி செய்ய எங்களுக்கு உணர்வூட்ட வேண்டும். இப்பிறவியில் மட்டும் அல்ல. இனிவரும் பிறவிகளும் கோவிந்தா உன்பணி செய்யவே எங்களுக்கு புத்தி புகட்ட வேண்டும். எங்கள் காமங்களை மாற்றி உன் பணி ஆகமங்களாக நிறைவேற்ற எற்றைக்கும், ஏழெழ் பிறவிக்கும் உன் தன்னோடு உற்றோமே ஆவோம்; உனக்கே நாம் ஆட்செய்வோம்;

இந்த தொலைநோக்கு செயல் திட்டத்தை பரிபவ விமோசனமாக நெஞ்சில் பதித்து செயல்படுபவர்களே உத்திர நஷ்ஷத்திரமாகும்.

சிற்றஞ் சிறுகாலே வந்துன்னைச் சேவித்து உன் பொற்றாமரை அடியே போற்றும் பொருள் என்னவென்றால் உலகத்தில் அனைத்து விருப்பங்-களையும் எங்களுக்கு நிறைவேற்ற வேண்டும்.

மேய்த்துண்ணும் உலகத்தில் நீயும், நானும் ஒன்றாக பழகியதால், எங்கள் கோரிக்கைகளை புறந்தள்ளி விடக்கூடாது. குணத்தால் ஒன்றுபட்ட ஜீவாத்மா, பரமாத்மா குணரகிதமாக உலகத்தில் அனைத்து சுகங்களையும் கண்டோம். இந்த பரோபரீணம் உலகத்தில் உன்னதமானது. மேலும் இனி எத்தனை பிறப்பு எடுப்பினும், அத்தனை பிறப்புகளிலும் உன்னோடு உறவு கொள்வோம். உனக்கே அடிமை களாவோம். எங்களுடைய ஆசைகளில், நோக்கங்களில், காமங்களில் ஏதேனும் குற்றம் குறை இருப்பின் அவற்றை மாற்றி புனிதப்படுத்தி அருள் செய்ய வேண்டும். எனவே மற்றை நம் காமங்கள் மாற்றேலோர். எம்பாவாய் என்கிற நிபந்தனையில் உலகத்தை ரசிக்க பிறந்தவர்களே உத்திரமாவார்கள். உத்திரமே வருக! உத்திரமே அருள்க!



**மூலமந்திரம் :**

ப்ரஸீத விஸ்வேஸ்வரி விஸ்வ ப்ரஸீத
ப்ரஸீத விஸ்வேஸ்வரி வேதரூபிணி
ப்ரஸீத விஸ்வேஸ்வரி மந்த்ர விக்ரஹ
ப்ரஸீத விஸ்வேஸ்வரி விஸ்வ ப்ரஸீத

★ **சாயி** ★

**ஹஸ்தம்**



**சுத்தமும்**
**சுவாரஸ்யமும்**

*பாதம் 1 : அத்தி*

*பாதம் 2 : தென்னம்புள்ளை*

*பாதம் 3 : ஒதிய*

*பாதம் 4 : புத்ரசீவி*

*அபிராமி அந்தாதி 45, 46, 47, 48*

*ப்ரயச்சதாயை வித்மஹே*
*ப்ரக்ருப்ணிதாயை தீமஹி*
*புண்ய தாதா தீமஹி*
*தன்னோ ஹஸ்த ப்ரசோதயாத்*

*உள்ளத்து ஒழுக்கம் உருவாகும்*
*உன்னத நிலையை தந்துவிடும்*
*பஞ்ச பூதங்கள் அரசாளும்*
*பரிசுத்தமான பணி செய்யும்*

*சுவாரஸ்யமான வாழ்வளிக்கும்*
*சுத்தம் நிறை தரும் நிலை கொடுக்கும்*
*அனைத்தும் அறிந்திடும் அறிவு தரும்*
*ஆண்டவன் தரிசனம் நமோ நமோ*

*ஓம் சிவாய மே நம சிவாய மே*
*த்ரயம்பகாய மே சாயி தேவாய ஓம்*

## பஞ்சகிர்த்திய சுத்தகர்த்தத்துவம், தற்பரம் சிதம்பர விலாசம்

*ஐம்புலன் அகத்தே அணைத்து உள்ளங்கை*
*ஐம்பலன் சத்திய, தர்ம அகிம்சை சாந்தி, ப்ரேமை*
*ஐந்தலை பணிப்பும் ஒளிரும் மிளிர்நங்கை*
*அய்வரம் தரும் விரலிடை தளிர் உன்கை*

*அகசுத்த கர்த்தத்துவம்; சுய கர்த்தத்வமே*
*இகபர கர்த்தத்வம்; ஈடில்லா தத்துவமே*
*மெய்ஞான கர்த்தத்வம்; குறையிலா இலக்கணமே*
*சொல்ஞான கர்த்தத்வம்; இல்லாத மன்னிப்பே*

தானே பரமாகி, பரமே இகமாகிய அனிச்சையே
வானே வந்திறங்கி, வாசல் காட்டிய எனிச்சையே
மானே, மயிலாகி; வாகனமாய் ஓட்டிய
தனிச்சையே
கானே கடலாகி இசை உடலாகிய விலா

தவறுதல் என்னியல்பு; மன்னிக்கமாட்டாயா
உளறுதல் என்னியல்பு; உறவாட மாட்டாயா
அலறுதல் என்னியல்பு; அணைக்க மாட்டாயா
ஊடுதல் என்னியல்பு; சமனாக்க மாட்டாயா

தண்டித்தலே தீர்வென்றால் அருள் எதற்கு
கண்டித்தலே தந்தையென்றால் அன்பு எதற்கு
மண்டித்தலே ஆசானென்றால் விலாசம் எதற்கு
உண்டித்தலே கையென்றால் உயர்வு எதற்கு

முகவரி காட்டிய அழிவிலா மார்கமன்றோ?
அகவரி போற்றி சுழுமுனை சுவாசமன்றோ?
சகவரி ஏற்றிய சமரசமிலா பாசமன்றோ?
தகவரி இயற்றிய நிகரிலா ஆடலன்றோ?

## திருப்பாவை பாசுரம் – 4

ஆழி மழைக்கண்ணா ஒன்று நீ கைகரவேல்
ஆழியுள் புக்கு முகந்துகொடு ஆர்த்தேறி
ஊழி முதல்வ னுருவம்போல் மெய்கருத்துப்
பாழியந் தோளுடைப் பற்பநா பன்கையில்
ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்க முதைத்த சரமழைபோல்
வாழ உலகினில் பெய்திடாய் நாங்களும்
மார்கழி நீராடமகிழ்ந்தேலோ ரெம்பாவாய்.

*ஆழிமழைக் கண்ணா, உன் கையில் ஒன்றையும் ஒளித்து வைக்காமல் ஒரு துளி நீரையும் ஒளித்து வைக்காமல் அனைத்து நீரையும் மழையாக பொழியும் அஸ்தம் கைகளே உன் கைகள் எனவே ஹஸ்தம் என்ற இந்த கையான ஆழிபோல் மின்னி வலம்புரி சங்குபோல் அதிர்ந்து சரம், சரம் ஆக மண்ணுக்கு வழங்குகிறாய். அதுபோல்இந்தஹஸ்தநஷ்சத்திரம்பஞ்சபூதங்களுடைய நீர்சக்தி, நிலசக்தி, ஆகாயசத்தி, நெருப்புசக்தி, காற்றுசக்தி அனைத்தையும் உள்ளடக்கியதே இந்த ஹஸ்த சக்தியாகும். எனவே உலகில் நல்ல சத்சங்கம் இருந்தால் நல்ல மழை பொழியும்.*

*இல்லை எனில் இந்த ஹஸ்த சக்தி மன்னிக்காது தண்டித்து விடும். இந்த இறை சக்தியின் விலாசத்தை மகிழ்ச்சியை மார்கழி தரிசனத்தில் காணலாம். இயற்கை இனிமையானது இயற்கைக்கு ஐந்து முகங்கள் அது தான் ஹஸ்தத்திற்கு ஐந்து விரல்கள் சங்கு,! சக்கர,!கதா புஷ்பம்.*

*நான்கு கைகளில் நன்கமைந்து ஹஸ்தத்தின் பெருமையை பறை சாற்றும், ஜீவ ஜோதியே இந்த பாடலின் ஹஸ்தமாய் வருகிறது.*

*உள்ளங்கையிலே ஒரு துளி நீரையும் ஒளித்து வைக்காமல் அனைத்தையும் வையகம் வாழ நன்-கொடையாக மழைபோல் தரும் அஸ்த நக்ஷத்திரமே சுத்த கர்த்தத்துவத்தை அரங்கேற்றம் செய்கிறது. இந்த வகையான ஆழிமழைக் கண்ணன் ஒரு கையில் சங்கு போல் முழங்கி மறுகையில் சக்கரம் போல் மின்னி சரம், சரமாக மழையை உலகத்திற்கு அளிக்கிறது. இங்கே ஹஸ்த நக்ஷத்திரம், பாவங்களை மன்னிக்காது,*

சக்கரத்தை கொண்டு தண்டிக்கும். மறுகையில் ஏந்திய சங்கின் வெண்மை சிதம்பர விலாசத்தை அதாவது இறைவனின் முகவரியை முழங்கி அறிவிக்கிறது.

எனவே கரதரிசனமே தற்பரமாகும். ஹஸ்தமே கரதரிசனமாகும். ஹஸ்தத்திலுள்ள ஐந்து விரல்களும் பஞ்சபூதங்களின் பணியை கறைபடியாமல் வெண்சங்கு உலகத்திற்கு வழங்கிக் கொண்டிருக்கும்.

கருத்தமேனியும் பருத்த தோள்களும், சரம் சரமாக அம்புகளை மழை அம்புகளை அனுப்பி பத்மநாபனை நமக்கு நினைவூட்டும், மார்கழி நீராடுதல் மகிழ்ச்சியை அளிக்கவல்லதான யதார்த்த மழையை அளிப்பவர்களே ஹஸ்த நக்ஷத்திரர்கள். ஹஸ்தமே வருக ஹஸ்தமே அருள்க!



**மூலமந்திரம் :**

ஓம் கணபதயே நமஹ

★ **சாயி**
**சித்திரை** ★



**பிரம்மாண்ட**
**புரட்சியாளர்**

*பாதம் 1 : வில்வம்*

*பாதம் 2 : புரச*

*பாதம் 3 : கொடுக்காப்புளி*

*பாதம் 4 : தங்கசுரளி*

*அபிராமி அந்தாதி 49, 50, 51, 52*

*மஹா த்வஷ்டாயை வித்மஹே*
*ப்ரஜாரூபாயை தீமஹி*
*சுப யுவதி தீமஹி*
*தன்னோ சைத்ரா ப்ரசோதயாத்*

*வெளிப்படையான செயல்வடிவம்*
*வேந்தர்குரிய உயர்வளிக்கும்*
*தனித்தன்மையுடன் பெரும் அறிவும்*
*புனிதம் பெறுமே நமோ நமோ*

*ஏழு சக்திகள் அருள் கிடைக்கும்*
*ஏற்றம் தரும் நல்வாழ்வளிக்கும்*
*உள்ளம் குளிரும் நிலை கொடுக்கும்*
*உணர்வே உயர்வே நமோ நமோ*

*ஓம் சிவாய மே நம சிவாய மே*
*த்ரயம்பகாய மே சாயி தேவாய ஓம்*

**பகர் சுபாவம் புனிதம் அதுலம் அதுலிதம் பராம்பர நிராலம்பனம்.**

*சித்திரையில் பிறந்த*
*அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகனே*
*வெண்திரையில் சிறந்த*
*துகிலாண்டகோடி பிரமிக்கும் வாலிபனே*
*அருள் திரையில் நிறைந்த*
*மயிலாண்ட முருகனை தரிசித்த பாலகனே*
*நித்திரையில் நிறைந்த*
*துயிலாண்ட நீவீர் ஏற்றிய விளக்கில் சாதகனே*

பிரம்மாண்டமே, பிரமிப்பே, பிரமாத பிரசங்கமே
விரதமங்களமே, விராலியே, விளக்கமே, விலக்கமே
கிரம சங்கல்பமே, கிராம சஹஸ்ரமே, கிரணபூசமே
சிரம சந்தோஷமே, சிரம் காணா நிராலம்பனே, சீராளமே

குருதோஷ நிவர்த்தி, கோடிவரினம் இது கிடைக்காது
உரு தேச தரிசனம், கோடிதேடினும் இது கிடைக்காது
பரு நேச ஆன்மீகம், கோடி செய்யும் இது மறைக்காது
தரு அருள் எதிரிடை, கோடி பகைக்கும் இது
மறைக்காது

அருட்பெருஞ்ஜோதி - ஆசை பெறுஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி - அதை தனக்கெனுஞ் ஜோதி
அருட்திரை ஆயினும் - இருள்நீக்கி ஒளிரும் ஜோதி
அருட் ஜாதி அதுவே ஜீவ ஜாதி - மாற்றே அசுர ஜாதி

தலைவன் நீயே! தக்காரும் தானே சேர்ந்த கூட்டம்
தாதா நீயே! மிக்காருக்கு தானே சேர்ந்த கும்பல்
திகிலும் நீயே! மிலேச்சருக்கு தானே எதிர்த்த குரவர்
தீயும் நீயே! முருகருக்கு தானே முளைத்த முனைவர்

பாராட்டாமல், பண்பாடாமல் நீ சோர்ந்திடுவாய்
தேரோட்டாமல், தீ காட்டாமல் நீ மூடிடுவாய்
காலாட்டாமல், கை உழைக்காமல் நீ வாடிடுவாய்
சொல்லாமல், கேட்காமல் நீ அருள் புரிவாய்

## திருப்பாவை பாசுரம் – 6

புள்ளும் சிலம்பினகாண் புள்ளரையன் கோயிலில்
வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ
பிள்ளாய் எழுந்திராய் பேய்முலை நஞ்சுண்டு
கள்ளச் சகடம் கலக்கழியக் காலோச்சி

*வெள்ளத் தரவில் துயிலமர்ந்த வித்தினை*
*உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும்*
*மெள்ள எழுந்து அரியென்ற பேரரவம்*
*உள்ளம் புகுந்து குறிர்ந்தேலோ ரெம்பாவாய்.*

புள்ளும் சிலம்பின காண் அகில உலகத்தில் வெளிப்படையானது பறவை இனமேயாகும்.

இந்த சுபாவமான வெளிப்படை அனுபவத்தில் தலைசிறந்து விளங்கும் பறவைகளின் அரசன் கருடன் சித்திரை நட்சத்திரம் தான். எனவே கருடனின் கோயிலில் வெள்ளி வெள்ளை விளிசங்கின் போராட்டம் கேட்டிலையோ? வெள்ளை மனம் கொண்ட சித்திரை நட்சத்திரம் உலகத்தை கருட பார்வையில் துல்லியமாக கணிக்ககூடியவர்கள். மேலும் இந்த கருடப்பார்வையும் ஆருடப் பேச்சும் சக்திவாய்ந்த புரட்சியை எதார்த்தமாக வெளிப்படுத்தும்.

எண்ணங்கள் புதிர்கள் அல்ல புரட்சியாகும். சித்திர குப்தனின் கணக்குகள் பொய் ஆகாது. எனவே அதற்கு உண்டானவைகளாக மாறும். பொய் முறையானாலும் கலக்கழிய காலோச்சி வெற்றி காண்பவர்கள் சித்திரை நட்சத்திரதாரர்கள் ஆவார். அதாவது புரட்சியான எண்ணங்கள் சரியான தத்துவத்தின் கீழ் சொல்லாகவும் செயலாகவும் மாற்றி தருவதையே முனிவர்களும், யோகிகளும், பாராட்டி பேசுவார்கள்.

பாமர மக்கள் உள்ளம் புகுந்து, பகுத்தறிந்து பாவ புண்ணியங்களை நன்கு சடங்குகள் சங்டங்கள் இவைகளையே தவிர்த்து ஆன்மநேயத்தையே வெளிப்படுத்தும் உள்ளம் கொண்ட சித்திரையே வருக குளிர்ந்த அருளை பொழிக. மனிதன் மனிதனாக வாழ கற்றுக் கொடுப்பதையே சித்திரையின் கருடபஞ்சமி ஆதாரங்களாகும். மேலும் இவை தற்காலத்தின் அருட்பாக்களாகும். இந்த

*அருட்பாவின் அறிக என்கிற பேரரவம் (ஹரி) உள்ளம் புகுந்து குளிரச் செய்யும்.*

*கடல் நடுவே பாம்பணை மேல் பள்ளி கொண்ட பரமன், வெள்ளத்தரவில் துயிலமர்ந்த விதம் சித்திரை-யென்னும், திறந்த வெளிப்படையான பகர்சுபாவமாகும். இந்த சிறந்த வெளிபடையான பகர்சுபாவத்தை முனிவர்களும், யோகிகளும், வேத விற்பன்னர்களும், தகுந்த மதிப்பும், மரியாதையும், தந்து சிறப்பு செய்கின்றனர். இந்த பராம்பர, நிராலம்பனாய் என்பது அடிமுடி காணாத அறிவை வெளிப்படுத்துவதாகும். பிரம்மாண்டத்தை புலப்படுத்துவதாகும்.*

*பறவைகளின் அரசனான கருடன் உச்சியில் பறந்தாலும், உலகத்தை கருடப்பார்வையில் கூர்ந்து நோக்கி அத்தனையும் உள்வாங்கக்கூடிய திறமை சித்திரையின் சுபாவமே.*

*வெள்ளை விளிச்சங்கு புனிதத்தின் வெளிப்-பாடாகும். இந்த ஹரி என்ற பேரரவம் உலகத்தின் மூலை முடுக்குகளிலெல்லாம் சித்திரையின் கருத்துக்களாக சென்றடையும். பூதகியை ஒழிப்பதிலும் ஒரு புரட்சி, பேய் முலை நஞ்சுண்டு, பூதகியின் பேய் உள்ளத்தை அழித்தது போல எதிரிகளை சித்திரையினர் வித்தியாசமாக கையாளுவார்கள். கள்ள சக்தியை தூளாக்கும் வல்லமை சித்திரைக்கு உண்டு. சித்திரையின் கணக்கு உள்ளம் புகுந்து துல்லியமாக படம் பிடிக்கும். சித்திரையே வருகசித்திரையே அருள்க!*



**மூலமந்திரம் :**

கருடம், வரதம், தேவம் ஸ்ரீ விஷ்ணு ப்ரிய
வாஹனம் ஸர்ப்பாதி விஷ ஹர்த்தாரம்,
ஸரஸாத்வாம் நமாம் யஹம்

| | |
|---|---|
| ★ **சாயி சுவாதி** ★ | *அபிராமி அந்தாதி 53, 54, 55, 56* |
|  | *காமசாரயை வித்மஹே<br>காமநிஷ்டாயை தீமஹி<br>துரித விஸ்வாதீமஹி<br>தன்னோ சுவாதி ப்ரசோதயாத்:* |
| | *மாற்றமிலாத முடிவுடையாய்<br>மறுத்திட இயலா இயல்புடையாய்<br>முக்திக்கு மூல காரணமாய்<br>முற்றாய் ஆனாய் நமோ நமோ:* |
| **கற்பனைக்கெட்ட வெற்றி** | *கற்பனைக் கெட்டா சிந்தனைகள்<br>கணமும் அகலா செயல்வடிவம்<br>ஹரிஹரி ஓம் நமோ நாராயணா<br>நலம் தரும் சொல்லே நாராயணா* |
| *பாதம் 1 : மருதை*<br>*பாதம் 2 : அத்தி*<br>*பாதம் 3 : அரசு*<br>*பாதம் 4 : புளிய* | *ஓம் சிவாய மே நம சிவாய மே<br>த்ரயம்பகாய மே சாயி தேவாய ஓம்* |

## பரவு சாட்சாத்கார நிரவயவம்,
## கற்பனாதீத நிருவிகாரம்

*சாட்சாத்காரமே உன்னியல்பு - உடனடியே*
*காட்சி அதிகாரமே நின்வரலாறு - கடனடியே*
*மாட்சி அதிகாரிகள் நின்நாடல் - படையடியே*
*ஆட்சி பிரகலாதன் நாராயணம் - உறவடியே*

*அறிவியில் ஆயிரம் செயினும்*
*இயற்கைக்கு கட்டுபட்டதே*
*அகிலத்தில் அனைத்தும் கிடைக்கினும்*
*அண்டசராசரம் கற்பனைக்கெட்டாதே*

*அலுவலலில் இலக்கு எதுவரினும்*
*அறிவுகூர்மை யோசனை நின்தீர்வே*
*அலைச்சலில் அலைகள்கூட குறையும்*
*அறிவார்ந்த நின்மன அலைகள் ஓயாதே.*

*சர்வ தர்மம் நீக்கியே உனையே சரணடைவோம்*
*கர்ம பலன் நோக்கியே உனையே தியானிப்போம்*
*வர்ம நியமம் தாக்கவே உனையே வரவேற்போம்*
*மர்ம கம்பம் தேக்கியே உனையே வர்ணிப்போம்*

*மாற்றம் மட்டுமே நிலையானதென்று மாறுகிறாயா*
*மாற்றம் காணாத நிலைகொண்டு மாற்றுகிறாயா*
*மாறாத பிடிவாதம் நிலைபெற்றால் ஆற்றுவது யார்?*
*மாறிவரும் உலகில் சமரசம் காணவே சரபம் போலும்*

*பார்த்தால் பயங்கரம் பழக பழக அந்தரங்கம்*
*சேர்த்தால் சேமிக்காது சேர சேர ஸ்வாதியாகும்*
*அமைத்தால் அமர்வாகாது அமைய அமைய*
*கற்பனைக்கெட்டாது*
*கூட்டினால் கூடாது எட்டு திக்கிலும் அது நரசிம்மம்*

## திருப்பாவை பாசுரம் – 21

*கீசுகீ சென்றெங்கும் ஆனைச்சாத் தன்கலந்து*
*பேசின பேச்சரவம் கேட்டிலையோ*
*பேய்ப்பெண்ணே*
*காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து*
*வாச நறுங்குழ லாய்ச்சியர் மத்தினால்*
*ஓசைப் படுத்த தயிரரவம் கேட்டிலையோ*
*நாயகப் பெண்பிள்ளாய் நாராய ணன்மூர்த்தி*
*கேசவனைப் பாடவும்நீ கேட்ட கிடத்தியோ*
*தேச முடையாய் திறவேலோ ரெம்பாவாய்*

*கீசு கீசுயென்றெங்கும் ஆனை சாத்தான் கலந்து நாயக பெண் பிள்ளையாய் உனது ஆசிர்வாதமும் வழிகாட்டுதலும் எங்களுக்கு தேவை. உன்னை கேட்க எங்கட்கு பயமாக இருக்கிறது. ஆனால் கேட்டு விட்டால், அருள் ஆசியை கொடுத்து எங்களை திக்கு முக்காட செய்து விடுகிறாய்.*

*எனவே பேய் பெண்ணே என்று ஒதுங்க முடியவில்லை; பெண்பிள்ளாய் என்று நெருங்க முடியவில்லை. காசும், பிறப்பும் பரபரப்பாகி அதுவே உன்னிடம் கலகலப்பாகிறது. எனவே உன்னுடைய கனவு சுறுசுறுப்பாகிறது.*

*கண்கள் தாண்டி காதுகளுக்கு வந்தால் இலக்கை தவிர எந்த தயிரரவமே உனக்கு கேட்காது. அதாவது ஸ்வாதியின் முயற்சிகள் நேசமுடையவைகள்; நேசமுடையவர்கள் நரசிம்மனை பாட பாட ஸ்வாதி அனைத்து ஆலோசனைகள் வழங்கும் அது மட்டும் இல்லாமல் செய்யும் காரியங்கள் அனைத்தும் விகாரமில்லாமல் கம்பீரம் காக்கும் அனைத்து செல் வங்களுக்கும் சாவியாக இருந்து பொக்கிஷத்தை திறக்கும்.*

*அதீதமான கற்பனைகள் நிறைந்த சுவாதி; பேச்சரவம் கேட்க முடியாத பேய்பெண்ணாகவும் தயிரரவம் கேட்க முடியாத நாயகப் பெண் பிள்ளையாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளது. பரபரப்பு நிறைந்த பேச்சரவங்களை மனித மனங்களை மனம் மாற்றங்களை உள் வாங்கி எந்த விகாரமும் வெளிக்காட்டாமல் செயல்படுவதே சுவாதியாகும்.*

*தங்கக் காசு மாலைகளும், வைர புன்னகைகளும் ஒருங்கே கலந்து கலகலப்புடன் நினைத்ததை முடிக்கும்,*

*வாச நறுங்குழல் அழகு நிர்வாகமே நிர அவயவமாகும் நாயகப் பெண்பிள்ளையாக இருந்து, நாலு பேருக்கு நல்ல ஆலோசனைகளை தந்து, தயிரைக் கடந்து நெய்யையும், வெண்ணையையும் கைகாட்டி சாக்ஷாத்காரமளிப்பதே*

*சுவாதியின் தனிப் பெருமையாகும். நாராயணன் மூர்த்தியாக தேசமெல்லாம் பரவ வேண்டும் என்ற சாக்ஷாத்காரம் பல்கி பெருகி கதவு திறந்தால் காட்சி கிடைக்கும். காட்சியின் மூலமாக சாக்ஷாத்காரம் அல்லது அருளாசி கிடைக்கும் என்பதை வலியுறுத்தவே திறவேலோராக சுவாதி விளங்குகிறது. ஸ்வாதியே வருக ! ஸ்வாதியே அருள்க !*



**மூலமந்திரம் :**

ஹரி ஓம் நமோ நாராயணா

★ **சாயி**
**விசாகம்** ★



**தனிவழி**
**தேசம்**

*பாதம் 1 : விளா*

*பாதம் 2 : சிம்சுபா*

*பாதம் 3 : பூவன்*

*பாதம் 4 : தூங்குமூஞ்சி*

*அபிராமி அந்தாதி 57, 58, 59, 60*

*இந்தராக்நௌச வித்மஹே*
*மஹாச்ரேஷ்ட்யைச தீமஹி*
*மதிபத்நி தீமஹி*
*தன்னோ விசாகா ப்ரசோதயாத் :*

*அறிவும் திறனும் நிறைந்தாயே*
*அனுபவ வல்லமை கொண்டாயே*
*ஞானம் வீரம் நனி சிறக்க*
*ஞாலம் வியக்கும் சிறப்பானாய்*

*சாகசம் வெற்றியின் பிறப்பிடமாய்*
*சகல கர்மங்கள் கடந்திடவே*
*தனிவழி கண்டு தான் சிறந்தாய்*
*முகவரி தந்தாய் நமோ நமோ:*

*ஓம் சிவாய மே நம சிவாய மே*
*த்ரயம்பகாய மே சாயி தேவாய ஓம்*

## பரதுரிய அனுபவம், குருதுரிய, பதமம், பகம், பகாதீத விமலம்

*என் வழி, என் விழி, என் விளி, என் அளி, தனி வழி*
*என் குரு, மன் குரு, வன் குரு, சித் குரு, தனி குரு*
*என் பணி, ஆண் பணி, ஆள் பணி, ஆல் பணி, தனி பணி*
*என் அணி, பண் அணி, வின் அணி, விண் அணி, தனி அணி*

*உலகியல் உணர்ந்து, அறிந்து, அனுபவித்து ஆள்வோமே*
*உச்சத்தில் தெளிந்து, துரியத்தில் படிந்து பாடுவோமே*
*அச்சத்தை தவிர்த்து, ஆச்சர்யத்தை அடைந்தாடுவோமே*
*மச்சத்தை மகிழ்ந்து, மாயையை மணந்து கலப்போமே*

விமல சாகசமெனில் அடைந்தே ஆட்டுவாய் நீ
விபுல சாகசமெனில் புணர்ந்ததே காட்டுவாய் நீ
விபவ சாகசமெனில் நடத்தியே கூட்டுவாய் நீ
சாதித்தல் உனக்கியல்பே - சோதித்தல் வினையாலேயே

கார்த்திகைப் பெண்கள் ஊட்டி வளர்த்த கார்த்திகேயா
காலத்தில் தேவலோக தெய்வானை பார்த்திராயே
கணிசத்தில் மலைக்குறத்தி அலைகிடத்தி வலையிட்டாயே
வணிகத்தில் விலை ஊடகத்தில் மாறிலா வள்ளி வாழ்க

நாதவிந்து கலாபி நமோ நமோ
நாத விநோத கலாபி நமோ நமோ
போத வேதாந்த படனம் நமோ நமோ
பேத வேதாந்த விநாயகம் நமோ நமோ

திருச்செந்தூரில் செந்தில் நாதன் அரசாங்கம்
திருக்குகையூர் பட்டு மலாயில் பறைசாற்றும்
திருவாலின் குடியில் பாஷாணம் நவமாய் கறைபோக்கும்
திருஅறிவியலில் பொருந்துகின்ற சவாலையும் ஏற்கும்

ஓம் முருகா வாமுருகா வடிவேல் அழகா
ஆம் முருகா தாமுருகா கைமேல் மருகா

## திருப்பாவை பாசுரம் – 8

கீழ்வானம் வெள்ளென்று எருமை சிறுவீடு
மேய்வான் பரந்தனகாண் மிக்குள்ள பிள்ளைகளும்
போவான்போ கின்றாரைப் போகாமல் காத்து உன்னைக்
கூவுவான் வந்து நின்றோம் கோது கலமுடைய
பாவாய் எழுந்திராய் பாடிப் பறைகொண்டு
மாவாய் பிளந்தானை மல்லரை மாட்டிய
தேவாதி தேவனைச் சென்றுநாம் சேவித்தால்
ஆவாவென் றாராய்ந் தருளேலோரெம்பாவாய்.

உடம்பு என்னும் ஆலயத்திற்கு ஒன்பது வாசல் கண்ணிரண்டு செவியிரண்டு நாசியரண்டு வாய் ஒன்று எட்டாவது வாயில் உள்நாக்கு ஒன்பதாவது வாசல் புருவமத்தி!! கீழ்வானம் வெளுத்தது என்றால் அதுவே துரியத்தின் அனுபவமாகும். பரதுரியமானாலும் குருதுரியமானாலும் கிழக்கு வெளுக்க வேண்டும். இயற்கையில் கிழக்கு வெளுத்தால் கீழ்வானம் சிவக்கும். ஆனால் இந்த விசாகத்தில் கீழ்வானம் வெளுத்தால் தனக்கு தானே குருவாக இருந்து தனக்கென்று ஒரு தனிவழியை ஏற்படுத்தி சிறப்பான தமிழ்வழியில் நடப்பதே விசாகத்தின் தனிதன்மையாகும்.

இந்த திராவிட தனி வழி சுயஆட்சி அடுத்த வரியில் எருமை வீடு என்று சித்தரிக்கப்பட்டுள்ளது. வள்ளல் பெரும் பசுக்கள் பல இடங்களில் இருந்தாலும் எருமை சிறுவீடு என்னும் எந்திரலாபம் மற்றும் மந்திரம கிமை கூடிய தந்திர வியாபாரம் விசாகத்திற்கு மட்டுமே உள்ளது. உலகத்தில் தனக்கு தானே முதல் குரு, தகப்பன் சாமி என்று பெயர் பெற்ற பிரணவ குரு முருகன், விசாகத்திற்கு சொந்தக்காரர். விலை மோரையும் விற்ககூடிய அதீத விளம்பர நுணுக்கங்கள் விசாகத்தில் மலர்ந்து கிடக்கும். அதே நேரத்தில் தனக்கு தனக்கென்று ஒரு துறையை ஏற்படுத்தி உலகறிய செய்து மலங்களை (ஆணவம், கன்மம், மாயை) இவற்றை வெற்றிபெற வினோத வழிகளை மக்களுக்கு எடுத்து உரைப்பதில் வல்லவர்கள். எனவே தான் வானம் வெள்ளையாகவும் எருமை கறுப்பாகவும் முதல் வரியிலே கூறப்பட்டுள்ளது.

அனுபவங்கள் சிறுவீடாயினும் மாறிலாவள்ளி வாழ்க என்ற தொழில் தத்துவத்தை வளர்க்க

பிறந்தவர்களே சாகம். மாறிலா வள்ளி என்ற தொழில் ஒருபுறம் இருக்க தேவாதி தேவனாக தேவேந்திரன் மகள் தெய்வானையை (தேவயானை) மணம் புரிந்த விசாகத்தின் அருள் வெற்றியை கொடுக்க வல்லதாகும். எல்லா காரியங்களும் பல்கி பெருகி சாதனை புத்தகத்தில் பதியும் அளவிற்கு சோதனைகளை வெல்வதில் மாவாய் பிறந்தானை, மல்லரைமாட்டிய அம்சங்கள் பல வாழ்வில் எதார்த்தமாக அமையும்.

இவைகளில் நல்லவை, அல்லவை எதுவாயினும் அவற்றை ஆராய்ந்து அருள வேண்டுமாய் கேட்டு மனித மனத்தை சிறக்கச் செய்யும்.

ஆவாவென்றாராய்ந்து அருளேலோர் விசாகமே ஆகும். தேவாதி தேவனாய் இருந்து பரதுரிய அனுபவமும், குருதுரிய பதமும் தந்து சாதனை செய்பவர்களே விசாகத்தை சேர்ந்தவர்கள். உலகத்தில் முதல் தேவகுரு விசாகமே ஆகும். வெளிப்படையாக தனக்கென்று தனியான வழியே ஏற்படுத்தி பாடி பறை கொண்டு பகாதீத விமலங்களை சாதித்து காட்டுபவர்களே விசாகம்.

முதலான முதல்குரு முருகன் முடிவான முதல்குரு புத்தர்வரை இருவருமே விசாக நக்ஷத்திரமாகும். கீழை நாடுகளில் மல்லர்களை எல்லாம் மண்கவ்வச் செய்து சிறப்பு வழியான பௌதத்தை பரப்பிய பெருமை விசாகத்திற்கு உண்டு. பல்வேறு வழிகளில் போவான் போகின்றாரைப் போகாமல் காத்து தனக்குரிய துரிய அனுபவ குரு வழியில் செலுத்தும் திறமை விசாகத்திற்கு உண்டு.

கறுப்பும், வெள்ளையும் தன்னகத்தே மயிலும் சேவலும் போல கீழ்வானம் வெண்மையாகவும், எருமை சிறு வீடு கறுப்பாகவும் மேய்வான் பரந்தனகாண் என்று சொல்லி வந்த வேலையை கச்சிதமாக லாபத்துடன் முடித்து காட்டுபவர்களே விசாகத்தின் முருகர்கள் ஆவார். மாறிலா வள்ளியாக எப்பொழுதும் லாபம் தரும் விசாகமாக குறைகளைந்து அருள், பாலிப்பவர்களே விசாகம் ஆகும்.



**மூலமந்திரம் :**

ஓம் சரஹணபவ நம:

| ★ **சாயி அனுஷம்** ★ | *அபிராமி அந்தாதி* ***61, 62, 63, 64*** |
|---|---|
|  | *மித்ரதேயாயை வித்மஹே<br>மஹாமித்ராய தீமஹி<br>தேவ கருணா தீமஹி<br>தன்னோ அனுஷ ப்ரசோதயாத்:*<br><br>*கருணாம்பரமாய் திகழ்ந்திடுவாய்<br>காட்சிக்கு இன்ப வடிவானாய்<br>சோதனை தீர்க்க வல்லவனாய்<br>சோதரனானாய் நமோ நமோ:* |
| **கருணைக் கடல்**<br>*பாதம்* ***1 :*** *மகிழம்*<br>*பாதம்* ***2 :*** *பூமருது*<br>*பாதம்* ***3 :*** *கொங்கு*<br>*பாதம்* ***4 :*** *தேக்கு* | *அதீத ஆற்றல் கொண்டிருப்பாய்<br>அறிவுடன் சிறந்த குணங்களுடன்<br>தற்பதம் எனும் சிறப்புடனே<br>நட்புடன் திகழ்வாய் நமோ நமோ:*<br><br>*ஓம் சிவாய மே நம சிவாய மே<br>த்ரயம்பகாய மே சாயி தேவாய ஓம்* |

## பரம கருணாம் பரம், தற்பதம்,<br>கனசொற்பதாதீதம் இன்ப வடிவம்

*தனிப்பெருங்கருணையே நீ இறைவனின் எதிர்பார்ப்பு
பனிப்பெருங்குருணியே நீ பகலவனின் உதிர்பார்ப்பு
கனிப்பெருங்காருண்யமே நீ மோட்ச்சத்தின் வளைகாப்பு
சனிப் பெயர்ச்சி சொற்பதமே நீ இரக்கத்தின் மாராப்பு*

*ராதா காதல் வராதா? அனுராதா உடன் வருமே!
மாதா குழப்பம் வராதா? அனுசொல் உடன் தேனே!
வாதா போர் வராதா? தற்பதம் உடன் வெண்புறாவே!
சாதா ரணம் வராதா? ராதா அனு உடன் பேரின்பமே!*

*காலமும் நேரமும் காலமும் தூரமும் இன்ப வடிவமே*
*காலமே காட்சி கோலமே சாட்சி ஒலியும் ஒளியுமே*
*காலனை கரைக்க கனசொல் ஆறு ஒன்பது வாயிலே*
*கால்நாக்கு மேல்நோக்க, காற்றே நீ மரணமிலா*
*கோயிலே*

*இரகசிய சிநேகிதனே! பெருங்கருணை அம்பலமே*
*இரகசிய எதிலும் எங்கும் ஏனென்று இரங்குவாயே*
*இரக்கம் நின்னியல்பே நோக்கம் கொண்டிரு*
*இரவுவரை ஆராவாரம் ஏன்? அலைச்சலும் ஏனோ?*

*தீராத வினைகள் நிறைந்த தருணங்கள்*
*ஏறாத விசைகள் பரந்த உலகங்கள்*
*மாறாத தற்பதத்தால் சொற்பதத்தால் இன்பம் நீயே*
*காராத கற்கண்டே குருதியிலா கருணை வடிவமே*

*சோம்பலில் நீயிருந்தால் உலகப்போர் நீடிக்கும்.*
*ஆம்பலில் நீயிருந்தால் அழகுப்போர் சாதிக்கும்.*
*சாம்பலில் நீயிருந்தால் சுடுகாடு போதிக்கும்.*
*அடக்கத்தில் நீயிருந்தால் இடுகாடு எழுந்தாடும்.*

## திருப்பாவை பாசுரம் – 9

*தூமணிமாமடத்துச் சுற்றும் விளக்கெரிய*
*தூமம் கமழத் துயிலணைமேல் கண்வளரும்*
*மாமான் மகளே மணிக்கதவம் தாள்திறவாய்*
*மாமீர் அவளை எழுப்பீரோ உன்மகள்தான்*
*ஊமையோ? அன்றிச் செவிடோ ? அனந்தலோ?*
*ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ?*
*மாமாயவன் மாதவன் வைகுந்த னென்றென்று*
*நாமம் பலவும் நவின்றேலோ ரெம்பாவாய்.*

அனுராதா அனைத்தையும் அறிந்தவர் அவள் ஊமையோ? அன்றிச் செவிடோ? அனந்தலோ? என்ற கேள்விகள் பலவாய் பாசுரத்தில் பிரமிக்க வைக்கிறது. அனுராதா ஊமையும் அல்ல, செவிடும் அல்ல, அனந்தலும் அல்ல, இரகசியத்தை காப்பாற்றும் வகையிலே ஊமையாகவும் தகாதவற்றை கேட்கும் வகையிலே செவிடாகவும் சாதனைகள் வெல்ல வேண்டும். என்பதிலே காலத்திற்கேற்ப அனந்தலாகவும் இருப்பதே அனுராதாவின் இயல்பு.

தூமணிமாடத்து சுற்றும் விளக்கெரிய அனைத்து ஆசிர்வாதங்களுடன் கருணையே வடிவாக தற்பதத்தை தன்நிலையை உலகறிய செய்பவளே அனுராதா. தற்பதம் தன்னுடைய நிலைபட்டு கண்வளரும் என்று குறிக்கப்-பட்டுள்ளது. இந்த கண்வளர்ச்சி அறிவிப்பது கருணையின் ஆரம்பமாகும். கருணை ஆரம்பம் கருணாம்பரமாக அனுராதா சொல்லும் சொற்களெல்லாம் அர்த்தமான விளைவுகளை ஏற்படுத்தும். எனவே தான் மாமான் மகளே என்று செல்லமாக அழைக்கப்படுகிறது.

அனுராதா நட்சத்திரத்தின் அருட்பெருஞ்ஜோதி கண் வழியாக கருணையை மலர செய்வது மேலும் இரக்கமுள்ள மனசுக்காரனாக இருக்கச் செய்வது உலக சாதனை ஆகும். மாமாயனை மயக்கிய ஊமையல்லவா அனுராதா பெருந்துயில் மந்திரம் எதுவென்று அலசி பார்க்கும் போது அதுவே இங்கு மகாமந்திரம்.

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி!
தனிபெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி!

*உலகத்திற்கு பயன்படும் இந்த கருணை அனுஷம் உலக பொதுமறை இயற்றிய திருக்குறளை எழுதிய திருவள்ளுவருக்கு சொந்தமாகும்.*

*எனவே நாமெல்லாம் உய்ய கருணையே வருக கருணையே அருள்க இதுவே நம் அனுராதா, அனுகிரகராதா, ராதே கிருஷ்ணா, ராதே கிருஷ்ணா, ராதே கிருஷ்ணா இதுவே இன்பம் வடிவம், பேரின்ப வடிவம். அனுஷமே வருக! அனுஷமே அருள்க!*

*பரம கருணாம்பரம், தற்பதம் கனசொற்*
*பதாதீதம், இன்ப வடிவம்.*
*அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி*
*தனிப்பெருங்கருணையாக மலரும் என்பதை அருள்*
*கருணை வளரும் என்பதை நாம் அறிவோம்.*

*இந்த அருட்பெருஞ்ஜோதிகள் பரம கருணாம் பரமாக, தற்பதமாக, அதீதமான சொல்லாதிக்கமாக, இன்பவடிவமாக தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரிய தூபம் கமழத் துயிலணைமேல் கண்வளரும். எனவே கருணை பரம கருணாம்பரமாக வளரும் என்பதை கண் வளரும் என்று பதமாக சொல்லியிருக்கிறார்கள்.*

*இன்ப வடிவத்தை மாமான் மகளே என்று உரிமையுடன் வடித்துக் காட்டியிருக்கிறார்கள். மணிக்கதவம் தாள் திறந்து பேரின்பத்தை அடைய இன்ப அருளை பெற அனைத்து தகுதிகளும் அனுராதாவிற்கு உண்டு. இதுவே அனுஷம். இதுவே மனுஷம்.*

*அனுராதா பார்பதற்கு ஊமை அல்ல, மாமாயனுடன் மொழி புகல வந்த மாமேதை அனுராத செவிடல்ல மாதவனிடம் கேட்டுணறும் திருவளர்ச் செல்வி.*

*அனுராதா அனந்தல்ல, வைகுந்தனிடம் நடமாடும் வைகுண்டத்தைபிரதிஷ்டைசெய்யதகுந்தவளேஆவாள். இந்த நடமாடும் வைகுண்டமே ஏமப் பெருந்துயில் பட்டரையாக என்றென்றும் நாம சங்கீர்த்தனமாக தற்பதங்களாய், சொற்பதங்களாய், நவின்ற வண்ணம் அதீத விளைவுகளை ஏற்படுத்தும் மொத்தத்தில் அனுராதா அனுஷத்தில் மனுஷம்.*



**மூலமந்திரம் :**

அக்ஷயம், பரமம், பத்மம், ஜோதி ரூபம்
ஜெனார்த்தனம்

**★ சாயி ★**
**கேட்டை**



**முதல்வனுக்கு மரியாதை**

*பாதம் 1 : பலா*

*பாதம் 2 : பூவரசு*

*பாதம் 3 : அரசு*

*பாதம் 4 : வேம்பு*

*அபிராமி அந்தாதி 65, 66, 67, 68*

*ஜயேஷ்டாயை வித்மஹே*
*மகாந ஜயேஷ்ட்யாயை தீமஹி*
*இந்த்ர தந்த்ர தீமஹி*
*தன்னோ ஜயேஷ்டா ப்ரசோதயாத்*

*நெடிய நோக்கமும் நீ கொள்வாய்*
*நேர்படுவோரை விரட்டிடுவாய்*
*நெடியவர் யாரும் உனைத் தீண்டார்*
*கொடுப்பவன் நீயே நமோ நமோ*

*யோக்கியம் உனக்கு ப்ரதானம்*
*பாக்கியம் சிறப்பு ப்ரவாகம்*
*நோக்கம் நிறைவுற உழைப்பவன் நீ*
*யார்க்கும் குறைவிலை நமோ நமோ*

*ஓம் சிவாய மே நம சிவாய மே*
*த்ரயம்பகாய மே சாயி தேவாய ஓம்*

## பரோட்ச ஞானா தீதம், அபரோட்ச ஞானானுபவ விலாசப் பிரகாசம்

*மரா, மரா எனநீ சொன்னாலும் அது மா மந்திரமே*
*வரா, வரா எனநீ கேட்டாலும் அது வரு தந்திரமே*
*நரா, நரா எனநீ நினைத்தாலும் அது சுர சந்திரனே*
*தரா, தரா எனநீ கொடுத்தாலும் அது சூர சூரியனே*

*அதீத ஞானம் அதுவே பிரதானம் உனது நிதானம்*
*அனுபவ ஞானம் அதுவே சுயதானம் உனது விலாசம்*
*அபரோட்சமும் பரோட்சமும் நீ இட்டதே ஜேஷ்டம்*
*அகம் ஞானம் அகம்பாவம் ஆபத்தில்லாத சுபாவம்*

கேட்டை கேட்காமலே சுட்டெரிக்கும் கோட்டை
சேட்டை செய்யாமலே சொல்லும் பேட்டை
பாட்டை பாடாமலே பாடவைக்கும் பாட்டை
மாட்டை நோகாமலே நிர்வகிக்கும் வீட்டை

கண்ணதாசனோ? காளிதாசனோ? நாராயணனின் வண்ணன்
அண்ணதாதனும், அன்னதாதனும் அய்யனின் அப்பன்
முன்னவனும் நீயே, முனைவரும் நீயே, முனைப்பே,
முளைப்பே
தேன்வேண்டா தண்ணீரே; ஆன்மீகம் வேண்டா அறிவே

சமரசம் தேங்கா சன் மார்க்கமே உன்மார்க்கம்
சாகசம் தேங்கா சக மார்க்கமே உன் தாக்கம்
சடசட சரசங்கள் சுய அதிகாரமே உன் வர்க்கம்
சலசல சத்தங்கள் எது வரினும் நாஉன் ஆக்கம்

கோடு ஒன்று போட்டவன் அண்ணனைத் தேடி
கோடு இரண்டு போட்டவள் வண்ணனைத் தேடி
கோடு மூன்று போட்டவள் தன்னையே தேடி
கோடு நான்கு போட்ட நீ தேடுவது என்ன?

## திருப்பாவை பாசுரம் – 10

நோற்றச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்
மாற்றமும் தாராரோ? வாசல் திறவாதார்
நாற்றத் துழாய்முடி நாரா யணன் நம்மால்
போற்றப் பறைதரும் புண்ணியனால்
பண்டொருநாள்
கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்ப கர்ணனும்
தோற்றும் உனக்கே பெருந்துயில்தான் தந்தானோ?
ஆற்ற அனந்த லுடையாய் அருங்கலமே
தேற்றமாய் வந்து திறவேலோ ரெம்பாவாய்.

பத்தாயிரத்தில் ஒருவர் பாடல் பாடுவார்கள் லட்சத்தில் ஒருவர் சேவை செய்வார்கள் கோடியில் ஒருவர் ஞானதவம் மேற்கொள்வார்கள். இந்த ஞான வான்கள் கேட்டை நட்சத்திரக்காரர்கள் பார்த்த மாத்திரத்தில் நல்லவர்களையும், கெட்டவர்களையும் பாகுபடுத்தி உடனடியாக கண்டுபிடித்து ஒரே நாளில் ஒரே பார்வையில் அனுபவித்து பொறுப்புகளை தெய்வ-மாக்குவார்கள். எனவே இந்த கேட்டை கோட்டை கட்டி ஆளும். இதை தான் பாசுரத்தில் நோற்றச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய் அடிக்கோடிட்டு காட்டப்பட்டுள்ளது. இவர்கள் சொல்லும் அனைத்து வார்த்தைகளும் தேற்றமாகும். ஆற்ற அனந்தலுடைய இந்த வார்த்தையே நிர்வாகமாகும். எடுப்பிலே எளிதாக இருந்தாலும் கூற்றத்தின் வாய் விழுந்தாலும் கேட்டை நிர்வாகத்தில் ஏற்றமாய் மட்டுமே ஜெயித்துக்காட்டுவர் நாராயணனின் விலாச பிரகாசமான ஆசி இந்த கேட்டை (ஜேஷ்டார்) நட்சத்திரகாரர்களும் புண்ணியமாய் அமையும். பொறுப்புகள் வந்து சேரும் பதவிகள் பலவும் வாய்க்கும். யுகம் புகழும், யுவஸ்ரீ யாக யுவ ராணியாக அதி சயங்களையும் அற்புதங்களையும் நிகழ்த்திக் காட்டுவர்.

கூத்திலே கட்டும் ஒருநாள் ராஜாவாக அல்ல ஞான அனுபவ இராஜாவாக மக்களுக்கு பயன்படுவர்.

தேற்றமாய் வந்து திறவேலோர் என்பதே கேட்டையாகும். தேற்றமென்கிற கருத்து ஒற்றுமைகளை தனக்கே உரிய வகையில் செயல்படுத்தும் செயலாளர்களே கேட்டையினர் ஆவார். அளப்பற்றிய ஆற்றலுடைய அருங்கலம் செய்யும் செயல்கள் பார்ப்பதற்கு எளிமையாக இருந்தாலும், வலிமையான

விளைவுகளை தரும். இவர்கள் தோற்றாலும் முக்தி கிடைக்கும்.

எனவே தான் தோற்றும் உனக்கே பெருந்துயில் என்பது பேரின்ப வீட்டைக் குறிக்கும் மந்திரவரிகளாகும். இந்த வகையிலே கும்பகர்ணனுக்கு அண்ணன் ராவணன் செய்யும் நல்லவைகளும் தெரியும், அல்லவைகளும் புரியும். ஆனாலும் அனுபவ விலாச பிரகாசத்தை வெளிக்காட்டவே போரிட்டு பேரின்ப வீட்டை அடைகிறான்.

நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற சக்தி கேட்டைக்கு மட்டுமே உண்டு. எடுத்த நிலைப்பாட்டில் உறுதியாய் நின்று மாற்றம் காணாமல் நாற்ற துழாய் முடி நாராயணனை கேட்டையினர் கோட்டைக்கு வரவழைப்பார். துளசி மாலை அணிந்த நாராயணன் போற்றபறைதந்து புண்ணியத்தை சேர்பிக்கிறான். எனவே அதீத ஞானமும், ஞான அனுபவமும் சொல்லாலும், செயலாலும், உடலாலும், பொருளாலும், உயிராலும், உணர்வாலும் ஒருங்கே மக்களுக்கு பயன்பட்டு மோட்சம் தர வழி வகைகளை கேட்டையினர் கூறுவார்கள். திறந்து காட்டுவார்கள் தெய்வ தரிசனத்தை (துளசி மாலை அணிந்த நாராயணன்). கேட்டையே வருக! கேட்டையே அருள்க.



**மூலமந்திரம் :**

யானி, கானி சபாபானி ஜன்மாந்த்ர
க்ருதானி ச தானி, தானி ப்ரணஸ்யந்தி
ப்ரதக்ஷிண பதே பதே.

★ **சாயி** ★

**மூலம்**



**சமூக**
**தொண்டன்**

*பாதம் 1 : மரா*

*பாதம் 2 : பெரு*

*பாதம் 3 : செண்பகம்*

*பாதம் 4 : ஆச்சா*

*அபிராமி அந்தாதி 69, 70, 71, 72*

*பிரஜாதிபாயை வித்மஹே*
*மஹாப்ராஜையை தீமஹி*
*ஜீவ மஸ்து தீமஹி*
*தன்னோ மூலாப் ப்ரசோதயாத்*

*அமைதியின் உருவாய் ஆனவனே*
*அனுமன் போல் ஒரு தொண்டனும் நீ*
*நடை உடை பாவனை ஏற்றவன் நீ*
*நன்மையே நினைப்பாய் நமோ நமோ*

*நற்குணம் உனது சொத்தாகும்*
*நற்பெயர் பெற்றது வித்தாகும்*
*மூலப்பொருளாய் திகழ்பவன் நீ*
*முழுஜெயம் ஜெயமே நமோ நமோ*

*ஓம் சிவாய மே நம சிவாய மே*
*த்ரயம்பகாய மே சாயி தேவாய ஓம்*

## பாவனாத்தம், குணாத்தம், உபசாந்த பதம் மகாமௌன ரூபம்

*எதிர் பாராத பாவனைகள் நின் தர்மமாகும்*
*உதிர் காணாத குணங்கள் நின் மூலமாகும்*
*உபய சாந்த பதங்கள் உன் இலக்கணமாம்*
*அபய காந்த மௌனங்கள் உன் உருவமாகும்*

*அஸ்திவாரங்கள் தெரிவதில்லை; உச்சி காண்பதுண்டு*
*அமைதியான நகர்வுகாணவில்லை; வளர்ச்சி விரைவதுறுதி*
*அதீதமான மௌனம் உனக்கில்லை; உலகோருக்கு உய்ய உண்டு*
*அதிரடி மந்திரம் அடிக்கடி இல்லை; அடுக்கு மாடிக்கு உண்டு*

*நடை உடை பாவனை ராமனின் தர்மம்*
*நடை பாவனம் நயமானது நவீன தர்மம்*
*உடை பாவனம் சுயமானது உலக தர்மம்*
*குடை குணம் எதிர்பாராதது மௌன தர்மம்*

*பிடிசாபம், துர்வாசரே; பிடி சாந்தம உன்வாசமே*
*பிடிவாதம், பெண்மூலமே, பிடிமௌனம் ஆண்*
*மூலமே*
*பிடிகரணை நின் மூலமே; பிடி சூழல் உனக்கரிதே*
*பிடி சோர்வு வாழ்க்கைக்கே; பிடி படிப்படியானதே*

*தெற்கு முக ஆகமங்கள் மூலத்தின் சனாதனம்*
*கிழக்கு முக ஆசனங்கள் மௌனத்தின் சாசனம்*
*வடக்கு முக ஆவணங்கள் அடங்குமுக மூலதனம்*
*மேற்கு முக ஆமணங்கள் அடங்காத கோமணம்*

*பழம் புசிப்பர், வடம் இழுப்பர்*
*கீழும் காப்பர், மடம் வழிப்பர்*
*விழும் தூக்கம், இனம் வர்க்கம்*
*ஆழம் விதிகள், அழுமே கதிகள்*

## திருப்பாவை பாசுரம் – 11

*கற்றுக் கறவைக் கணங்கள் பலகறந்து*
*செற்றார் திறலழியச் சென்று செருச்செய்யும்*
*குற்றமொன் றில்லாத கோவலர்தம் பொற்கொடியே*
*புற்றர வல்குல் புனமயிலே போதராய்*
*சுற்றத்துத் தோழிமா ரெல்லாரும் வந்துநின்*
*முற்றம் புகுந்த முகில் வண்ணன் பேர்பாட*
*சிற்றாதே பேசாதே செல்வப்பெண் டாட்டிநீ*
*எற்றுக் குறங்கும் பொருளேலோ ரெம்பாவாய்.*

குற்றமொன்றில்லாத கோவலன் நீ, அதீதமான குணங்கள் கொண்ட சாந்த சொரூபிணி நீ, பிரிவினைகள் பலபல விளைவுகளை ஏற்படுத்தி களேபரம் இல்லாமல் வினைகள் பல சாதிக்கும். திறமைகள் போற்றப்பட்டு பாராட்டப்பட்டு அவைகளை கற்று கறவைகள் கணங்கள் பல கறந்து செற்றார் திறல் அழியச் செய்ய சென்று சரி செய்யும். பார்ப்பதற்கு எளிமையாக இருந்தாலும், பகை என்று வந்தால் போர் குணத்தோடு செயல்பட்டு வெற்றி பெறும். மகாசக்தி வாய்ந்த விருட்சம் கம்பீரமாக அமைந்திருப்-பதற்கான காரணம் ஆழமான மூலமான வேர்களே எனவே இந்த மூலம் பேசக்கூடாது சிணுங்க கூடாது. பேசினாலோ, சிணுங்கினாலோ, மரத்திற்கு ஆட்டம் கண்டு விடும். எனவே அனைத்திற்கும் மூலமான ஆஞ்சநேயர் உபசாந்த பதம், மகா மௌனரூபம் என்று இருக்க வேண்டும்.

எல்லோரும் ஒன்றாக வந்து பாராட்டினாலும் தன் நிலை தடுமாறாது கர்வமடையாது கருத்தாக சாதித்து காட்டும் மூலம் அரசாளும், நல்லவை ஆளும், அல்லவை நிர்மூலமாகும். குற்றமில்லாத குணவான் மௌனரூபமாக இருக்கும்.

குற்றமொன்றில்லாத கோவலர் தம் பொற்கொடியே மூலமாகும். இந்த மூலத்தின் நடை, உடை, பாவனை, குணம், சாந்தம், மௌனம், அத்தனையும் கற்றுக்கொடுக்க தேவையில்லை. மூல நக்ஷத்திரத்திற்கு இருளும், ஒளியும், இனிய உறவுகளே.

அருளும், மருளும் புரிந்த பரவரமே, காயும், கனியும் உபசாந்த மௌன ரூபங்களே!!

இந்த அதீதமான வெளிப்பாடுகள் புற்றில் புகுந்த பாம்பாகவும், கானகத்தில் ஆடும் மயிலாகவும் காட்டப்பட்டுள்ளன. சுற்றத்து தோழிமார்கள் எல்லோரும் முற்றத்தில் நின்று பாடல் பாடினாலும், பஞ்சாயத்து செய்தாலும் எதற்கும் அசையாமல் வாய் பேசாமல் மகாமௌனமாக இருப்பது மூலத்தின் வலிமையாகும்.

மூலத்தில் பிறந்த அனுமானின் மகா மௌன ரூபமும், அதீத பாவன செயலும் போற்றத் தகுந்தவையாகும். அதே நேரத்தில் மூலம் பெண்ணாக பிறந்தால் திட்டாதே, பேசாதே செல்வப் பொண்டாட்டி நீ என்ற கோட்பாட்டிற்கிணங்க வாழ்க்கை மேற்கொண்டு கட்டிடங்கள் தெரிந்தாலும், அஸ்திவாரம் தெரியாது. இதுவே மூலத்தின் பொருளாகும். மூலமே வருக! மூலமே அருள்க!




**மூலமந்திரம் :**

ராமராம ராமராம ராமராம ராம்
ராமராம ராமராம ராமராம ராம்

★ **சாயி** ★

**பூராடம்**



**தன்னிகரில்லா அன்பு**

*பாதம் 1 : வஞ்சி*

*பாதம் 2 : கடற்கொஞ்சி*

*பாதம் 3 : சந்தன*

*பாதம் 4 : எலுமிச்சை*

*அபிராமி அந்தாதி 73, 74,75,76*

*சமுத்ரகாமாயை வித்மஹே*
*மகா பிஜிதாயை தீமஹி*
*ஆஃபா திவ்யாதீமஹி*
*பூர்வாஷாடா ப்ரசோதயாத்*

*சம்பவ சந்தையில் சிந்திப்பாய்*
*அப்ரமேயமாய் செயல்படுவாய்*
*போதனை சாதனை முடித்திடுவாய்*
*வேதனை எல்லாம் மறைந்திடுமே*

*எதிர்பார்ப்பில்லா அன்பு செயல்*
*உதிர்மலர் போல அறிவு செயல்*
*மதி உடல் காக்கும் கரும்பு வயல்*
*விதியை வெல்லும் நமோ நமோ*

*ஓம் சிவாய மே நம சிவாய மே*
*த்ரயம்பகாய மே சாயி தேவாய ஓம்*

## பரமபோதம், போத ரகித சதிதம், சம்பவாதீதம், அப்பிரமேயம்

*காதலாகி கசிந்துருகி பாத்திரம் செய்வர்*
*போதலாகி புணர்ந்தறிந்து சமரசம் காண்பர்*
*காதலாகி சம்பவங்கள் ஆத்மசகிதம் உண்பர்*
*ஆதலாகி அப்பிரமேயம் அதனில் ஆடுவர்*

*கொஞ்சி கொஞ்சி பேசினாலும் அது கருத்தே*
*வஞ்சி அஞ்சி வாதிட்டாலும் அது குறுத்தே*
*வாஞ்சி வாங்கி வழக்கிட்டாலும் அது வெற்றிக்கே*
*கஞ்சிக் கலயம் வெள்ளியாகிலும் அது சுகத்திற்கே*

*போராடும் பூராடம் போர்அடிக்க யானை வருமே*
*பாராரும் பாராட்ட பரிசுபெற மானே வருமே*
*தேரோடும் போர்க்களத்தில் கர்ணன் வானே வருமே*
*வேரோடும் தோல்வியிலும் நிலைமாறாக் கானே*
*வருமே*

*விடாக்கெண்டன் விட்டுக் கொடுக்காத விவஹாரி*
*கொடாக்கெண்டன் புரிந்து கொள்ளாத வியாபாரி*
*தொடாக்கெண்டன் தொடர்ந்து செல்லாத சம்சாரி*
*வாடாக்கெண்டன் வாடிக்கையிலாத சுகவாசி*

*சுற்றமும் நட்பும் சூழும் உன் உலகில்*
*மற்றை நம் காமங்கள் ஆளும் உன் வீட்டில்*
*கற்றநின் வாதங்கள் பாடும் உன் பேச்சில்*
*அற்ற நின் பாவங்கள் நிற்கும் உன் நிலையில்*

*போதரகித சகிதம் கல்யாண சமையல் சாதம்*
*அப்பிரமேய உசிதம் பல்யாக மையல் போதம்*
*சம்பவ போத பயணம் வல்யோக தையல் வாதம்*
*பரம பாவன பாக்கியம் கல்மேல் எழுத்து வேதம்*

## திருப்பாவை பாசுரம் – 12

*கனைத்திளங் கற்றெருமை கன்றுக் கிரங்கி*
*நினைத்து முலைவழியே நின்று பால் சோர*
*நனைத்தில்லம் சேறாக்கும் நற்செல்வன் தங்காய்*
*பனித்தலை வீழநின் வாசற் கடைபற்றிச்*
*சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற*
*மனத்துக் கினியானைப் பாடவும் நீ வாய்திறவாய்*
*இனித்தா னெழுந்திராய் ஈதென்ன பேருறக்கம்*
*அனைத்தில்லத்தாரும் அறிந்தேலோ ரெம்பாவாய்*

மடியிலிருந்து மாடு கனைத்து கறப்பார் இன்றி, கன்றுக்கு ஈவதாக எண்ணிப் பாலைத் தானாக பொழிகிறது.

பாலைப்பொழியும்பசுநிபந்தனைஏதும்இல்லாமல் அன்பை அலை அலையாய் பொழிகிறது. நனைத்து இல்லம் சேறாக்கும் என்ற பாசுர சொல்லுக்கேற்ப இல்லம் முழுவதும் சுற்றமும் நட்பும் சூழ இருந்து விருந்துண்டு பூராடத்தின் செல்வாக்கே ஊரறியச் செய்யும், அதீதமான சம்பவங்கள் நிறைந்த பூராடம் சாதனைகளை குவித்த வண்ணம் ஒவ்வொரு சம்பவத்திற்கும் அல்லது ஒவ்வொரு வருடத்திற்கும் புதியதோர் சாதனை செய்து புதியதோர் உலகத்திற்கு புதிய போதனைகள் பல தந்து பாராட்டுகள் பெறுவர். நற்குடி நங்கை என பெயரெடுக்க நல்ல பல செல்வங்களை பெற்று அந்த செல்வங்களை தகுந்த வழியில் தக்கவர்களுக்கு தப்பாமல் அளிப்பாய். உன்னிடம் எதிரியானவர்களின் தலைகள் பத்தானாலும் அவைகள் உதிரியாகிவிடும். உனது மனத்துக்கு இனியவனை பாடச் செய்வதே புகழச் செய்வதே பூராடத்தின் போதனை பொருளாகும். மேலும் பக்குவமான நேரத்தில் தகுதியான ஆத்மாக்களுக்கு தனது உற்ற நண்பர்கள் போல் பழகி அவர்களை கரை சேர்ப்பார்கள். எனவே சகாக்களுக்கும் சகிக்களுக்கம் புதியதோர் சிந்தனையையே போதிக்க வரும்.

நனைத்தில்லம் சேறாக்கும் நற்செல்வன் பூராடமே. எதிர்பார்ப்பு இல்லாத அன்பு செலுத்தும் வள்ளல் பெரும் பசுக்களையும் தாண்டி இல்லம் சேறாக்கும் எருமைகள் அருமை பூரண குருவிற்கு ஒப்பாகும். பூராடங்கள் மனித தலை வீழ நின்வாசல் கடைபற்றி சொல்பல சொல்லில் பரம போதனையை செலுத்தி தலைகனத்தை வீழச் செய்யும் போதனைச் செம்மல் பூராடமேயாகும்.

*பனித்தலை வீழாது இமயமாக நின்றிருக்கும்; போத ரஹித, சகிதத்தால் பல்வேறு சூழ்நிலைகளை உருவாக்கி பனித்தலையை விழவைக்கும் ரகசியங்கள் பூராடங்களுக்கே தெரியும். இந்த வகையான குரு அம்சங்கள் பூரண மகிழ்ச்சியை அளிக்கும். சினத்தினால் தென்னிலங்கை கோமானை வதம் செய்த விதமே சம்பவ அதீதமாகும். சம்பவங்களின் விளைவாக மனம் சினம் கொள்வதோ, சினம், மனம் கொள்வதோ சூழ்நிலைகளை பொருத்தே அமையும்.*

*அனைத்து இல்லத்தாரும் அறிந்து பூராடத்திற்கு பூணூல் எதற்கு? பூராடமதற்கு அனைத்து இல்லத்-தாரையும் கடைத்தேற்றி, அற்புதங்கள் பலபுரிந்து உய்யச் செய்வாரன்றோ; எனவே இது பேருறக்கம் அல்ல; ஈதென்ன பேருறக்கம் என சொல்ல! உறக்கத்திலும் நீ சிறப்பாய். பூராடமே வருக. பூராடமே அருள்க!*



**மூலமந்திரம் :**

ஓம் சாயி ராமாய வித்மஹே ஆத்மராமாய
தீமஹி தன்னோ பாபா ப்ரசோதயாத்

| ★ **சாயி உத்ராடம்** ★ | *அபிராமி அந்தாதி 75,76,77,78* |
|---|---|
|  | *விஸ்வேதேவாய வித்மஹே*<br>*மகா ஷாடாய தீமஹி*<br>*கர்மஸுகர்ம தீமஹி*<br>*உத்ராஷாடா ப்ரசோதயாத்*<br><br>*ஆனந்த வார்த்தைகள் கூறாகும்*<br>*அதனால் செயல்கள் ஆறாகும்*<br>*பாநந்த பதங்கள் சாறாகும்*<br>*நீங்காத செல்வம் நிறைவாகும்* |
| **ஆனந்த சொற்கள்**<br>*பாதம் 1 : பலா*<br>*பாதம் 2 : கடுக்கா*<br>*பாதம் 3 : சாரபருப்பு*<br>*பாதம் 4 : தாளை பனை* | *சிற்பதங்களிலே உலகளப்பாய்*<br>*இலவசம் தந்துமே அரவணைப்பாய்*<br>*உசிதங்கள் உனக்கான அரியணையாம்*<br>*உத்ரம் நோக்கி வணங்குகிறோம்*<br><br>*ஓம் சிவாய மே நம சிவாய மே*<br>*த்ரயம்பகாய மே சாயி தேவாய ஓம்* |

## பகரனந்தானந்தம், அமலம், உசிதம், சிற்பதம் சதானந்த சாரம்

*பழமாக இருத்தல் அனைவர்க்கும் மியல்பு*
*சாரமாக இருத்தல் உனக்கு மட்டுமே சாத்தியம்*
*ஆழமாக பேசுதல் ஆராய்ச்சிக் கியல்பு*
*ஆனந்தமாக பகருதல் உனக்கு மட்டுமே வாத்தியம்*
*ஆலவாய் சுந்தரனை அடைவது உலகியல்பு*
*அமலமே உசிதமென உரைக்கு நீயே சிற்பதம்*
*கோலமே கொண்டதென கூத்தாடுவதில் உலாகாடும்*
*காலமே காட்சியென சரணடையும்*
*நட்சத்திரங்கள்*

குறுத்து சிறிதெனினும் கருத்து பெரிதல்லவோ?
பொறுத்து பொருந்தெனவே பருத்த சொலல் அல்லவோ?
அறுத்து மலங்களையே வறுத்த செயலல்லவோ?
மறுத்து மாயைகளையே வளைத்த மயனல்லவோ?

அதிதாயமே அனைத்து ராசிகளும் ஆராதிக்குமே
ஆதாயமே அனைவர்க்கும் ஆனந்த சாறேதித்திக்குமே
சமுதாயமே அணைத்து வரினும் இணையாதினிக்குமே
தன்தாயமே உயிர்பெனினும் தனக்கெலாம்
பிணக்கே

விதை யழிந்தால் விருட்சமாகும் ஆடல் நீ
பழம் பிழிந்தால் சாறாகும் ஆனந்தம் நீ
காய் கனிந்தால் கல்லடியாகும் கானகம் நீ
இலை மடிந்தால் அறுசுவை முடியும் அலங்காரம் நீ

எல்லா புகழும் இறைவனுக்கே - தலைவனுக்கே
அல்லா புகழும் அலைகளுக்கே - கலைகளுக்கே
மல்லா வசனமும் சிற்பதத்திற்கே - பரானந்தமே
கல்லா இலக்கும் அமலம் காணவே - ஆனந்தமே

## திருப்பாவை பாசுரம் – 3

ஓங்கி யுலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள் நம் பாவைக்குச் சாற்றிநீ ராடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள்மும் மாரிபெய்து
ஓங்குபெருஞ் செந்நெலூடுகயலுகள
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்பத்
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைப்பற்றி
வாங்கக் குடம்நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய்.

*வாமனன் உத்தமன் ஆகம் வரலாறே உத்திராட-மாகும். சுருங்கச் சொல்லி நிரம்ப பொருளை விவரிக்கும் ஆற்றலே உத்திராடமாகும். வாமனன் ஓங்கி உலகளந்த உத்தமனாக மாறும் சீர்மிகு சிறப்புகள் உத்திராட நஷ்ஷத்திற்கே உகந்தவை ஆகும்.*

*சதானந்த சாரம் இங்கே மீன்கள் வயல்களில் களிப்புடன் துள்ளுகின்றன. வண்டுகள் மலர்களில் உறங்குகின்றன. பசுக்கள் மனம் கோணாமல் பாலை பொழிகின்றன. இந்த உசிதங்கள் அமலம் நிறைந்தவை இதுவே ஆண்டவனை அடைய சிற்பதம் ஆகும்.*

*மீன்கள் வயலிலே வாழ்கின்றன என்பது ஒரு நடைமுறை சாத்தியத்திற்கு அப்பாற்பட்டது. ஆனால் விந்தைக்குரியது. அது போல் உத்ராடம் பலவிந்தைகளை செய்ய வல்லவர். எனவே தான் உத்ராடத்தில் பிறந்த ஒரு மகன் இருந்தால் உலகையே விலை பேசலாம் என்பர். மேலும் உத்திராடத்தின் சிறப்பை ஆராதிக்க அனைத்து 26 நக்ஷத்திரங்களும் அணிவகுத்து நிற்கும். எனவே நீங்காத செல்வம் நிறைந்திடவே.*

*“யானை வரும் பின்னே, மணி ஓசை வரும் முன்னே”*

*ஓங்கி உலகளந்த உத்தமன் ஓணத்தில் வருவான் பின்னே, இதை பகரவே நந்தா ஆனந்தத்தில் வாமனனே உத்திராடம். உத்திராடமும், திருவோணமும் ஒட்டிப் பிறந்தவை. வாமணன் மூன்றடி மண் கேட்டு உத்திராட வழியில் ஆனந்த வாக்குறுதியை பெற்றான். இதையே தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து ஆனந்தத்தை அளிக்கிறது.*

*ஓங்கு பெருஞ்செந்நெல் உசிதமாக உத்ராடத்தில் உதிக்கிறது. மது அருந்திய மகிழ்வுடன் குவளைமலர்களில் வண்டுகள் பலவாக சிற்பதத்தில் கண்ணுறங்குகிறது. வளமான பசுக்களோ உத்திராட வள்ளல்களைப் போல் மனங்கோணாமல் குடம், குடமாய் பாலைப் பொழிகின்றன. எனவே இவர்கள் சுற்றமும், நட்பும் சூழ சதானந்த சாரமாக விளங்குவர். பழம் எல்லைக்கோடு என்றாலும் பழச்சாறு அடுத்த வாரிசாக ஆனந்த சாறாக அனைவருக்கும் உசிதமாக நீங்காத செல்வம் தந்து நிறையைச் செய்யும், ஆனந்த புருஷர்களே உத்திராடமாகும்.*

*எனவே வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள் நீங்காத செல்வம் நிறைந்தேலோர் எம்பாவாய். உத்ராடமே வருக. உத்ராடமே அருள்க!*



**மூலமந்திரம் :**

ஓம் சாயி ராமாய வித்மஹே ஆத்மராமாய
தீமஹி தன்னோ பாபா ப்ரசோதயாத்

<table>
<tr>
<td>

★ **சாயி**<br>**திருவோணம்** ★



**புண்ணிய**<br>**ஸ்லோகம்**

*பாதம் 1 : வெள்ளெக்கு*<br>*பாதம் 2 : கருங்காலி*<br>*பாதம் 3 : சிறுநாகப்பூ*<br>*பாதம் 4 : பாக்கு*

</td>
<td>

*அபிராமி அந்தாதி 77,78,79,80*

*மஹா ச்ரோணாய வித்மஹே*<br>*புண்யஸ்லோகாய தீமஹி*<br>*விசக்ரசங்கு தீமஹி*<br>*தன்னோ ச்ரோணா ப்ரசோதயாத்*

*கோவிந்த பூரணம் முழுவட்டம்*<br>*சாங்கமும் காரணம் பரிவட்டம்*<br>*பங்கய தோரணம் நடுவட்டம்*<br>*ஓணம் புண்ணியம் நமோ நமோ*

*கேட்டலும் கூட்டலும் வெங்கடேசா*<br>*வழக்கும் வாழ்க்கையும் வெற்றிபெற*<br>*பிம்பமும் விம்பமும் சதுரேழில்*<br>*சௌபாங்க சௌக்கிய நமோ நமோ*

*ஓம் சிவாய மே நம சிவாய மே*<br>*த்ரயம்பகாய மே சாயி தேவாய ஓம்*

</td>
</tr>
</table>

## பரையாதி, கிரணாங்க சாங்க சௌபாங்க விம்பாகார நிர்விகற்பம்

*ஆதி கிரணம் அநேக கோடி சூர்ய பிரகாசம்*
*ஜோதி ஸ்வரூபம் ஏழு வான கிரண விலாசம்*
*வாதி கீர்த்தனம் சௌபாக்ய விம்பாகாரம்*
*போதி சரணம் ஏகசரணம் ஸ்பரிசவிகற்பம்*

*திரு வோணம், கருவோணம் தருவோணம் மறுவோணம்*
*வரு வாமனம், மறுஆமனம், செறு ஓர்கணம், செருமறுக்ஷணம்*
*அரு தானம், அறு அசுரம், உருகாண பெருங்கலன்*
*பெறு கற்பம், தருயோகம் அது வோணம் இது தருணம்*

ஏழுலகம் போற்றும் எழில் அழகு
ஏழுசுரம் சேர்ந்தும் பொழில் பழகு
ஏழுமலை ஏறிடின் உடன் உதவி
ஏழுதிரை நீக்கினும் பகர் முருகு

சர்வ தர்மம் விட்டிடுக - சரண வட்டம் வந்தடைகவே
கர்ம தத்வம் நாமஸ்மரணம் - உடன் கிடைக்கும்
நிற்விகற்பமே
ஆம்சப்த ஆம் காமிக சுகம் கணத்தில் பாக்கியமே
மர்ம சூத்ரம் இகபர நேத்ரம் - தடையிலா வேகபயணமே

குறை ஒன்றுமில்லை மறை மூர்த்தி உலகே
நிறை ஒன்று நின் நாமம் வழி கீர்த்தி அலகே
பறை ஒன்று திரையிராண்டு கரை இடை நீரே
உறை ஒன்று வாளிரண்டு மாறுபாடிலா தேரே

மங்கள வடிவினமான ஜோதி மணியே
தங்கிடும் சாந்திஇன்பம் ஆதி அணியே
தொங்கிடும் உள்நாக்கில் மீதி பணியே
சாங்கிடும் காலைக்காற்றில் ஓதி தணியே

## திருப்பாவை பாசுரம் – 14

உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள்
செங்கழுநீர் வாய்நெகிழ்ந்து ஆம்பல்வாய்
கூம்பினகாண்
செங்கல் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர்
தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போதந்தார்
எங்களை முன்னம் எழுப்புவான் வாய்பேசும்
நங்காய் எழுந்திராய் நாணாதாய் நாவுடையாய்
சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்
பங்கயக் கண்ணனைக் பாடேலோ ரெம்பாவாய்.

உங்கள் தோட்டம் முதல் தங்கள் திருக்கோயில் வரை ஊரில் இருக்கும் அனைத்து நஷ்ஷத்திரங்களும் வேங்கடவனான திருவோணத்தில் அடக்கம். வேங்கடவன் காட்டும் சரணாகதி தத்துவத்தில் உள்ள திருவடிகளில் பொதிந்திருக்கும் நஷ்ஷத்திரங்களை இந்த பட்டியலில் காண்போம்.

வலது கால் கட்டைவிரல்- திருவோணம், 2,3,4 விரல்கள் - பூரம், பூராடம், பூரட்டாதி. ஐந்தாவது விரல் - அஸ்வினி.

இடதுகால் கட்டைவிரல் - திருவாதிரை 2,3,4 விரல்கள்-உத்திரம், உத்தராடம் உத்தரட்டாதி, ஐந்தாவது விரல் - ரேவதி, முப்பூரமும், மூன்று உத்திரமும் நங்காய் ஆகவும், நாணாதாய் ஆகவும், நாவுடையாய் ஆகவும் பாசுரத்தில் காட்டப் பெறுகின்றன. ஆம்பல் வாய் மகாலஷ்மியாகவும் செங்கழுநீர்வாய் அலர்மேல் மங்கையாகவும் உள்ள நஷ்ஷத்திரங்களே முறையே அனுஷம், மிருகசீரிஷமும் ஆக இதயத்தில் உள்ளன. சங்கோடு சக்கரமும் என்பது அவிட்டமும், சதயமும் ஆகும். நாமத்தின் பாதம் பூசமாகவும் நாமத்தின் உச்சி புணர்பூசமாகவும் ராம ராம என்று வெளிப்படுத்துகிறது. செங்கல் பொடிக்கூறை முகவாய் வெண்மையான பச்சைக்கற்பூரத்தில் ரோகிணி என்னும் பங்கயக்கண்ணன் முகவாயில் வெளிப்படுகிறார். வாய்பேசும் நஷ்ஷத்திரங்கள் ஐந்து வலக்கையில் உள்ளன. சரனாகதி தத்துவத்தை அறிவிக்கவே பாதங்களை காட்டுகின்றன. சங்கிடுவான் போல் உலகிற்கு திருவோண தரிசனம் அறிவிப்பதற்காக சொல்லும் நக்ஷ்ஷத்திரங்கள் ஐந்து இடக்கையில் உள்ளன.

| **விரல்கள்** | **வலக்கையில்** | **இடக்கையில்** |
|---|---|---|
| கட்டைவிரல் | ஆயில்யம், | சுவாதி, |
| சுட்டுவிரல் | பரணி, | சித்திரை, |
| நடுவிரல் | மகம், | மூலம் |
| மோதிரவிரல் | கார்த்திகை, | கேட்டை |
| சுண்டுவிரல் | விசாகம் | அஸ்தம் |

வேங்கடவன் கழுத்தே அபிஜித், மகா விஷ்ணு, ஸ்வரூபமாக அனைத்து 27+1 நஷ்ஷத்திரங்களின் இணைக்கவும், அணைக்கவும் செய்கிறது. இந்த ஆதி கிரணங்கள் களிக்கும் சௌக்கியமே வேங்கடவணின் திருவோணமாகும். 27+1 நஷ்ஷத்திரங்களின் பாவனங்களை முடிவுக்கு கொண்டுவரும். விம்பாகார ஸ்வரூபமே திருவோணமாகும். வேம் + கட = வேங்கட - பாவம் தீர்வு என்று உடனடியாக பாவங்களுக்கு தீர்வு காணும் நிர்விகற்பமே.

சங்கோடு சக்கரம் ஏந்தும் தடக்கையன் திருவோணமாகும். பரையாதி கிரணங்க, சாங்க சௌபாக்யம் அளிக்கவல்லதே சங்கும், சக்கரமும் ஆகும். உங்கள்நெஞ்சத்தில்தாயாரும், நாச்சியாரும், வீற்றிருக்கும் விவகாரமே இங்கு செங்கழுநீர் வாய்நெகிழ்ந்தும் ஆம்பல் வாய் கூம்பியும், இருப்பதைக் காண்பதே திருவோண-மாகும். பத்மாவதி நாச்சியார் மலர்ந்தும், அனுராதா ஆம்பல் குவிந்தும் உள்ளன. எனவே பரையாதி கிரணங்கள் சூரியன் என்னும் திருவோணம் வந்த மாத்திரத்திலேயே உலகத்திற்கு வாழ்வாகும்.

நமது வாழ்வில் சொந்த வேலை பல இருந்தாலும் வந்த வேலையை 28 நஷ்ஷத்திரங்களும் அறிய

*வேண்டும். இவைத்தான் செங்கல் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர் என தாம்பூலம் தரியாமல் வந்த வேலையை கவனிப்பவர்கள். (இவர்களே பற்களாகும். பற்கள் வெண்மையாக வேயிருக்கும்.)*

*இந்த துறவிகள் சௌபாங்க சங்கிரைக்க திருக்கோயில் நோக்கி போகின்றனர். விகல்பமில்லாமல் இருக்கம்கதாபாத்திரம் இங்கு நங்கையாக, நாணாதாயாக நாவுடையாயாக, பங்கயக்கண்ணனை பாடும் பாவையாக, விம்பாகாரமாக விவரிக்கப்படுகிறது. எனவே திருவோண சக்கரத்தில் அனைத்து நக்ஷத்திரங்களும் உடனடியாக பாவ விமோசனம் பெறுகின்றனர். திருவோணமே வருக. திருவோணமே அருள்க!*



**மூலமந்திரம் :**

வினா வெங்கடேசம் நனாதோ நனாதஸ் :
சதா வெங்கடேசம் ஸ்மராமி ஸ்மராமி :
ஹரே வெங்கடேசம் ப்ரஸீத ப்ரஸீத :
ப்ரியம் வெங்கடேசம் ப்ரயச்ச ப்ரயச்ச :

★ **சாயி**
**அவிட்டம்** ★



**திக்கெட்டிலும்**
**விகடகவி**

*பாதம் 1 : வன்னி*

*பாதம் 2 : கருவேல்*

*பாதம் 3 : சீதாபழம்*

*பாதம் 4 : ஜாதிக்காய்*

*அபிராமி அந்தாதி 82,83,84,85*

*அக்ர நாதாய வித்மஹே*
*வசூபரி தாய தீமஹி*
*அஷ்டௌ தேவாய தீமஹி*
*சரவிஹடாய ப்ரசோதயாத்*

*வித்தைகள் பலப்பல நீ அறிவாய்*
*விதைகள் கலகல நீ சொல்வாய்*
*விதைகள் திசைகள் எட்டாகும்*
*சதைகள் உன்னில் பற்றாகும்*

*போட்டிகள் பேட்டிகள் ஜெயமாகும்*
*போகமும் தாபமும் இயல்பாகும்*
*ஆத்ம கோவிலும் உனதாகும்*
*சுற்றும் சுயமே நமோ நமோ*

*ஓம் சிவாய மே நம சிவாய மே*
*த்ரயம்பகாய மே சாயி தேவாய ஓம்*

## பரசுகாரம்பம், பரம், பிரம்ம வித்தம் பரானந்த பூரண போகம்

*அனுபவம் புதுமை அவிட்டத்தில் காண்போம்*
*ஆரம்பம் இனிமை அதனினும் சேர்வோம்*
*ஆனந்தம் இகபரம் புணர்ச்சியை சுகிப்போம்*
*ஆடம்பரம் உபப்ரியம் ஆதலால் ப்ரம்மமாவோம்*

*கோபம் பாதி தாபம் பாதி சேர்ந்த அபூர்வ கலவையே*
*தானம் பாதி நிதானம் பாதி அளித்த - ஆடல் மேடையே*
*கையில் ரேகை காலில் ரேகை அறிவிக்கும் சீர்ஹோரையே*
*கடவுள் பாதி மனிதன் பாதியென பகுத்தறியும் சீர்சோலையே*

*நீ இருந்தால் எட்டு திக்கிலிருந்து ஆற்றல்வரும்*
*நீ பார்த்தால் எட்டா உயரத்திலும் ஜோதிதெரியும்*
*நீ தோற்றால் பட்டுப்பலகையிலும் ஓட்டுவிழும்*
*நீ எதிர்த்தால் சங்கபலகையிலும் களைகட்டும்*

*அன்புக்கோர் அணிசெய்து வாழ்வளிப்பாய்*
*வம்புக்கோர் விடையளித்து விடுவிப்பாய்*
*தெம்புக்கோர் அன்புருவாய் தெளிவிப்பாய்*
*என்புக்கோர் இரும்புருவாய் மகிழ்விப்பாய்*

*விட்ட மதில் மக்களாட்சி ஆதரவு பெருகும்*
*கட்ட மதில் போட்டியெனில் வாயாடி வெல்லும்*
*சட்ட மதில் ஓட்டையெனில் எதிர்ப்பைக் காட்டும்*
*வித்த மதில் பிரம்மமெனில் ஆனந்தம் ஊட்டும்*

*உண்டென்றால் இல்லையென்பாய்*
*உறவென்றால் பகை என்பாய்*
*உருட்டிவிட்ட பந்ததனை உடனிருந்து தற்காத்து*
*தற்பேணி சமரசத் தீர்வு காணும் சம்போகம்*
*நீ!*

## திருப்பாவை பாசுரம் – 15

*எல்லே இளங்கிளியே இன்னம் உறங்குதியோ*
*சில்லென் றழையேன்மின் நங்கைமீர் போதர்கின்றேன்*
*வல்லைஉன் கட்டுரைகள் பண்டேன் உன் வாயறிதும்*
*வல்லீர்கள் நீங்களே நானேதா னாயிடுக*
*ஒல்லைநீ போதாய் உனக்கென்ன வேறுடையை*
*எல்லாரும் போந்தாரோ? போந்தார்போந்*
*தெண்ணிக்கொள்*
*வல்லானை கொன்றானை மாற்றாரை மாற்றழிக்க*
*வல்லானை மாயனைப் பாடேலோ ரெம்பாவாய்.*

உலகத்திலேயே பயங்கரமான ஆயுதம் எது? என்று கேட்டால் அதன் விடை நயவஞ்சகரின் நாக்காகும். இங்கு நாக்கு வார்த்தைகளால் வம்பு வளர்க்கும். அன்பும் செய்யும். எனவே இதை மையமாக வைத்து வாழ்க்கையை சிறப்பிப்பவர் வழக்கறிஞர், ஆசிரியர், வியாபாரி என்று பலர் உள்ளனர். இந்த வகையில் வித்தையை பரம வித்தையை சிறப்பாக செயலாக்குபவர்களே, அவிட்டம் நஷ்ஷத்திரகாரர்கள். இதையேபாசுரம்வில்லைஉன்கட்டுரைகள்! பண்டேஉன் வாயறிதும் வல்லீர்கள் நீங்களே நானேதான் ஆயிடுக. போட்டி என்று வந்தால் வெற்றி காணாமல் விட மாட்டார்கள். தொட்டகாரியம்துலங்கும். தெவிட்டாத தெள்ளமுதமும், நண்பர்கள் கூட்டத்தில் நயமான நாயக பாவம். மற்றும் பலப்பல திறமைகளுக்கு காரணம் எட்டு திசையிலிருந்தும் அஷ்டதிக் பாலகர்கள் அறிவை அபரிமிதமாக அளித்துக் கொண்டிருப்பர். வாழ்வின் சுவையை பரானந்த புரணபோகம் என்ற வகையில் சிங்காரமாகவும், சொகுசாகவும், சிறப்பாகவும், சீராகவும் அனுபவிக்க ஆசி பெற்றவர்களே அவிட்ட நஷ்ஷத்திரகாரர்களே. வல்லவர்களை கூட அழிக்கும் வல்லவனாக திகழ்பவர்களே வல்லானை கொன்றானை, மாற்றாரை மாற்றழிக்க வல்லானை மாயனைப் பாடேலோர் எம்பாவாய் எனவே பரம் பிரம்ம வித்தம், பொருந்தியது.

எல்லே இளங்கிளியே எட்டும் உனக்கு சொந்தமே. அவிட்டமே உனக்கு எட்டு திசைகளிலிருந்து ஆனந்தங்கள், அருளாசிகள் கரைபுரண்டு வருவதை உணர்வாயாக. நீ மயக்கு மொழி பேச்சுக்காரி, பசப்பு வார்த்தை கெட்டிக்காரி, போட்டி என்று வந்தால்

ஜெயித்திடும் ஜாலக்காரி. எல்லோரின் சொற்படி நானே வாயாடியாக இருந்துவிடடு போகிறேன். கோபக்காரியாக இருந்தாலும் நான் பாசக்காரி. எனவே பரம்பிரம்ம வித்தைக்காரி என்ற வகையிலே ஆனந்தம் உங்களை அடைய வேண்டும் என்ற எண்ணத்தில் எல்லோரும் வந்தீர்களா என்பதில் குறிப்பாக இருக்கின்றாய்.

வல்லானை, கொன்றானை மாற்றாரை, மாற்றிழிக்க புரண போகம் நிறைந்த பரானந்த சிங்காரி, அவிட்டமேயாகும். தன்னலம் பேணும் பெண்டிராக, தன்னலத்தை சமுதாய நலமாக கருதும், ஆண்டாளாக வல்லானை மாயனைபாடும் பாவையாக ஆனந்த அதிர்வுகளை எட்டுத்திக்குக்கும் பரப்பும் இளங்கிளியாக அவிட்டம் வாழும் வளரும். ஆதலால் சில்லென்று அழையேன்மின் நங்கைமீர்! அதாவது அவிட்டம் தோல்விகளை தாங்கமாட்டார்கள். சிடுசிடுவென அவிட்டத்தை அழைக்காதீர்கள். அவிட்டத்திற்கு ஆத்ம ப்ரதக்ஷணம் அனுதினமும் சாலச்சிறந்தது.

மாயனைப் பாடிப்பாடி வெற்றி கொள்ளும் இயல்பை எட்டுத்திக்கும் பரப்ப வந்தவர்களே அவிட்டம். அவிட்டமே வருக, அவிட்டமே அருள்க.



**மூலமந்திரம் :**

ஓம், ஐம், க்லீம் ஸௌஹீ வத வத வாக்வாதிணி ஸ்வாஹா

★ **சாயி**
**சதயம்** ★



**உலகியல்**
**நூறு**

*பாதம் 1 : கடம்பு*

*பாதம் 2 : பிராய்*

*பாதம் 3 : அத்தி*

*பாதம் 4 : அரசு*

*அபிராமி அந்தாதி 85,86,87,88*

*பேஷஜயா வித்மஹே*
*வருண தேஹா தீமஹி*
*தீர்க்கவசிஷ்ட தீமஹி*
*சதாபிஷேக் ப்ரசோதயாத்*

*உதிப்பவை நாலும் தேராகும்*
*உதிர்ப்பவை ஒன்றும் நூறாகும்*
*உணர்பவை என்றும் உறவாகும்*
*உலகியல் நூறே நமோ நமோ*

*சதம் சதம் நின் இயல்பன்றோ*
*கதம் கதம் உன் பலமன்றோ*
*வதம் வதம் உடன் மூடமன்றோ*
*சரம் சரம் மழை நமோ நமோ*

*ஓம் சிவாய மே நம சிவாய மே*
*த்ரயம்பகாய மே சாயி தேவாய ஓம்*

## பரிமிதாதீதம், பரோதயம், பரகிதம், பர பரீணம், பராந்தம்

*செயல் ஒன்றெனினும் சமூகத்தில் சதமதுவே*
*வயல் சிறிதெனினும் பரம்செல்லும் வரம்பதுவே*
*கயல் உதயமெனினும் பாற்கடல் நின்பட்டாவே*
*அயல் நாடெனினும் இலக்கெலாம் சிதம்பரமே*

*சாதனையாளரெனினும் - சோதனை வரவழைப்பார்*
*போதனையாளரெனினும் - எதிரிடம் எதற்கஞ்சார்*
*வாதனை பேசினும் விசாலமே விலாசமாகும்*
*ரோதனை எதுவரினும் உதயமே உடன் தீர்வாம்*

*உதிக்கும் அதீதமே உதய நிதியே நீ*
*பதிக்கும் பாசமே இகபர உல்லாசமே!*
*எதிக்கும் நேசமே இதையும் சகிக்காயே?*
*மதிக்கும் பூச்சியமே மற்றதைப் பகையாதே;*

*பால் பாக்கியம் நீவரப் பெற்றதன்றோ?*
*ஆல் அமர்க்களம் நீ உடன் கற்றதன்றோ?*
*வால் விமர்சனம் நீ தரின் சாபமன்றோ?*
*சால் பரகிதம் நீ இடின் அட்சயமன்றோ?*

*நூறுகள் நின்னியல்பு தொன்னூறா காதே*
*ஆறுகள் நின் ஜீவன் எந்நாளும் காயாதே*
*ஊறுகள் நின் போதை பரசிந்தனை சலியாதே*
*சாறுகள் நின் சித்தம் நவசித்தம் சளைக்காதே*

*நட்பு நலமானால் தலைமை தழைத்தோங்கும்*
*இலக்கு இதமானால் இனிமை இகம் தாங்கும்*
*வழக்கு வளமானால் வயது பரம் பார்க்கும்*
*சுடக்கு சுரமானால் பாட்டு புரட்டா தேங்கும்*

## திருப்பாவை பாசுரம் – 16

*நாயக னாய்நின்ற நந்தகோ பனுடைய*
*கோயில் காப்பானே கொடித்தோன்றும்*
*தோரண*
*வாயில் காப்பானே மணிக்கதவம் தாள்திறவாய்*
*ஆயர் சிறுமிய ரோமுக்கு அறைபறை*
*மாயன் மணிவண்ணன் நென்னலே வாய்நேர்ந்தான்*
*தூயோமாய் வந்தோம் துயிலெழப் பாடுவான்*
*வாயால் முன்னம்முன்னம் மாற்றாதே அம்மா நீ*
*நேய நிலைக்கதவம் நீக்கேலோ ரெம்பாவாய்.*

கோயில்காப்பானே, கொடித்தோன்றும்தோரணம் ஒன்றல்ல, பத்தல்ல நூறு வார்த்தைகளின் ஆற்றலை கொண்டது. உங்களின் ஒரு சொல்லாகும், உங்களின் இதே பாணியல், உங்களின் ஒரு செயல் நூறு விளைவுகளை ஏற்படுத்தும். கோயில் காப்பானே, வாயில் காப்பானே நாயகனே கொடித்தோரணம், என பலப்பல பணிகள் நூறாயினும் பகவானுக்கு அர்பணம் செய்யும் சாதனையாளர் இந்த சதயமாகும். இவற்றைப் பட்டியிலிட இதை உதயம் என்பதா? இல்லை அதீதம் என்பதா? அல்லது ரகிதம் என்பதா? அல்லது பரபரீணம் என்பதா? அல்லது பராந்தம் என்பதா? மனிதநேயம் விளங்கச் செய்ய உங்கள் செயல்பாடுகள் பரிமளிக்கும். இதையே நேய நிலைக்கதவும், நீக்க வல்லவர் நீவீரே ஆவார். உங்களின் வாக்கு வல்லமை வாய்ந்தது. நீங்கள் ஒரு தடவை பாராட்டினால் அது நூறு தடைவை பாராட்டியதற்கு சமம். எனவே நீங்கள் ஒரு தடவை திட்டினால் நூறு தடவை திட்டியதற்கு சமம். ஆகையால் நீங்கள் யாரையும் எவரையும் திட்டக்கூடாது. கசரக் கூடாது. வாயில் முன்னம், முன்னம் மாற்றாதே துயிலும் தூய்மையும் இரு துருவங்களாயிருந்தாலும் துயில் எழுந்தாலும், தூய்மை ஆற்றலும் எனக்கே சொந்தம். ஆன்மீகத்தை அறிவியலாக தூய்மைப்படுத்தும்.

நாயகனாய் நின்ற நந்தகோபனுடைய கோயில் காப்பானே, சதயமாகும். சதயத்தின் பணிகள் சதமாகும்; கோயில் பணிகள், வாயில் பணிகள் கொடித் தோன்றும் தோரணப் பணிகள், மணிக்கதவம் தாள் திறக்கும் பணிகள், மாயக்கண்ணன் மணிவண்ணன் நேரடிப்பணிகள், ஆயர் சிறுமியர் என அறைபறை பணிகள் நூறாக பரோதயமாக பரகிதமாக பரபரீணமாக

பராந்தமாக பரிமளிப்பதே சதயத்தின் செயல் திட்டம் ஆகும்.

முடியாது என்று சொல்லாமல் உன்னால் முடியும் என்று அற்புதத்தை ஏற்படுத்த பரிமதாதீதத்தை வாயால் முன்னம் முன்னம் மாற்றாதே அம்மா நீ. நேய நிலைக்கதவம் நீக்க தகுதியும், திறமையும் சதயத்திற்கே உண்டு. எனவே பேச்சை குறைத்து மூச்சை அதிகரித்து நேசத்தை இணைத்து வைத்து பாசத்துடன் பழகி கதவுகளை விலக்கி திறந்து உடல் பொருள் ஆவி அனைத்தும் சுகம் பெற உதய நிலவாக உதய ஞாயிறாக பரோதயத்தை சதயம் அருள வேண்டும். கருநீல மணிவண்ணன் உனக்களித்த அருளாசிகளை, அரும்பெரும் பொருள் அற்புதங்களை உலகத்தோர் அனுபவிக்க வாய்ப்புத்தர வேண்டியது சதயத்தின் இயல்பாகும்.

தூயேமாய் வந்தவர்களே பறை முரசும் பெற தகுதி உள்ளவர்களை இனங்கண்டு அவர்களை ஏமாற்றாமல் கசராமல், கருணை காட்டுவார்கள், சதய சத்புருஷர்கள். சதமே வருக, சதயமே வருக.



**மூலமந்திரம் :**

ஓம் அஸ்வத்வஜாய வித்மஹே
பாஸ ஹஸ்தாய தீமஹி
தன்னோ ஸீர்யஃப் ப்ரசோதயாத்

| | |
|---|---|
| ★ **சாயி<br>பூரட்டாதி** ★ | *அபிராமி அந்தாதி 89,90,91,92* |
| <br>**முத்தொழில்<br>பூரணம்**<br>*பாதம் 1 : ரேமா*<br>*பாதம் 2 : கொங்கிலிய*<br>*பாதம் 3 : சுந்தர வேம்பு*<br>*பாதம் 4 : கன்னி, மந்தாரை* | *தேஹஸ்கராய வித்மஹே<br>அஜ ஏக பாதாய தீமஹி<br>தத்தாத்ரேயா தீமஹி<br>பூரட்டாதி ப்ரசோதயாத்*<br><br>*பசு பாச பாவனம் மூன்றாகும்<br>அற்புதம் அதனால் நிறைவேறும்<br>மோட்சம் பெறவே நீ சொல்வாய்<br>மோன கூட்டம் உனை சுற்றும்*<br><br>*பூநூல் உண்மையில் உன்நூலே<br>பூட்டிய வாயில் அடி நாக்கே<br>பூரணமாய் செல்லும் பூங்காற்றே<br>புருவ மத்தியில் நமோ நமோ*<br><br>*ஓம் சிவாய மே நம சிவாய மே<br>த்ரயம்பகாய மே சாயி தேவாய ஓம்* |

## பரம அற்புதம், பரம சேதனம், பசு பாசபாவ பரம மோட்சம்

*முப்பது நாளும் பௌர்ணமி*
*- முடித்து வைப்பாள் அம்மணி*
*தப்பது ஆறும் சேதனம்*
*- அடித்து வெளுப்பாள் அம்மணி*
*ஒன்பது எண்பதில் சேதாரம்*
*- அடுத்து வருவதில் நூறாகும்*
*நட்பது ஆதிமுதல் அந்தம்வரை*
*- இகமுதல் பரம்வரை மோட்சம்*

அற் புதங்கள் நின் வாடிக்கை பூரணம் நோக்கியே
மற் பதங்கள் நின் வரவேற்பும் பூரணம் தேக்கியே
சற் கீதங்கள் நின் சுகங்கள் தியானம் வார்க்கவே
தற் பதங்கள் நின் உழைப்பு காரணம் பிரம்மமே

திடம்மடம் திண்ணம்நின் நல்லெண்ணம்
உடல் படம் வண்ணம்நின் சுக வலிமை
தடம் இடம் கண்ணன் நின் சக மார்க்கம்
வடம் தேர் அண்ணன் நின் பகர் சகஜம்

பசு, பாச பாவனம் யதார்த்த யவ்வனம்
வசு, வாச அற்புதம் ஆத்மார்த்த கர்வம்
மாசற்ற மாணிக்கம் மானவ மோட்சம்
தாச தாச சுபாவம் தாதா ஸப்தசுரம்

நம்பிக்கை நலமுடன் பயக்கவே நிதர்சனம்
தும்பிக்கை துணிவுடன் சிறக்கவே அதிதீவிரம்
தம்பிக்கை பழக்கங்கள் ஏழுவகை அரங்கம்
ஸ்தம்பிக்கும் சவால்கள் குருமூலம் நிர்மாணம்

## திருப்பாவை பாசுரம் – 17

அம்பரமே தண்ணீரே சோறே அறஞ்செய்யும்
        எம்பெருமான் நந்தகோ பாலா எழுந்திராய்
கொம்பனார்க் கெல்லாம் கொழுந்தே
                                        குலவிளக்கே
        எம்பெரு மாட்டி யசோதாய் அறிவுறாய்
அம்பர மூடறுத் தோங்கி உலகளந்த
        உம்பர்கோ மானே உறங்காது எழுந்திராய்
செம்பொற் கழலடிச் செல்வா பலதேவா
        உம்பியும் நீயும் உறங்கேலோ ரெம்பாவாய்.

உடல் என்னும் கோயிலுக்கு ஒன்பது வாயில் கண்கள் (2) காதுகள் (2) மூக்கு (2) வாய் (1) ஆக மொத்தம் ஏழு, எட்டும், ஒன்பதும் கழுத்துக்கு மேலே தான் உள்ளது. கீழே அல்ல அவை எவை என்றால் உள் நாக்கும், புருவ மத்தியுமாகும்.

இதைத்தான் பசு, பாச பாவனம் என்கிறோம். இதையே பாசுரத்தில் சூட்சமமாக அம்பரமே, தண்ணீரே, சோறே அறஞ்செய்யும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அம்பரமே என்பது சிதம்பரமே
தண்ணீரே என்பது பாவனையாகும்.
சோறே என்பது ஜோதியே ஆகும்.

இம்மூன்றும் கலந்த கலவையே அறஞ்செய்யும் தர்மம் செய்யும் ஆக்கல், காத்தல், அழித்தல் என்ற அறத்தை முடித்துரைக்கும் (TRINITY) என்ற பரம அற்புதத்தை திறம்பட செய்து முடிக்கும் கொம்பனார்க்-கெல்லாம் கொழுந்தே குலவிளக்கே என்ற வகையில் பெருந்தலைவனாக, கறைபடியாத கரமாக, சிந்தாத சிதறாத முழுமையாக பூரணமாக முழு நிலவாக பணியாற்றுபவர்களே பூராட்டதி நக்ஷத்திரம். நோற்று சுவர்க்கத்திற்கு செல்லலாம். ஆனால் மோட்சத்திற்கு செல்லும் உம்பர் கோமான் இவர் ஒருவரே. இவர் வழியிலே அண்ணன், தம்பி எவராயினும், உறங்காமல் பரம மோட்சத்தை அடைய முடியும். அம்பரம் மூடறு தோங்கி என அகிலம் ஆகாயம் அனைத்திற்கும் அதிபதி பூரட்டாதியே.

அம்பரமே, தண்ணீரே, சோறே, அறஞ்செய்யும் பூரட்டாதி பூரணங்களே, பசு, பாச, பாவனம் என்று

முத்தொழில் தத்துவத்தை பூரணமாக செய்பவர்கள் பூரட்டாதி, அம்பரமே, சிதம்பரமே, தண்ணீரே, ஊடகமே, சோறே, ஜோதியே; என தர்மம் செய்யும், அறஞ்செய்யும் எம்பெருமான் பூரட்டாதி.

கொம்பனார்க்கெல்லாம், கொழுந்தே, குலவிளக்கே அற்புதங்கள், பரம அற்புதங்கள், மனங்கள், பரம சேதனங்கள், இவையிரண்டும் உம்பியும் நீயும் உறங்கேலோர் என்றறிந்து பூரணத்தை அருளுங்கள் பூரட்டாதியே.



**மூலமந்திரம் :**

ஓம் சாயிஸ்வராய வித்மஹே சத்ய தேவாய
உத்ரட்டாதி தீமஹி தன்னோ சர்வ ப்ரசோதயாத்

★ **சாயி** ★
**உத்திரட்டாதி**



**நவகிரக**
**நாயகி**

*பாதம் 1 : வேம்பு*

*பாதம் 2 : குல்மொஹர்*

*பாதம் 3 : சேராங்கொட்டை*

*பாதம் 4 : செம்மரம்*

*அபிராமி அந்தாதி 92,91,90,89*

*அஹிர் புத்நியாய வித்மஹே*
*ப்ரதிஷ்டாப நாய தீமஹி*
*நவா அதீத தீமஹி*
*உத்ரட்டாதி ப்ரசோதயாத்*

*நவகிரக நாயதி வேப்பிலையே*
*நவதீதம் நீயன்றி வேறில்லையே*
*பாஸ்கரம் உனது பாவனையே*
*ஆகாசம் நீ நமோ நமோ*

*மூவரும் போற்றும் முகிழ்நகையே*
*யாவரும் கேட்கும் உல்லாசமே*
*தேவரும் ஏங்கும் நவலோகமே*
*மாபெரும் அம்மா நமோ நமே*

*ஓம் சிவாய மே நம சிவாய மே*
*த்ரயம்பகாய மே சாயி தேவாய ஓம்*

## பரமானு குண நவாத்தீம், சிதாகாச பாஸ்கரம், பரம போகம்

*புதுமை பெண்களடி பூமிக்கு கண்களடி*
*பொதுமை கண்களடி புரட்சிக்கு சன்னலடி*
*புதுமை விண்ணரசி பெருமை சேர்க்குமடி*
*சுடுமை கண்டமடி இடுமை மத்தியடி*

*நவா தீதம் நவீனமயம் நினக்கே சொந்தம்*
*நவ வாயில் எட்டும்ஒட்டும் நினக்கே புரியும்*
*நவ சக்தி சக்கரங்கள் நினக்கே அடங்கும்*
*நவ ஜோதி நிறதிரைகள் நினக்கே தெரியும்*

*சிதாகாச பாஸ்கரம் சித்தரின் பிரகாசம்*
*இதிகாச ஞானதவம் புத்தரின் விலாசம்*
*ஜீவகாச சம்மந்தம் உள்நாக்கின் சுவாசம்*
*பராகாச பம்மந்தம் உத்ரசஹஸ்ராரம்*

*இகபரபோகம் கற்கால முதல் தற்காலம் வரை*
*சுக குண பாகம் கற்பனைக்கெட்டா செலவு வரை*
*மக கெஜக மௌனம் கல்விக் கெட்டிய வாக்கு வரை*
*தக தக வென தெய்வீகம் கடமையில் திறமை வரை*

*முன் கோபம் இருந்தாலும் முன்னேற்றம் உண்டு*
*முன் வார்த்தை வந்தாலும் முடிவுரை உண்டு*
*முன் ஆற்றல் எழுந்தாலும் மனமாற்றம் உண்டு*
*முன் போதம் வழிந்தாலும் அனுபவம் உண்டு*

*குத்தி குத்தி காட்டினாலும் கட்டுப்பாடுண்டோ?*
*புத்தி பட்டி வாட்டினாலும் பச்சாதாபமுண்டோ?*
*கத்தி கத்தி கத்தரித்தாலும் சுறுசுறுப்புண்டோ?*
*சித்தி சித்தி எழுவராயினும் இரகசிய முண்டோ?*

## திருப்பாவை பாசுரம் – 18

*உந்து மதகளிற்றன் ஓடாத தோள்வலியன்*
*நந்தகோபாலன் மருமகளே நப்பின்னாய்*
*கந்தம் கமழும் குழலீ கடைதிறவாய்*
*வந்தெங்கும் கோழி அழைத்தனகாண்*
*மாதவிப்*
*பந்தல்மேல் பல்கால் குயிலினங்கள் கூவினகாண்*
*பந்தார் விரலி உன் மைத்துனன் பேர்பாட*
*செந்தா மரைக்கையால் சீரார் வளையொலிப்ப*
*வந்து திறவாய் மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்.*

*ஒன்றும் நீயே, ஒன்பதும் நீயே ஓடாத தோள் வலியின் நீயே உலகம் பிறந்தது உனக்காகத்தான் என்கிற வகையில் பரம போகம் உனக்கே சொந்தமாக பூப்பந்தலாக காத்திருக்கும். பறவை இனங்களும் வாசனைத் திரவியங்களும், இயற்கை சூழலும், மகிழ்ச்சியை அளித்திட மகிழ்ந்தலோர் எம்பாவாய் அனைத்திலும், ஆன்மிகத்தை கலப்பவர் நீவீரோ? உங்கள் அனுபவங்கள் உலகத்தில் உன்னதமானவை எனவே அனைவரும் இதேபோல் சிறப்பாக சிறக்க வேண்டும் என்பதில்அக்கறையாககட்டுப்பாடுகளைகண்டிப்புடன் சொல்லி, சொல்லி குத்திக்காட்டி சமரசமின்றி அறிவுரைகள் வழங்கி வருவீர். சிதா காச பாஸ்கரம் முதல் குரல் கொடுப்பது கோழியே ஆகும். எனவே அங்கெங்கும் கோழி அழைத்தன காண் என்கிற பாசுர வார்த்தைகள் நம்முடைய அகசிந்தனையில் உள்ள சிதா காச வெண்மையை புலப்படுகிறது. மாதவிப் பந்தல் என்று தவத்தின் மேன்மையை பந்தார் விரலி என்றும் செந்தாமரைக்கை வளையில் ஒலி என்றும் கணவன் மகிழ வழிவகை ஒன்பது நெறிப்படுத்தும் தம்பதி பாவம் உத்திரட்டாதிக்கு மட்டுமே. அதை போகமாய் பெற தம்பதிக்கு மட்டுமே சாத்தியமாகும். இந்த பரம போகமும், மகிழ்ச்சியும் கண்ணனுடன் உள்ள கண்ணியவான்களுக்கு மட்டுமே!*

*பந்தார் விரலி! உன் மைத்துனன் பேர் பாட செந்தாமரைக் கையில் வந்து திறப்பாய் மகிழ்ச்சியின் மாளிகையை. அனுபவங்கள் பலவிதம். மாதவி பந்தல் மேல் பல்கால் குயிலினங்கள், அனைத்தும் அதீதமான, நவாதீதமான, ஒன்பது வகையான குணங்கள் கலந்து மாதவனை திருப்திபடுத்தும் மாதவியாக இருப்பதே*

உத்திராட்டாதி. நப்பின்னாய் நந்த கோபாலன் வழிவந்த கந்தம் கமழும் பரம போகத்தின் அதிபதியாவாள்.

நினது கடையில் அனுபவங்களுக்கே முதலிடம் வந்தெங்கும் கோழி அழைக்கும் பொழுதுகளே சிதாகாச பாஸ்கரமாக, சூரியோதயமாக சித்தி, புத்தி ப்ராவகமாக உலகத்திற்கு வெகுவாக பயன்படும்.

யானை பலம் கொண்ட, யானை அம்சம் கொண்ட விநாயகர் அம்சம் நீ. உனைக்கண்டு ஒன்பது கோள்களும் மண்டியிடும் ஏனென்றால் நீயே குண நவாதீதம். அதாவது ஒன்பது கிரகங்களும் நீயே! நன்றாயினும், அன்றாயினும் ஒன்றை ஒன்பதாக்கும் அதீத அற்புதங்கள் உன்னால் மட்டுமே முடியும். ஓடாத தோள்வலியன் நீ. முன் வைத்த காலை பின் வைக்கமாட்டாய். எந்த சண்டைக்கும் போகமாட்டாய், வந்த சண்டையை ஒன்பது கூறுகளாக குறை கண்டு எதிரிகளை ஒழித்திடுவாய், புகுந்த இடத்தின் பெருமையை, அருமையை மகிழ்ச்சியை குறையாவண்ணம் எண்ணத்-தாலும், சொல்லாலும், செயலாலும் நிறைவேற்றுவாய். உத்திரட்டாதியே வருக. உத்திரட்டாதியே அருள்க!



**மூலமந்திரம் :**

ஓம் சாயிஸ்வராய வித்மஹே
சத்ய தேவாய
உத்ரட்டாதி தீமஹி தன்னோ
சர்வ ப்ரசோதயாத்

| ★ **சாயி ரேவதி** ★ | *அபிராமி அந்தாதி 93,94,95,96* |
|---|---|
|  | *விச்வரூபாய வித்மஹே*<br>*பூஷ்ண தேஹாய தீமஹி*<br>*யோக ரக்ஷாய தீமஹி*<br>*தன்னோ ரைய்யதி ப்ரசோதயாத்*<br><br>*அனேக யோகம் அங்கமெலாம்*<br>*யோகப் பிரவேசம் தங்கம் எலாம்*<br>*விஸ்வரூபம் அனு தின உதயம்*<br>*ரேவதி சொல்லே நமோ நமோ* |
| **யோக விஸ்வரூபம்**<br>*பாதம் 1 : பனை*<br>*பாதம் 2 : தங்கஅரளி*<br>*பாதம் 3 : செஞ்சந்தன*<br>*பாதம் 4 : மஞ்சபலா* | *நித்திய புண்ணியம் உனதாகும்*<br>*நிரந்தரம் உனது செயலாகும்*<br>*நிகரே தமக்கு இல்லையெனும்*<br>*நிச்சய தாரகை நமோ நமோ*<br><br>*ஓம் சிவாய மே நம சிவாய மே*<br>*த்ரயம்பகாய மே சாயி தேவாய ஓம்* |

## பரிபாக வேதன வரோதயானந்த பதபாலனம் பரம யோகம்

*தனிப்பெருங் கருணை நீ! பரிபாக வேதம் நீ!*
*மேலான யோகம் நீ! பக்குவமான ஞானம் நீ!*
*பதபாலனம் பரிபாலனம் நீ! பேரின்ப ஆரம்பம் நீ!*
*அருட்பெருஞ் ஜோதி நீ! அருள் பெறும் ஜோதி நீ!*

*தயவு திரு கோலம் பெற காலத்தினால் மலர்பவளே*
*வாய்மை திரு வேதம் காண தயானந்த சரஸ்வதியே*
*சாந்தி திரு அடக்கம் பெற விட்டுக்கொடுக்கும் வீரநங்கையே*
*அன்புதிரு உருவாக்கும் இறுதி நிலை இன்பமது மங்கையே*

*தவங்கள் பல உண்டு ஞானம் பெற வழி உண்டு*
*சித்துக்கள் பல உண்டு பக்குவம் பெற ரேவதி உண்டு*
*வேதங்கள் பல உண்டு எளிதில் ஞானம் பெற அசோகம் உண்டு*
*சுகபோகம் பலஉண்டு துணிவான செயலாலே எதிரி வீழ்வதுண்டு*

*சட்டத்திட்டங்கள் கட்டிமுட்டி தலைநோகும்*
*பட்டம் பதவிகள் பல இருந்தும் மனம் நோகும்*
*வட்டகட்டங்கள் வழக்கினால் நம்பிக்கை மூடமாகும்*
*நட்டநாட்டங்கள் பலவென்றாலும் சுகமே சோம்பலாகும்*

*கற்பூர நாயகியே கனகவல்லி மனைவியை மதிக்கும் ரேவதி*
*பொற்பூர நாயகியே பூரணவிண்மீன்களை பூட்டி வைக்கும் கோமதி*
*இருபத்தி ஏழு வகைகளுமே வந்து எழுந்து வணங்கும் சந்திரமதி*
*நான் யான் என்று அறிந்து கோல் அறிந்து தொழுகின்ற சாருமதி*

## திருப்பாவை பாசுரம் – 19

*குத்துவிளக்கெரியக் கோட்டுக்கால் கட்டில்மேல்*
*மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேலேறி*
*கொத்தமலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல்*
*வைத்துக் கிடந்த மலர்மார்பா வாய்திறவாய்*
*மைத்தடங் கண்ணினாய் நீ உன் மணாளனை*
*எத்தனை போதும் துயிலெழ வொட்டாய்காண்*
*எத்தனை யேலும் பிரிவாற்ற கில்லாயால்*
*தத்துவ மன்று தகவேலோ ரெம்பாவாய்.*

பதபாலனம் என்கின்ற சொல்லாட்சி திறனை வாய் திறவாய் என்று பாசுரத்தில் குறிக்கப்பட்டுள்ளது. ரேவதியின் சொல் செயலாகும். ரேவதியின் சொல் வேதமாகும். ரேவதியின் சொல் அரசாணையாகும். இந்த சொல்லாட்சி செல்வாக்கு அனைவருக்கும் - கிட்டாது. எனவே இந்த சொல்லாட்சி திறனை

எட்டுமளவுக்கு ரேவதி நக்ஷத்திரக்காரர்கள் கடுமையான பயிற்சியும், உண்மையான உழைப்பையும் திண்மையான அறிவையும் தன்னகத்தே கொண்டவர்களாக விளங்குவார்கள். இவர்கள் கௌரவப்படுத்த படுவார்கள். குத்து விளக்கெரிய அருட்பெருஞ்ஜோதியுடன் கோட்டுக்கால் கட்டில்மேல் தனிப் பெருங்கருணையுடன் கொத்தளர், பூங்குழல், நப்பின்னையுடன் பிரியாமல், பிரியாவரம் பெற்ற இந்த தம்பதியினர் கொண்டிருக்கும் தகவல்களும் தத்துவங்களும், ஏராளம், தாராளம். எனவே இவர்கள் முன்னின்று சென்றால் எங்கு, எப்படி முடிக்க வேண்டுமோ பரிபாக பக்குவத்தில் அதை அங்கு அப்படி முடித்து வைப்பார். உதய இரவாயினும், பகலாயினும் உதய ஆனந்தம் மிகுந்த ரேவதியே வருக.

மைத்தடங் கண்ணியாய்! நீ உன் மணாளனை
எத்தனை போதும் துயிலெழ வொட்டாய் காண்

இந்த பரிபாக வேதக்கலையின் நிபுணத்துவம் வாய்ந்தவர்கள் பரமயோகம் நிறைந்த ரேவதி நக்ஷத்திரக்காரர்களாவர். இந்த ஜீவாத்மா, பரமாத்மா இணைப்பு எத்தனையேலும் பிரிவாற்ற கில்லாயால் தத்துவம் மட்டுமல்ல பரமயோகம் நிறைந்த செயலாக்கம், மற்றும் செயல் திறன் உதயாதி ஆனந்த அலுவல்களில் அடங்கியிருக்கும்.

உதய ஆனந்த பரிபாலனம் என்பது மெத்தென்ற பஞ்சசயனத்தில் கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல் வைத்துக் கிடந்த மலர் மார்பா! வாய்திறந்து பேசுவது அனைத்தும் உலகியல் மகிழ்ச்சிக்கே; ஆண் பெண் உறவிற்கு புருஷோத்தமன்

*ஒருவரே ஆண் மகனாவார் மற்ற அனைவரும் மைத்தடங் கண்ணினாய் என்று செயல்படும் ஆர்வ மிகு பெண்களே, பெண்களே, பெண்களே.*

*எத்தனையேலும் பிரிவாற்ற கில்லாயால் பரமன், புகழ் பாடி, பரமன் அடி தேடி பரமன் துணை தேடி, பரமன் இணை பிணைந்து, பிரியாமல் இருப்பதே மனித தத்துவமாகும். இந்த நிலைப்பாடு ரேவதிக்கு பரமயோகமாக, உடலிலும், உள்ளத்திலும் மச்சங்கள் நிறைந்துள்ளது. ரேவதியே வருக ரேவதியே அருள்க.*



**மூலமந்திரம் :**

நம் – யோ – ஹோ – ரெங் – கே – க்யோ

★ **சாயி** ★

**அபிஜித்**



**யோக**

**விஸ்வரூபம்**

*பாதம் 1 : பனை*

*பாதம் 2 : சாரபருப்பு*

*பாதம் 3 : கருங்காலி*

*பாதம் 4 : வெள்ளெருக்கு*

*அபிராமி அந்தாதி 97,98,99,100*

*ஓம் ப்ரம்மா வித்மஹே*
*சர்வ மேதாவி தீமஹி*
*பரிகதாய தீமஹி*
*தன்னோ அபிஜித் ப்ரசோதயாத்*

*சாதனை புரிவதில் சிறந்தவன் நீ*
*சோதனை களையே களைபவன் நீ*
*பாரினில் அனைத்தையும் சிறப்புடனே*
*பலனாய் மாற்றுவாய் நமோ நமோ*

*சத்தியம் உனக்கு விருப்பாகும்*
*சக்தி பெற்றிட துருப்பாகும்*
*எத்திசை யோரும் புகழ் மணக்கும்*
*ஏந்தல் நீயே நமோ நமோ*

*ஓம் சிவாய மே நம சிவாய மே*
*த்ரயம்பகாய மே சாயி தேவாய ஓம்*

## திருப்பாவை பாசுரம் – 13

*புள்ளின்வாய் கீண்டானைப் பொல்லா அரக்கனைக்*
*கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமை*
*பாடிப்போய்*
*பிள்ளைக ளெல்லாரும் பாவைக் களம்புக்கார்*
*வெள்ளி யெழுந்து வியாழ முறங்கிற்றுப்*
*புள்ளும் சிலம்பினாண் போதரிக் கண்ணினாய்*
*குள்ளக் குளிரக் குடைந்துநீ ராடாதே*
*பள்ளிக் கிடத்தியோ? பாவாய் நீ நன்னாளால்*
*கள்ளம் தவிர்ந்து கலந்தேலோ ரெம்பாவாய்.*

புள்ளின் வாய் கிண்டானைப் பொல்லா அரக்கனைக்கிள்ளிக் களைந்தவன், நக்ஷத்திரமே. அபிஜித். வெள்ளி எழுந்து வியாழன் உறங்கிற்று. இந்த நேரம் தான் அபிஜித் நக்ஷத்திர நேரமாகும். பறவைகளும் இந்த தெய்வீக விடியலை அறிவித்து கூவ தொடங்கி விட்டன. கண்ணனின் தரிசனம் காலத்தினால் கள்ளத்தனமாகவோ அல்லது. நல்லத்தனமாகவோ இந்த அபிஜித் நக்ஷத்திரத்திற்கு தெய்வீக உறவுகள் அடிக்கடி கிட்டும். சாதனைகள் ஆச்சரியத்தக்க அதியசத்தக்க, போக்கியமாக அதிர்ஷ்டமாக இவர்களை வந்தடையும். விடிவெள்ளி முளைத்து விட்டது. எனவே உலகியல் சுகங்கள் அனைத்தும் கிடைத்து விட்டது. அந்த சுகங்களும் அனைத்தும் கிடைத்து விட்டது. அந்த சுகங்களும் சலித்துப் போய் முடிவுக்கு கொண்டு வந்து சுகமான, பரம அனுபவங்களாக மாற்றம் தெரிந்தவர்களே இந்த அபிஜித் நக்ஷ்த்திரதாரர்கள், ஜீவாத்மா, பரமாத்மா(அ) ராதேகிருஷ்ணா(அ) ஆண்டாள் அரங்கன் என்கின்ற கலவை கள்ளம், கபடமின்றி நன்னாட்களில் நடைபெறுவதே அபிஜித்தின் பிரவேசமாகும்.

வெள்ளி எழுந்து வியாழன் உறங்கிற்று இதுவே அபிஜித்தின் பொன்னான நேரமாகும். பத்துத்தலை உடைய ராவணனையும், பறவைத் தலை உடைய பகாசூரனனையும் கிள்ளிக் கொன்ற பெருமானே, இதையே கீர்த்தியாக காட்டப்பட்டுள்ளது.

புள்ளின் வாய் கீண்டானைப் பொல்லா அரக்கனைக்
கிள்ளி களைந்தானைக் கீர்த்திமை பாடிப் போய்.

பறவைகள் மட்டுமே, அதிகாலையில் பகவானை பாடும், அறிவு ஜீவிகளாகும். அவர்களே நிர்வாகம்

*செய்யும். கமலவண்டுக்கண்ணழகி பரமசாத்தியங்களை, அற்புத ஆனந்தங்களை போக்கியமாக அனுபவிக்க இருப்பவர்களே அபிஜித் நக்ஷத்திரக்காரர்கள்.*

*உள்ளத்தில் கள்ளமில்லாமல் பகவானை கடக்க பரிவேத்தியங்களுடன், பரிகதமாக கலப்பவர்களே இந்த சித்தர்களாகும்.*

*குள்ளக் குளிரக் நீரைக் நீராடக்கூடாது குடைந்து நீராடினாலும், கள்ளமில்லாமல் அனைவருக்கும் வாய்ப்பு அளிப்பது இவர்களின் சுபாவமாகும். உள் ஒன்று வைத்து புறம் ஒன்று பேசாமல் பிள்ளைகள் எல்லோரும் பகவானின் பாதக்கமலம் போக வேண்டும். என்ற நல்லெண்ணம் எப்பொழுதும் நிலவுகிறது. எனவே கள்ளத்தனமாக நீ மட்டும் கலக்க நினைக்காமல் அனைவரையும் கலக்க வைத்தாலே அபிஜித் சிறப்பாகும். எனவே அபிஜித் கலவையே வருக. அபிஜித்தின் கலவையே அருள்க !*



**மூலமந்திரம் :**

ஓம் பூர் புவஸ் ஸீவஹ தத் சவிதுர்
வரேண்யம் பர்கோ தேவஸ்ய தீமஹி
தியோ யோனஹ ப்ரசோதயாத்



## நம் - யோ - ஹோ - ரெங் - கே - க்யோ

## திருப்பாவை பாசுரம் – 30

*வங்கக் கடல்கடைந்த மாதவனைக் கேசவனைத்*
*திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்றிறைஞ்சி*
*அங்கப் பறைகொண்டவாற்றை அணிப்புதுவைப்*
*பைங்கமலத் தண்தெரியல் பட்டர்பிரான் கோதைசொன்ன*
*சங்கத் தமிழ்மாலை முப்பதும் தப்பாமே*
*இங்கிப் பரிசுரைப்பா ரீரண்டு மால்வரைத்தோள்*
*செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்*
*எங்கும் திருவருள்பெற்று இன்புறுவ ரெம்பாவாய்.*

*சங்கத் தமிழ் மாலை முப்பது பாடல்களில் 27 நஷ்த்திரங்களும் (+ அபிஜித் உடன்) மற்றும் தொடக்க போற்றி பாடலும் இந்த மங்களப் பாடலும் மக்கள் பண்பை எடுத்துரைக்கின்றன. இதை படிக்க கருத்துக்களை வடிக்க, வடிக்க நமது மனம் துடிக்க, துடிக்க துப்புரவாகும்.*

*திராவிட இந்த 30திருப்பாவை பாக்களை வங்கக் கடல் என கடைய, கடைய மாதவனை, கேசவனை பணிய இயலும். மேலும் பலப்பல பரிசும் எங்கும் திருவருளும் பெற்று இன்புற இயலும் எனவே நாமெல்லாம் பாவையர்கள் தான்.*

*நீராடுதலே தரிசனம் தான். மேலும் நம் இயல் புகளே, சுபாவங்களே, இறைபண்புகளே நக்ஷத்ரம்*

என்றாய்ந்து, அறிந்து, உணர்ந்து நமது வாழ்வியலை அர்த்தம் உள்ள வெற்றியாக கோவிந்தன் பணி மேற்கொள்வோம். இதுவே ஞானக்குளியல்

நாரா + அயணன் = அழியாத வழி என்ற வகையில் நாராயண பயணத்தில் நாமும் நாராயணன் ஆவோம். ஹரி ஓம் நமோ நாராயணா.

பாற்கடல் கடைந்து, அரிதான அமுதமெடுத்த அருளிய கண்ணனை, நிலவொத்த அழகு முக நங்கையர், அணி கூடிய அரிவையர் சென்று வணங்கி, பாவை நோன்புக்கெனப் பறை முதலான பரிசுகள் பெற்ற வரலாற்றை வழங்கினாள். அழகிய வில் லிபுத்தூர் ஆண்டாள்! மாலை சூடிய பெரியாழ்வாரின் திருமகளான இவள் தொடுத்த முப்பது தமிழ்ப் பாசுரங்களையும், அனைத்து நக்ஷத்திரதாரர்களும், அவரவர் நக்ஷத்திரக்குரிய பாடலை தவறாமல் நாளும் ஓதுபவர்கள், மாலை வலி பொருந்திய தோழன், செந்தாமரைக்கண்ணன், செல்வக் கோமான் கோவிந்தன் அருள் பெற்று அளவிலா ஆனந்தமும் அடைவார்.

ஒவ்வொரு ஜீவனும், ஒவ்வொரு நக்ஷத்திரம் என்பதை அறிந்து அந்த நக்ஷத்திரத்திற்குரிய பாடலை படித்து, பாடி, புரிந்து நீவீர் பிறந்த நோக்கத்தை தெரிந்து கொள்ள இயலும். மேலும் அந்த சொந்த பாடலை அசைபோட்டு அலசி ஆராய்ந்து உமது சுபாவத்திற்கேற்ப ஆண்டாள் அனுகிரகத்தில் இலக்கை கண்டு கொள்ளவும். இதைத் தவிர அனுதினமும் உள்ள நக்ஷத்திர நிர்வாகத்திற்கு ஏற்ப குறிப்பிட்ட நக்ஷத்திர பாடலை பாடிப் பரவசமடைந்து பரமானந்தத்தை அடைய வேண்டி ஆண்டாளை பிரார்த்திப்போமாக.

ஸ்ரீஆண்டாள் திருவடிகளே சரணம்

## பொதுவான எதிர்பார்ப்பு

| | | |
|---|---|---|
| அஸ்வினி | : | வாகன யோகம் கை கூட |
| பரணி | : | பணிகளில் தடைகள் நீங்க |
| கிருத்திகை | : | தம்பதியரிடையே புரிதல் மேம்பட |
| ரோகிணி | : | பசிப்பிணி நீங்கிட |
| மிருகசீரிஷம் | : | செவிச் செல்வம், உதவி பெற |
| திருவாதிரை | : | ருத்ரம் படித்து ஊர் நலம் பேண |
| புனர்பூசம் | : | மாணவர்களுக்கு ஞாபக சக்திபெருக |
| பூசம் | : | ஜீவ ஜோதி குருவருள் பெற |
| ஆயில்யம் | : | எதிரிகளை வென்றிட |
| மகம் | : | மந்திரமும், தந்திரமும் வீட்டிற்கு உதவ |
| பூரம் | : | வினோத ஆசைகள் நிறைவேற |
| உத்திரம் | : | திட்டமிட, திறமைமிக, இன்பம் பெற |
| ஹஸ்தம் | : | மனோசக்தி, அறிவாற்றல் பெற |
| சித்திரை | : | பிரம்மாண்ட புரட்சிகள் பொலிவுற |
| சுவாதி | : | அனைத்து தோஷங்கள் நீங்கி, ஆசி கிடைத்திட |
| விசாகம் | : | சுத்தம், சீர்திருத்தம் வெளிப்பட |
| அனுஷம் | : | வியத்தகு இன்பம், கருணை செயலாக |

| | | |
|---|---|---|
| கேட்டை | : | உடல் நலம் பெறவும், உளம் வளம் பெறவும் |
| மூலம் | : | சமூகத்திற்கு உதவிட, பணிவு வர |
| பூராடம் | : | எதிர்பார்ப்பு இல்லாத, உல்லாச அன்பு மேலிட |
| உத்ராடம் | : | தான தர்மம் செய்து, வாரிசு வளர |
| திருவோணம் | : | யாகம் வளர்த்து சக்கரத்தில் ஒற்றுமை கான |
| அவிட்டம் | : | போட்டியில் ஜெயிக்க, திரை கடல் தாண்ட |
| சதயம் | : | குழந்தை பாக்கியம், சிவ சக்தியருள |
| பூரட்டாதி | : | வறுமை நீங்கி, பூரணம் பெற பரிகாரம் |
| உத்திரட்டாதி | : | அயன, சயன, போகம் பலம் பெற |
| ரேவதி | : | அஷ்டலஷ்மி யோகம் வந்தடைய |
| அபிஜித் | : | சாதிக்கவே, சோதனைகள் வெல்ல |

## நட்சத்திர தினத்தில் முத்திரை யோகா

**அஸ்வினி - அஸ்வ முத்திரை**



சுண்டுவிரல் நகம் மீது சுட்டுவிரல் நகம் அதன் மேல் மோதிரவிரல் அதன்மேல் நடுவிரல் நகம் கட்டைவிரல் வான் நோக்கி இருத்தல் வேண்டும்

**பரணி - சிவசக்தி முத்திரை**



இடது உள்ளங்கை மீது வலது கை நான்கு விரல்களை உள் மடித்து கட்டை விரல் வான் நோக்கி வைத்தல்.

**கிருத்திகை - ஆரோக்ய முத்திரை**



சுட்டு விரலை மடித்து சுக்ர மேட்டில் இடுக. கட்டைவிரல் நடுவிரல் மோதிர விரலின் இரண்டாவது கோட்டை தொடுக சுண்டு விரல் நேராக இருக்க

**ரோகிணி - பிரசன்ன முத்திரை**



நான்கு விரல்களை மடித்து நகத்தோடு நகங்கள் உராய்தல் கட்டை விரல் வான் நோக்கி இருக்க

**மிருகசீரிஷம் - மிருகி முத்திரை**



கட்டைவிரல், நடுவிரல், மோதிரவிரல் ஒன்றையொன்று தொட்டு மற்ற இரண்டு விரல்களும் மேல் நோக்கி இருக்க

**திருவாதிரை - பறவை கூடு முத்திரை**



கைவிரல்களை கோர்த்து உள்ளங் கைகளை வெளிக்காட்டி கைகளை நேராக நீட்டிய பின் தோள் மட்டத்தில் வைத்து இரு முக்கோணங்களை உணரவும் - தண்டுவடம் மீது அமையும். உள்ளங்கை வான் நோக்குதல் நலம்.

**புனர்பூசம் - புரண முத்திரை**



கட்டை விரல்களை உள்மடக்கி மற்ற விரல்களால் மூடி அழுத்தம் கொடுத்துஒன்னையொன்றுமுட்டிக் கொள்தல்

**பூசம் - கண்ணொளி முத்திரை**



கட்டை விரலை உள்ளங்கையில் வைத்து நான்கு விரல்களால் மடித்து கண்ணை மூடி கண்ணருகே வைத்து புருவ மத்தியை உணரவும்.

**ஆயில்யம் - உத்ரபோதி முத்திரை**



*கட்டை விரல்கள் மேல்நோக்கியும் சுட்டு விரல்கள் கீழ்நோக்கியும் ஒன்றைஒன்று தொட்டுக்கொண்டும் இருத்தல் மற்ற விரல்கள் கோர்த்து இருத்தல்*

**மகம் - முகுல முத்திரை**



*கட்டை விரல் மற்ற விரல் நுனிகளை தொட்டு கைகள் ஒன்றுக் கொன்று எதிராக வைத்து வயிற்று அருகே இருக்க*

**பூரம் - சரண முத்திரை**



*கட்டை விரல்கள் தொட்டு கொண்டும் மடிந்தும் ஒன்றையொன்று கீழ்நோக்கி தொட்டு கொண்டும் மற்ற விரல்கள் கீழ் நோக்கி தொட்டு கொண்டும் நெஞ்சருகே இருத்தல்*


**உத்ரம் - குருவணக்க முத்திரை**



Reverse it

*இரு கைகளின் சுண்டு விரல்களை ஒட்டி நெஞ்சகத்தில் வணக்கம் செய்யும் போது உள்ளங்கைகள் புறம் நோக்குதல்.*

**ஹஸ்தம் - கதம் கதம் முத்திரை**



நடுவிரல், மோதிரவிரல் மடித்து கட்டை விரலால் அழுத்தி இடது கைமீது வலது கை வைத்து இரு கைகளையும் பூட்டுக

**சித்திரை - கருட முத்திரை**



இடக் கை மீது வலக் கை வைத்து கட்டை விரல்கள் ஒன்றையொன்று பின்னிக் கொண்டு இருத்தல்

**சுவாதி - ஆதி முத்திரை**



பெருவிரல் சுண்டு விரலை தொட்டு உள்ளங்கையில் புதைக்க மற்ற விரல்களை மறைக்க

**விசாகம் - வீரிய முத்திரை**



இடது வலது கைவிரல்கள் ஒன்றையொன்று உள் மடித்து தொட்டு கொண்டு இருக்க கட்டைவிரல் இரண்டும் வால் நோக்கி இருக்க

**அனுஷம் - க்சேபன முத்திரை**



*கைகளை லிங்கம் போல் குவித்து நடுவே இடைவெளியுடன் சுட்டு விரல் ஒன்றையொன்று தொட்டு கட்டை விரல் ஒன்றின் மீது ஒன்று பெருக்கல் குறியாக*

**கேட்டை - வஜ்ர முத்திரை**



*வஜ்ராசனத்தில் அமர்ந்து கட்டை விரலால் நடுவிரல் நகத்தை தொடவும் சுட்டு விரல் மட்டும் நேராக இருக்க*

**மூலம் - பிரித்திவி முத்திரை**



*கட்டை விரல் மோதிரவிரல் வட்டமிட்டு தொட்டு மற்ற விரல் நேராக பிரிந்து இருக்க*

**பூராடம் - சூரிய முத்திரை**



*மோதிர விரல் மடித்து உள்ளங்கையை தொடு; கட்டை விரலால் 2வது அங்குஸ்தியை அழுத்தவும்*

**உத்ராடம் - மகா முத்திரை**



இரு கைகளால் கால் விரல்களை மாறி மாறி படத்தில் கண்டவாறு பிடிக்கவும்

**திருவோணம் - ஹயக்ரீவர் முத்திரை**



நடுவிரல் ஒன்றையொன்று தொட்டு வானம் நோக்கி இருக்க மற்ற விரல் உள்மடித்து இருக்க

**அவிட்டம் - சங்கு முத்திரை**



இடது கட்டைவிரல் வலது கையில் வைத்து நான்கு விரல்களால் சுட்டி வளைத்து வலது கட்ட விரலை தொடும்

**சதயம் - ஆத்ம அஞ்சலி முத்திரை**




குழிவான வணக்கம் நெஞ்சத்தின் அருகில். ஐந்து விரல்களிலும் சம அளவில் அழுத்தம் இருக்க வேண்டும்

**பூரட்டாதி - மகா சேக்ரல் முத்திரை**



கட்டை விரல்கள் சுண்டு விரல்கள் நான்கும் தொட்டுக் கொண்டும், மோதிர விரல்கள் தனியே தொட்டுக் கொண்டும் மற்ற விரல்கள் வான் நோக்கி இருத்தல்

**உத்ரட்டாதி - குபேர முத்திரை**



கட்டை விரல், சுட்டு விரல் நடு விரல் ஒன்றையொன்று தொட்டுக் கொண்டு இருத்தல். மற்ற இரு விரல்கள் உள்ளங்கையில் மடித்து அழுத்தம் தருதல்

**ரேவதி - சமுத்திர முத்திரை**



சுண்டு விரலை மடித்து கட்டை விரலால் அழுத்தம் கொடுக்கவும். இடது கை மூன்று விரல்கள் மீது வலது கை மூன்று விரல்களை வைத்து அழுத்தம் தரவும்

**அபிஜித் - ஹாகினி முத்திரை**



இடது கை ஐந்து விரல் நுனிகள் வலது கை ஐந்து விரல் நுனிகளை தொட்டுக் கொண்டு இருத்தல். தொப்புள் அருகே வைத்திருக்கவும்

# மூலமந்திரங்கள்

| | | |
|---|---|---|
| அஸ்வினி | : | ஞானானந்தமயம் தேவம் நிர்மல ஸ்படிகாக்ருதம் ஆதாரம் ஸர்வ வித்யானாம் ஹயக்ரீவர் உபாஸ்மஹே |
| பரணி | : | ஓம்.. ஹ்ரோம்.. ஜூம்.. ச: |
| கிருத்திகை | : | ஆம், இம், ஹூம், ஹ்ரூம், க்லூம், ஐம் |
| ரோகிணி | : | கிலிங் - கிருஷ்ண - கிலிங் |
| மிருக சீரிஷம் | : | ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் ஐம் மகாலக்ஷ்ம்யை கமல தாரிண்யை ஸிம்ஹ வாஹின்யை நம: |
| திருவாதிரை | : | ஓம் நமசிவய சிவயநம |
| புனர் பூசம் | : | ராமராம ராமராம ராமராம ராம் ராமராம ராமராம ராமராம ராம் |
| பூசம் | : | அருட்பெருஞ்ஜோதி... அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை... அருட்பெருஞ்ஜோதி |
| ஆயில்யம் | : | ஏஹி ஸர்ப்ப மஹாபாக பிம்மேஸ்மின் ஸன்னிதம் குரு பூஜார்த்தம் தவாமஹம் பக்த்யா ப்ரார்த்தயாமி ஸமாஹித! |
| மகம் } | : | ஓம், ஐம், ஹ்ரீம், ஸ்ரீம், க்லிம், சௌம் ஆதி பராசக்தயே நமஹ |
| பூரம் } | | |
| பூரம் உத்திரம் | : | ப்ரஸீத விஸ்வேஸ்வரி விஸ்வ ப்ரஸீத ப்ரஸீத விஸ்வேஸ்வரி வேதரூபிணி ப்ரஸீத விஸ்வேஸ்வரி மந்த்ர விக்ரஹ ப்ரஸீத விஸ்வேஸ்வரி விஸ்வ ப்ரஸீத |
| ஹஸ்தம் | : | ஓம் கணபதயே நமஹ |
| சித்திரை | : | கருடம், வரதம், தேவம் ஸ்ரீ விஷ்ணு ப்ரிய |

வாஹனம் ஸர்ப்பாதி விஷ ஹார்த்தாரம், ஸரஸாத்வாம் நமாம் யஹம்

சுவாதி : ஹரி ஓம் நமோ நாராயணா

விசாகம் : ஓம் சரஹணபவ நம:

அனுஷம் : அக்ஷயம், பரமம், பத்மம், ஜோதி ரூபம் ஜெனார்த்தனம்

கேட்டை : யானி, கானி சபாபானி ஜன்மாந்த்ர க்ருதானி ச தானி, தானி ப்ரணஸ்யந்தி ப்ரதக்ஷிண பதே பதே.

மூலம் : ராமராம ராமராம ராமராம ராம்
ராமராம ராமராம ராமராம ராம்

பூராடம் } உத்ராடம் } : ஓம் சாயி ராமாய வித்மஹே ஆத்மராமாய தீமஹி தன்னோ பாபா ப்ரசோதயாத்

திருவோணம் : ஓம் நமோ வெங்கடேசாய நமஹ

அவிட்டம் : ஓம், ஐம், க்லீம் ஸௌஹ¬ வத வத வாக்வாதிணி ஸ்வாஹா

சதயம் : ஓம் அஸ்வத்வஜாய வித்மஹே
பாஸ ஹஸ்தாய தீமஹி
தன்னே ஸ¬ர்யஃப் ப்ரசோதயாத்

பூரட்டாதி } உத்ரட்டாதி } : ஓம் சாயிஸ்வராய வித்மஹே சத்ய தேவாய தீமஹி தன்னோ சர்வ ப்ரசோதயாத்

ரேவதி : நம் - யோ - ஹோ - ரெங் - கே - க்யோ

அபிஜித் : ஓம் பூர் புவஸ் ஸ¬வஹ தத் சவிதுர்
வரேண்யம் பர்கோ தேவஸ்ய தீமஹி
தியோ யோனஹ ப்ரசோதயாத்

**ஓம்.. சாந்தி.. சாந்தி.. சாந்தி.. ஹி:**

| நட்சத்திரம் | பாதம் 1 | பாதம் 2 | பாதம் 3 | பாதம் 4 |
|---|---|---|---|---|
| அஸ்வினி | கனகாங்கி | ரத்னாங்கி | ரத்னாங்கி | கான மூர்த்தி |
| பரணி | வானஸ்பதி | வானஸ்பதி | மானாவதி | தனரூபி |
| கார்த்திகை | தனரூபி | சேனாவதி | ஹனும தோடி | ஹனும தோடி |
| ரோகிணி | தேனுகா | நாடகப்பிரியா | நாடகப்பிரியா | கோகில பிரியா |
| மிருக சிருஷம் | ரூபாவதி | ரூபாவதி | காயகப்பிரியா | வகுளா பரணம் |
| திருவாதிரை | வகுளா பரணம் | மாயமாலவகௌளா | சக்ரவாகம் | சக்ரவாகம் |
| புனர்பூசம் | சூர்ய காந்தம் | ஹதகாம்பரி | ஹதகாம்பரி | ஜங்காரத்வனி |
| பூசம் | ஜங்காரத்வனி | நட்ட பைரவி | கீரவாணி | கரகர பிரியா |
| ஆயில்யம் | கரகர பிரியா | கௌரிமனோகரி | வருண பிரியா | வருண பிரியா |
| மகம் | மரரஞ்சனி | சாருகேசி | சாருகேசி | சரசாங்கி |
| பூரம் | ஹரிகாம் போதி | ஹரிகாம் போதி | தீரசங்கரா பரணம் | நாகநந்தினி |
| உத்திரம் | நாகநந்தினி | யாக பிரியா | ராக வர்த்தினி | ராக வர்த்தினி |
| ஹஸ்தம் | கங்கேய பூஷணி | வாகதீஸ்வரி | வாக தீஸ்வரி | சூலினி |
| சித்திரை | சலநடா | சலநடா | சாலகம் | ஜாலர்நவம் |
| சுவாதி | ஜாலர்நவம் | ஜால வராலி | நவநீதம் | நவநீதம் |

| | | | | |
|---|---|---|---|---|
| விசாகம் | பாவனி | ரகுபிரியா | ரகுபிரியா | காவம் போதி |
| அனுஷம் | பாவ பிரியா | பாவ பிரியா | சுபபந்து வராளி | ஷாத்விதமர்கினி |
| கேட்டை | ஷாத்விதமர்கினி | சுபர்னாங்கி | திவ்யா மணி | திவ்யா மணி |
| மூலம் | தவலம் பரி | நாம நாராயணி | நாம நாராயணி | காம வர்த்தினி |
| பூராடம் | ராம பிரியா | ராம பிரியா | காமனஸ்ரமா | விஸ்வம்பரி |
| உத்ராடம் | விஸ்வம் பாரி | சியாமளாங்கி | சண்முகபிரியா | சண்முகபிரியா |
| திருவோணம் | சிம்மேந் ரமத்யமாம் | ஹேமாவதி | ஹேமாவதி | தர்மாவதி |
| அவிட்டம் | நீதிமதி | நீதிமதி | காந்தா மணி | ரிஷப பிரியா |
| சதயம் | ரிஷப பிரியா | லதாங்கி | வச்சஸ்பதி | வச்சஸ்பதி |
| பூரட்டாதி | மேஷகல்யாணி | சித்ராம்பரி | சித்ராம்பரி | சுசரித்ரா |
| உத்ரட்டாதி | ஜோதி ஸ்வரூபணி | ஜோதி ஸ்வரூபணி | தாடு வர்த்தினி | நாசிக பூஷணி |
| அஜிபித் | நாசிக பூசணி | கோசலம் | ரசிக பிரியா | ரசிக பிரியா |